# வக்பு சொத்து:

மோசடியில் பெரிய பள்ளிவாசல் 10



## இடியப்பச் சிக்கலில் அரசாங்கம் மீள்வதற்கான மார்க்கம் என்ன? 05

காத்தான்குடிப் படுகொலை: இனவாதம் ஒழிவதாக! 03




# மீள்பார்வை

මීල්පාර්වෛ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/75/NEWS/2017 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 374 • 04 ஓகஸ்ட் 2017 வெள்ளிக்கிழமை • துல் கஃதா 1438 • விலை 40.00



RI MOBILE
Wholesale Dealers in Mobile Phone Accessories
077-3050949
077-4843323
Tel: 011-2439470
151/11, Mumbai Plaza, 2nd Cross Street, Colombo - 11
Branch: 159/21, Green Arcade, Main Street, Colombo - 11
தேவையான பொருட்களை இருக்குமிடத்தில் இருந்தே மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள
அழையுங்கள் 0777 777 761
0777 674 941


# மு.கா.வின் தாருஸ் ஸலாம் அபகரிப்பு

## ஆவணங்களுடன் உறுதிப்படுத்தத் தயார் - அசாத் சாலி



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுக்கென அதன் மறைந்த தலைவர் அஷ்ரபினால் ஒதுக்கப்பட்ட கொழும்பு 02, வொக்ஷெல் வீதி, இல.53 இல் அமைந்துள்ள 08 மாடிக் கட்டம் தனியொருவரின் சொத்தாக மாறியிருப்பதாக தேசிய ஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் அசாத் சாலி தெரிவித்தார்.

தற்போது கிழக்கு மாகாண முதலமைச்சராக உள்ள ஹாபிஸ் நஸீர் அஹமத் இந்தச் சொத்துக்களை அனுபவித்து வருவதாகவும், இது தொடர்பான ஆவணங்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவர் மீள்பார்வைக்குத் தெரிவித்தார். இந்த ஆவணங்கள் பல இடங்களில் திருத்தப்பட்டும் மாற்றப்பட்டும் அலங் கோலமாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முஸ்லிம்களுக்கென உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடைய நீண்ட கால இருப்பைக் கருத்திற் கொண்டு தலைவர் அஷ்ரப் லோட்டஸ் நம்பிக்கை நிதியத்தையும் யுனிட்டி பில்டர்ஸ் (தனியாள்) (பக்.13)

## அரசாங்கத்தின் மேலும் சில சொத்துக்கள் விற்பனைக்கு

அம்பாந்தோட்டை துறைமுகம் 99 வருட குத்தகை அடிப்படையில் சீனாவுக்கு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து மேலும் இரு நிறுவனங்களின் அரசாங்கத்துக்குரிய பங்கை விற்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கொழும்பில் உள்ள ஹில்டன் மற்றும் க்ரான்ட் ஹயாட் ஹோட்டல்களில் அரசுக்குரிய உரிமையை விற்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து இதற்கான ஏற்பாடு கள் நடைபெற்று வருகின்றன.

அரசுக்குச் முழுமையாகச் சொந்தமான ஹொட்டேல் டெவலபர்ஸ் (தனியாள்) நிறுவனத்தினூடாக ஹில்டன் ஹோட்டல் பரிபாலிக்கப்படுகிறது. (பக்.14)

## ரணிலின் ஐதேக.வுக்கு போட்டியாக கட்சியமைக்கிறார் மைத்திரி



ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தென்மாகாண சபை உறுப்பினர் சட்டத்தரணி மைத்திரி குணரத்னவை பொதுச் செயலாளராகக் கொண்ட ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி ஓர் அரசியல் கட்சியாக அண்மையில் பதிவு செய்யப்பட்டதைத் தொடர்ந்து தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

ஜனநாயக நாடாக இருந்தாலும் எமது நாட்டின் அநேகமான கட்சிகள் கொள்கை வகுக்கும் போது மக்களின் கருத்தை கருத்தில் எடுப்பதில்லை எனவும், ஒரு சிலரால் வகுக்கப்படும் கொள்கைகளே மக்களுக்குத் திணிக்கப்படுவதாகவும், மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கி 2025 வரை அமுலாக்கக் கூடிய அர்த்தமுள்ள கொள்கை வகுப்பில் தாம் ஈடுபட்டிருப்பதாகவும் மைத்திரி குணரத்ன தெரிவித்தார். (பக்.13)

## பிரதமரின் கொண்டாட்டத்தை மீள்பரிசீலனை செய்க



பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் 40 வருட அரசியல் வாழ்க்கையை கொண்டாடும் வகையில் பல நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்யுமாறு உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் மாவட்டச் செயலாளர்களுக்கு ஜூலை 27 ஆம் திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தை மீள்பரிசீலனை செய்யுமாறு ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் நிறுவனம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

1300 போதி பூஜைகள், 1000 பிக்குமாருக்கு தானம் வழங்கல், கோவில்கள், பள்ளிவாசல்கள், தேவாலயங்களில் வழிபாட்டு நிகழ்ச்சிகள் என பல விடயங்கள் இந்த சுற்றுநிருபத்தில் அடங்குகின்றன. இதற்கு ஏராளமான வளங்கள் செலவிடப்பட வேண்டியிருக்கிறது. மக்களுக்குச் சேவை செய்ய வேண்டிய பிரதேச செயலாளர்களுக்கும் பிரதேச செயலகங்களுக்கும் இது ஒரு சுமையாகும் என ட்ரான்ஸ்பரன்ஸி இன்டர்நஷனல் தெரிவித்துள்ளது.

## ஒரே தினத்தில் மாகாண சபைத் தேர்தல் சட்டம் பாராளுமன்றத்துக்கு வருகிறது



மூன்று மாகாணங்களின் மாகாண சபைத் தேர்தல் செப்டம்பர் மாதத்தில் நடக்கவிருந்த நிலையில், 09 மாகாண சபைகளதும் தேர்தலை ஏக காலத்தில் நடத்துவதற்கு எடுத்த தீர்மானம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

இதற்கான சட்டத் திருத்தங்கள் அடங்கிய இறுதி வரைபு தயாரிக் கப்பட்டுள்ளது. இந்த சட்டவரைபு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தன் பின்னர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துக்காக முன்வைக்கப்படும்.

அனைத்து மாகாண சபைகளினதும் தேர்தலை ஏக காலத்தில் நடத்துவதற்கென அரசியலமைப்பின் 1988 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டியுள்ளது.

புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட்டு வரும் நிலையில் அரசியலமைப்பில் இந்தத் திருத்தத்தை கொண்டுவருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இஸ்ரேலுக்குத் தொழிலுக்குச் சென்ற 200 பேர் மாயம்




தென் கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளில் இலங்கையர்களுக்கு வழங்கப்படும் தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென் கொரியா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகளுக்கு தொழில் வாய்ப்புக்களை பெற்று செல்லும் இலங்கையர்கள், அந்த தொழில் ஸ்தலங்களில் இருந்து தப்பிச்சென்று வேறு இடங்களில் சட்ட விரோதமாக பணியாற்றுவதன் காரணமாக (பக்.14)

## சிங்கப்பூர் ஜனாதிபதியாக ஹலீமா யாகூப்?



சிங்கப்பூரின் தற்போதைய ஜனாதிபதி டோனி டான் கெங்யாமின் பதவிக் காலம் இம்மாத இறுதியில் நிறைவடைவதை அடுத்து, அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தலில் ஹலீமா யாகூப் (62) போட்டியிட வேண்டும் என்று சில மூத்த தலைவர்கள் கூறி வருகின்றனர்.

நான்கு முறை எம்.பி.யாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஹலீமா யாகூப், தற்போது சிங்கப்பூர் நாடாளுமன்ற அவைத் தலைவராக உள்ளார். இப்பதவியை ஏற்பதற்கு அவரது இந்திய வம்சாவளி தடையாக இருக்குமா என்ற சர்ச்சை தற்போது எழுந்துள்ளது. (பக்.10)


NCH New City Hardware
உங்களுக்குத் தேவையான தரமான உபகரணங்களுக்கு நாடுங்கள்
58, Messeger Street, Colombo - 12
Tel: 011-43777931, 011-5830188, 011-4377934
Fax: 011-2334671 Email: newcity@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்முனை சர்ச்சையை தோற்றிய ஹஸ்ரத்தின் 'நீங்களும் மருத்துவராகலாம்' விளம்பரம்

- டில்ஷான் முஹம்மத்

SAITM இல் இருந்து வெளியாகும் மருத்துவர்களின் தகமை போதாது என்று மருத்துவர்களும் மருத்துவ மாணவர்களும் மாதக் கணக்கில் போராட்டம் செய்துவரும் நிலையிலும் சைட்டம் பிரச்சினை இன்று அரசாங்கத்திற்கு தலையிடியாகவும் மக்களுக்கு இடையிலான பெரும் பேசுபொருளாகவும் மாறியிருக்கின்ற நிலையில் 'நீங்களும் மருத்துவராகலாம்' என ஒரு விளம்பரத்தை வட்ஸ்அப்பிலும், பேஸ்புக்கிலும் கண்டு ஒரு கணம் ஆடிப் போனேன்!!

ரோம் பற்றி எரியும் போது பிடில் வாசித்த நீரோ மன்னனைப் போல, இந்த நாட்டில் எந்தத் துறையை பற்றி மக்கள் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற எந்தக் கரிசனையுமின்றி மிக இலகுவாக ''க.பொ.த. உயர்தரம் ( G.C.E.A/L ) சித்தியடைந்தால், நீங்களும் மருத்துவராகலாம்'' என்று ஆரம்பித்து ''சமூகத்தை நோயிலிருந்து பாதுகாத்திட உண்மையின் பக்கம் விரைந்திடுங்கள்'' என்று ஆள் சேர்ப்பதற்கு முட்டாள்தனமான தைரியம் தோன்றியிருக்கின்றதா?

வேடிக்கை என்னவென்றால், சில காலத்திற்கு முன்னர் ஆபரேஷன் (சத்திர சிகிச்சை) ஹராம் என்று ஒரு போடு போட்டு பின்வாங்கிய அதே பின்னூரியின் தலைமையில்தான் இந்தக் கற்கை நெறி நடக்கப் போகுதாம்!!

எங்கே போய் தலையை முட்டிக்கொள்வது என்று புரியவில்லை.

ஹஸ்ரத் பின்னூரி அவர்களே!! உங்களிடம் தயவாக வேண்டிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான்!! ஏற்கனேவே நொந்து நூடில்ஸாகி இருக்கும் எமது சமூகப் பிரச்சினைகளுக்குள் நீங்கள் ஏன் அடிக்கடி பீதியை கிளப்பிக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுக்கு பயான் கொடுக்கப்பட்டால் அதில் நீங்கள் மஹ்சரை பற்றிப் பேசுங்கள். மறுமையை பற்றிப் பேசுங்கள். ஆனால் தயவுசெய்து நீங்கள் முறையாகக் கற்காத உங்களுக்கு எந்த சம்பந்தமும் இல்லாத மருத்துவத்தைப் பற்றி மட்டும் பேசாதீர்கள் ஹஸ்ரத்!! மருத்துவத் துறையை மருத்துவர்கள் பார்த்துக் கொள்வார்கள்.




- அன்பு ஜஹவர்ஷா

| Pension Calculation | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| Salary | Service | Percentage | | Monthly Pension | | Pension Gratuity | | |
| | | Reduced | Un Reduced | Reduced | Un Reduced | Un Reduced | Months | Total Gratuity |
| 26,100.00 | 10 Years | 39% | 49% | 10,179.00 | 12,789.00 | 12,789.00 | X24 | 306,936.00 |
| 26,100.00 | 15 Years | 49% | 59% | 12,789.00 | 15,399.00 | 15,399.00 | X24 | 369,576.00 |
| 26,100.00 | 20 Years | 59% | 69% | 15,399.00 | 18,009.00 | 18,009.00 | X24 | 432,216.00 |
| 26,100.00 | 25 Years | 69% | 79% | 18,009.00 | 20,619.00 | 20,619.00 | X24 | 494,856.00 |
| 26,100.00 | 30 Years | 79% | 89% | 20,619.00 | 23,229.00 | 23,229.00 | X24 | 557,496.00 |
| 26,100.00 | 35 Years | 79% | 89% | 20,619.00 | 23,229.00 | 23,229.00 | X24 | 557,496.00 |

Compiled by Anbu Javaharsha

## ஓய்வூதியக் கணக்கீடு

ஓய்வூதியம் சேவைக்காலத்தையும், இறுதியாக எடுக்கும் சம்பளத்தையும் கொண்டே கணக்கிடப்படும். ஓய்வு பெறும்போது ரூபா. 26,100 சம்பளம் எடுக்கும் ஒருவரின் சேவைக்காலம் 10,15,20,25, 30,35 வருடங்களாக இருந்தால் எப்படி 2017ஆம் ஆண்டு கணிப்பின்படி ஓய்வூதியமும், பணிக்கொடையும் கிடைக்கும் என்பதை இந்த அட்டவணை மூலம் காட்டி உள்ளேன்.

30 வருடங்களுக்கு பின்னர் எவ்வளவு சேவை செய்தாலும் ஓய்வூதிய வீதம் அதிகரிக்காது. ஓய்வு பெற்று பத்து வருடங்களின் பின்னர் குறைக்கப்படாத (Un Reduced) ஓய்வூதியம் கிடைக்கும். ஆண்கள் 20 வருட சேவையின் பின்னர் ஓய்வு பெற அனுமதி இருந்தாலும் ஓய்வூதியம் 55 வயதான பின்னரே கிடைக்கும்.

- உமர் பாரூக்

Data வீணாக போகுதே என கவலைப்படுபவர்கள் Time வீணாக போகுதே என கவலைப்படுவதில்லை....

## டெங்கு

-முர்ஸலீன் மூஸா

ஆறிரெண்டு மாதமும்
ஆறு தண்ணி இன்றியே
அந்த முட்டை வாழுமாம்
வீழும் மழை கண்டதும்
வீட்டிருக்கும் நீரினில்
மீண்டும் வட்டம் தொடங்குமாம்
வீசிவிட்ட பேணியில்
விட்டுவிட்ட சிரட்டையில்
ஒட்டிக் கிடந்த முட்டைகள்
ஒடுங்கிச் சேரும் நீரினில்
ஓங்கி வளர பார்க்குமாம்
நீர் சேரும் பொருட்களை
நீக்கிவிட்டு வீதியில்
நித்தம் சுத்தம் பேணினால்
நுளம்புமில்லை நோயுமில்லை
நொந்து போக தேவையில்லை

## காத்தான்குடியில் பாரம்பரிய உணவு கண்காட்சி



மட்டக்களப்பு மாவட்ட விவசாய திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய அரிசி உணவுகளின் கண்காட்சி புதிய காத்தான்குடி கிழக்கு பல நோக்கு மண்டபத்தில் நடைபெற்றது. இந்த வைபவத்தில் கிராம உத்தியோகத்தர் எம்.எம்.றஊப் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.சுல்பிகார் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.எம்.அப்துல்லாஹ் மற்றும் விவசாய திணைக்களத்தின் உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர். இந்த பாரம்பரிய அரிசி உணவுகளின் கண்காட்சியில் அரிசி மாவினால் செய்யப்பட்ட 42 வகையான உணவுகள் வைக்கப்பட்டிருந்ததுடன் விற்பனையும் இடம்பெற்றது.

## ஏன் இந்த இடைவெளி?

- சிராஜுல் ஹஸன்

இந்தியாவின், தமிழ்நாட்டில் முஸ்லிம் சமுதாயத்தில் ஒரு விநோதமான சூழல் நிலவுகிறது.

வெகுஜன மக்களிடையே மிகுந்த புகழ்பெற்ற இஸ்லாமிய ஆளுமைகள் அனைவருமே-

» கவி கா.மு. ஷெரீப் (தொடக்க காலம்)
» நீதியரசர் இஸ்மாயீல் சாஹிப்
» மணவை முஸ்தபா
» தோப்பில் முகம்மது மீரான்
» ஏ.பி.ஜெ. அப்துல் கலாம்
» கவிஞர் இன்குலாப்
» கவிக்கோ அப்துல் ரகுமான்
» கவிஞர் மேத்தா
» கவிஞர் மனுஷ்யபுத்திரன்
» இசையறிஞர் ந. மம்மது

இன்னும் சிலரும்கூட இருக்கலாம்-

இவர்கள் அனைவருமே முஸ்லிம் சமுதாயத்திலிருந்து ஓரடி தள்ளியே நின்றார்கள்... நிற்கிறார்கள்....

சமுதாயமும் இவர்களை ஓரடி தள்ளியே வைத்திருக்கிறது. ஏன் இந்த இடைவெளி?

குறிப்பு:- இலங்கையிலும் இதே நிலை?.

## நீதிபதி இளஞ்செழியனின் மெய்ப்பாதுகாவலருக்கு அனுதாபம் தெரிவித்த யாழ் முஸ்லிம்கள்




யாழ். ஐந்து சந்தியில் பழைய இரும்பு வியாபாரிகள் ஏற்பாட்டில் உயிரிழந்த யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் மெய்ப்பாதுகாவலருக்கு அனுதாபம் தெரிவித்து நிகழ்வு ஒன்று இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்வானது பழைய இரும்பு வியாபாரிகள் சார்பாக சமூக சேவகர் கே.எம். நிலாம் தலைமையில் கடந்த ஜூலை இறுதிப் பகுதியில் நடைபெற்றது.

இதன் போது உயிரிழந்த நீதிபதியின் மெய்பாதுகாவலரான உப பொலிஸ் பரிசோதகர், உண்மையான செயல்வீரன் என்றும் யாழ் முஸ்லீம் மக்களுடன் இறக்கும் வரை உறவாடி வந்துள்ளதாகவும் எனவே அந்த பொலிஸ் அதிகாரியின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனு தாபத்தை தெரிவித்துக்கொள்வதாக சமூக சேவகர் கே.எம் நிலாம் குறிப்பிட்டார்.

-பாறுக் ஷிஹான்-

## யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பள்ளிவாசலை புனரமைப்பதற்காக நிதி ஒதுக்கீடு



யுத்தத்தால் பாதிக்கப்பட்ட கிண்ணியா - துறையடி தக்கியத்துன் நூர் பள்ளிவாசலை புனரமைப்பதற்காக 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. புனர்வாழ்வு மற்றும் மீள் குடியேற்ற அமைச்சால் யுத்த காலத்தில் சேதமடைந்த மத ஸ்தலங்களுக்கு நஷ்டஈடு வழங்குகின்ற வேலைத்திட்டத்திற்கு அமைய குறித்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக இரண்டரை லட்சம் ரூபாவிற்கான காசோலை இராஜாங்க அமைச்சர் ஹிஸ்புல்லாஹ்வினால், கிண்ணியா - துறையடி தக்கியத்துன் நூர் பள்ளிவாசல் தலைவர் ஏ.ஜி.எம். ஜிஹாதிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

## மேன்முறையீட்டுக்கான காலம் நீடிக்கப்பட்ட மத்திய மாகாண ஆசிரியர் நியமனம்

மத்திய மாகாணத்தில் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெற்று கடமையை பொறுப்பேற்காத ஆசிரிய/ஆசிரியைகள் மேன்முறையீடு செய்வதற்கான கால எல்லை எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

மத்திய மாகாண ஆளுநர் நிலூக ஏக்கநாயக்கவுடன் நடாத்திய சந்திப்பின் போது இணக்கம் காணப்பட்டுள்ளதாக மத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

மாகாண சபை உறுப்பினர்களான ஹிதாயத் சத்தார், லாபிர் ஹாஜியார், இப்ராஹிம் ஹாஜியார், தபால் மற்றும் முஸ்லீம் கலாச்சார அமைச்சர் ஹலீமின் செயலாளர்கள் எம்.பாயிஸ், எம். பாரூக் ஆகியோர் மத்திய மாகாண ஆளுனருடன் இந்த விவகாரம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர்.



எனவே, மேன்முறையீடுகளை செய்ய விரும்புபவர்கள் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 10 ஆம் திகதிக்கு முன்னர் தமது மேன்முறையீடுகளை, கீழ்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

முகவரி: Secretary,
Central Province Education Ministry,
Provincial Council Complex, Pallekela.

இது தொடர்பான மேலதிக விபரங்களை பெற கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களை தொடர்பு கொள்ளுமாறு அமைச்சர் ஹலீமின் ஊடக செயலாளர் ரஷி ஹாஷிம் தெரிவித்தார்.

தொலைபேசி இலக்கங்கள்: 0773163150, 0772226042, 07760436766, 0772277517, 0772649690, 0757038874, 0750566767.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

• நேசன்

# இறக்குமதிகள் ஜாக்கிரதை

ஐஎஸ் இயக்கத்தின் தலைவர் பக்தாதி கொல்லப்பட்டதாகச் செய்திகள் வெளியானதிலிருந்து இலங்கையிலும் ஐஎஸ் தொடர்பான ஆரவாரங்கள் குறைந்து போயுள்ளன. எதிரியொன்றை உருவாக்கும் நோக்கில் செயற்படுகின்ற உள்நாட்டுச் சக்திகள் இத்துடன் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. நல்லாட்சியின் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்கவும் விஜேதாஸ ராஜபக்ஷவும் இந்த விடயத்தில் ஓய்ந்து போயிருக்கிறார்கள்.

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் தமிழ் எதிரி உருவாக்கம் மஹிந்த ராஜபக்ஷவுடைய காலம் வரை அரசாங்கங்களை கொண்டு செல்வதற்கு கால்கோளாக அமைந்தது. 2009 இல் தமிழர்கள் போராட்டத்தில் தோற்கடிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசாங்கத்தை தொடர்ந்து நடத்திச் செல்வதற்கான எதிரி உருவாக்கச் செயற்பாடுகள் மீளவும் முன்னடுக்கப்பட்டு வருவதை காணக் கூடியதாக உள்ளது.

உலக அரங்கில் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷுடைய காலப்பிரிவு முடியும் வரை அல் கைதா இயக்கம் எதிரியின் பாத்திரத்தை வகித்தது. 2009 இல் பராக் ஒபாமா ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் 2011 இல் அல்கைதாவின் தலைவர் ஒஸாமா பின் லாடன் கதை முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது. தொடர்ந்தும் ஐமன் ஸவாஹிரி தலைமையில் அல்கைதா ஓட்டப்பட்டாலும் ஜோர்ஜ் W. புஷ் உடைய காலத்து பின்லாதினின் அல்கைதா போல அது வீரியமாக இயங்கவில்லை.

இந்தக் காலப்பிரிவில் தான் 2013 மார்ச் மாதத்தில் அப்போதைய சக்தி, வலுவூட்டல் அமைச்சர் சம்பிக்க ரணவக்க அல்ஜிஹாத் அல்கைதா என்ற புத்தகத்தை இலங்கையில் வெளியிட்டு வைத்தார். அல்கைதா பற்றி சிங்களத்தில் அறிமுகப்படுத்துகின்ற முதல் நூலாக இது இருந்தது. இந்தப் புத்தகத்தின் ஊடாக இலங்கையில் இருப்பதாகச் சொல்லப்படும் அடிப்படைவாதத்தை அல்கைதாவுடன் முடிச்சுப் போடுவதற்கு அவர் முனைந்தார்.





ஆனால் அதற்குள்ளாக அல்கைதாவின் குழுக்களில் உள்ளடங்கியிருந்த ஐ.எஸ்.ஐ.எல். (ISIL), குராஸான் போன்ற பிரிவுகளில் ஐ.எஸ்.ஐ.எல். இயக்கத்தின் கை ஒபாமாவுடைய காலத்தில் ஓங்கத் தொடங்கியது. 2014 ஆம் ஆண்டு அது ஊதிப் பெருப்பிக்கப்பட்டது முதல் இன்றுவரை உலகின் எதிரியாக ஐஎஸ் என்ற பெயர் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த வகையில் நல்லாட்சியின் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் அல்கைதாவை விட்டு விட்டு ஐஎஸ் என்ற நாமத்தை தற்போது உச்சரிக்கத் தொடங்கியிருக்கின்றார். தற்போது ஐஎஸ் இயக்கத்தின் தலைவர் பக்தாதி கொல்லப்பட்டதாக செய்திகள் வந்துள்ள நிலையில் அடுத்த நிலையாக குராஸான் என்ற நாமம் உச்சாடனம் செய்யப்படலாம்.

எது எப்படி இருந்தபோதிலும் அரசாங்கங்களை நடத்திச் செல்வதற்கான எதிரி உருவாக்கத்துக்கென சர்வதேச பயங்கரவாதங்கள் நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்பட முடியுமான சூழமைவே நாட்டுக்கு மேலால் கருக்கட்டியுள்ளது. பயங்கரவாதம் என்பது அது எந்த வடிவில் நாட்டுக்குள் நுழைந்தாலும் அது பயங்கரமானதாகவே இருக்கப் போகிறது. பயங்கரவாதத்துக்கு எதிரான போர் பயங்கரவாதத்தை அழித்தொழிப்பதை நோக்காகக் கொள்ளாமல் அதற்கே உரமாக மாறுவது பயங்கரவாதத்தை விட மோசமானதாகும் என விளக்கும் பத்தியாளர் டேனியல் மப்சூத், பயங்கரவாதம் என்பது அதனை உருவாக்கிய மேற்கத்திய சக்திகளுக்கு ஒரு பெறுமதிமிக்க சொத்தாகவே கருதப்படுகிறது.

அவர்களுடைய அரிய கண்டுபிடிப்பிலும் தயாரிப்பிலும் உருவான இந்த உற்பத்தியை அதன் உற்பத்தியாளர்கள் இலகுவில் விட்டுக் கொடுப்பது அல்லது அழித்துவிடுவது என்பது அப்பாவித்தனமானதொரு எதிர்பார்ப்பாகும் என்று குறிப்பிடுகிறார். இந்த வகையில், உற்பத்தி செய்யப்படும் இந்தப் பயங்கரவாதம் நாட்டுக்குள் நுழைந்தால் அது தனது இலக்கை அடையும் வரை ஓயப் போவதில்லை என்பது தெளிவானது.

தொடர்ந்தும் அவர் குறிப்பிடும் போது, பயங்கரவாதத்தின் படைப்பாளிகளும் அதன் ஆதரவாளர்களும் அதனை நன்கு பரிசோதித்த பின்னர், பயங்கரவர்தத்துக்கு எதிரானது என்ற லேபலின் கீழ் தமது உற்பத்தியை சந்தைப்படுத்துகிறார்கள். எனவே பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்பது, அதன் உற்பத்தியாளர்கள் மூலம் அவர்களது தயாரிப்பு பரிசோதனைக்கு உள்ளாவதே என்பதை நாங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும் என்கிறார்.

இந்த உற்பத்தித் தொடரில் இது வரைக்குமான இறுதிப் பதிப்பாகவே ஐஎஸ் காணப்படுகிறது. ஐஎஸ் என்ற பெயரில் பயங்கரவாதத்தை சந்தைப்படுத்தி தமது ஆயுதங்களை விற்பதற்கான யுத்தம் ஒன்றை வெடிக்கச் செய்யும் சந்தைச் செயற்பாடுதான் தற்போது கடைசியாக சிரியாவில் நடந்தேறுகிறது.

அல் மயாதீன் தொலைக்காட்சிச் சேவைக்கு ஊடகவியலாளர் ஸலாஹ் அல் ஸல்மான் சுட்டிக் காட்டிய, அமெரிக்கா மொசூலில் களமிறக்கிய மூன்று குழுக்கள் தொடர்பான விவரணம் இதற்கு எடுத்துக் காட்டாக அமைகிறது.

பயங்கரவாதத்துக்கு எதிராகப் போராடும் குழுக்களுக்கும் பயங்கரவாதக் குழுக்களுக்கும் ஒரே இடத்திலிருந்தே ஆய்தம் விநியோகிக்கப்பட்டதை அவர் இதில் எடுத்துரைக்கின்றார்.

இதே வேலையைத் தான் தமிழர்களை எதிரியாகக் கொண்ட போரின் போதும் இஸ்ரேல் செய்தது. இலங்கை இராணுவத்துக்கும் LTTE இனருக்கும் அவர்கள் ஒரே சமயத்தில் பயிற்சியளித்ததை விக்டர் ஒஸ்ட்ரோஸ்கி 1991 இல் வெளிப்படுத்தியிருந்தார்.

நாட்டில் நடந்த யுத்தத்தையும் இழப்புக்களையும் இதனால் பலநூறு வருடங்கள் நாடு பின்தள்ளப்பட்டதையும் உணர்ந்த பின்னரும் மீண்டுமொரு பயங்கரவாதத்தை இறக்குமதி செய்து சந்தைப் படுத்துவதற்கான முட்டாள்தனமான முயற்சிகள் ஏன் எடுக்கின்றார்கள் என்பது புரியவில்லை. பயங்கரவாதம் இறக்குமதி செய்யப்பட்ட பின்னர் பயங்கரவாதத்தையும் தாண்டிச் செல்லும் பயங்கரவாத எதிர்ப்பின் ஆபத்துக்களைப் பற்றி இந்தத் தருணத்தில் நாங்கள் அதிகம் சிந்திக்க வேண்டும்.

பயங்கரவாத எதிர்ப்பு என்ற பெயரில் ஈராக் உருக்குலைக்கப்பட்ட பின்னர் இன்று வரை அங்கு எந்தப் பயங்கர ஆயுதத்தையும் (WMD) கண்டு பிடிக்க முடியவில்லை என சில்கொட் அறிக்கை அம்பலப்படுத்தி இருந்தது. எனவே போலியான ஒரு கற்பிதம் தான் அமெரிக்கா தலைமையிலான நேச நாடுகள் ஈராக்கில் கால்பதிப்பதற்கு காரணமாக அமைந்தது.

இலங்கையில் ஐஎஸ் என்ற பிரச்சாரமும் இப்படியான ஒன்றாக அமையலாம். ஐஎஸ் என்பது இஸ்லாமிய இயக்கம் அல்ல என ஐஎஸ் பிரபலமாகத் தொடங்கிய 2014 ஆம் ஆண்டிலேயே அகில இலங்கை ஜம்மியதுல் உலமா அறிக்கை வெளியிட்ட பின்னரும் இலங்கை முஸ்லிம்களை ஐஎஸ் சர்வதேச பயங்கரவாதத்துடன் முடிச்சுப் போடுவதற்கு அமைச்சர்களும் சில தலைவர்களும் முனைவது உள்நாட்டு நலனுக்காக அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.

இந்த நிலையில் வல்லந்தமாக இலங்கை முஸ்லிம்கள் மீது ஐஎஸ் ஐயோ அதன் பின்னர் வரப்போகின்ற ஒன்றையோ திணித்து இலங்கையை ஈராக்காக மாற்றத் துணிவது, இரவு விழுந்த குழியை விட மோசமான குழியில் பகலில் விழுவதாகவே அமையும்.

ஈற்றில் எல்லாம் முடிந்தபின் ஒரு சில்கொட் அறிக்கையை வெளியிட்டு வருத்தம் தெரிவிப்பதற்குள் இந்து சமுத்திரம் இலங்கைக்கு மேலால் ஓடிக் கொண்டிருக்கும்.

இத்தனையும் தெரிந்தும் எதிரி உருவாக்கத்துக்காக இலங்கை முஸ்லிம்களை குறிவைத்து பல நிகழ்வுகள் ஏற்கனவே கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. ஆனாலும் இவை எவ்வளவு தூரம் உண்மையானவை என்பது (பக்.14)

• கலாநிதி அலவி ஷரீப்தீன்

# காத்தான்குடிப் படுகொலை: இனவாதம் ஒழிவதாக!

ஒவ்வொரு வருடமும் ஒகஸ்ட் மாதமாகும் போது விரக்தியும் கவலையும் என்னை ஆக்கிரமித்துக் கொள்கிறது. 1990 ஒகஸ்ட் 03 ஆம் திகதிய துன்பமான தினத்தில், தமது இறைவனுடன் தொடர்பு கொண்டிருந்த 141 முஸ்லிம்கள், மட்டக்களப்பு மாவட்டத்தின் இரு பள்ளிவாசல்களில் படுகொலை செய்யப்பட்டார்கள். சுமார் மூன்று தசாப்தங்கள் கழிந்த பின்னரும் காத்தான்குடி மீரா ஜும்ஆப் பள்ளிவாசலும், மஞ்சந்தொடுவாய் ஹுஸைனியா பள்ளிவாசலும் இதன் சோகமான ரணங்களை பள்ளிவாசலின் புனிதச் சுவர்களில் சாட்சியங்களாக பதிந்து வைத்துள்ளன.

காத்தான்குடிப் பள்ளிவாசல் படுகொலைகளுக்கு இன்றுடன் (ஒகஸ்ட் 03) 27 வருடங்கள் பூர்த்தியாகின்றன. எனது அன்புத் தந்தையையும் சகோதரனையும் மற்றும் சில உறவுகளையும் இந்தச் சம்பவத்தில் இழக்கும்போது எனக்கு வெறும் 10 வயது. ஹுஸைனியா பள்ளிவாசலில் கொல்லப்பட்ட ஒவ்வொருவரும் எனது உறவினர்களாகவோ தெரிந்தவர்களாகவோ தான் இருந்தார்கள்.

இது போன்றதொரு கரிநாள் இலங்கையில் மட்டுமல்ல உலகின் எந்த மூலையிலும் புலரக் கூடாது. தசாப்தங்கள் கடந்த போதும் இந்நாளுடைய ரணவடுக்கள் பாதிக்கப்பட்டவர்களின் மனதை விட்டும் அழிந்துவிடவில்லை. இந்த நொடியில் தான் நடந்தது போல அந்த நினைவுகள் இன்னும் பசுமையாகவே இருக்கின்றன.

1990 இலங்கை வரலாற்றில் வன்முறைகளினதும் கொலைகளதும் உச்ச காலகட்டம். இந்தக் காலப்பிரிவில் எல்ரிரிஈயும் ஏனைய தமிழ் பயங்கரவாதக் குழுக்களும் செய்த அட்டூழியங்களை வடக்கிலும் கிழக்கிலும் இருந்த மக்கள் நன்கு அறிவார்கள். சட்டம் ஒழுங்கு எதுவுமின்றி இங்கு காட்டுதர்பார் நடந்தது. யாருடைய கையிலாவது துப்பாக்கி கிடைத்தால், அவர் பயங்கரவாதிகளின் குழுவுடன் தொடர்புள்ளவராகவும் இருந்தால், அனைவருமே அவர்களது இஷ்டத்துக்கு அடிபணிய வேண்டியதுதான். இப்படித்தான் தம்மை விடுதலை வீரர்களாக பறைசாற்றிக் கொண்டவர்கள் ஆயிரக் கணக்கான உயிர்களை ஈவிரக்கமின்றி பலியெடுத்தார்கள்.



ஜேவிபியின் கலவரங்களுக்குப் பின்னர் 1990 ஆம் ஆண்டு பல்கலைக்கழகங்கள் மறுபடியும் திறக்கப்பட்டன. அப்போது நான் கொழும்பு பல்கலைக்கழகத்தில் சட்டத்துறை மாணவனாக இருந்தேன். கப்பம் கேட்கவும், பழி வாங்கவும் என சிங்கள முஸ்லிம் கிராம மக்கள் எல்ரிரிஈ மற்றும் பயங்கரவாதக் குழுக்களால் கொல்லப்பட்டுக் கொண்டிருந்த காலம்.

தமிழ்ப் பிரதேசங்களைத் தாண்டிச் செல்லும் சிங்களவர்களும் முஸ்லிம்களும் எந்த நேரத்தில் எந்த இடத்தில் கடத்தப்படுவோமோ என்று உயிரைக் கையில் பிடித்துக் கொண்டே பயணிக்க வேண்டியிருந்தது. நூற்றுக் கணக்கான முஸ்லிம்கள் கடத்தப்பட்டு அவர்களது வாகனங்களும் எல்ரிரிஈ [illegible] களால் பறிமுதல் செய்யப்[illegible] தப்பட்டவர்கள் அனைவருமே ஒந்தாச்சி மடத்தில் வைத்து கொல்லப்பட்டார்கள். இந்த வேளையில் கிழக்குப் பக்கம் வர வேண்டாம் என எனது பெற்றோர் எனக்கு அறிவுரை வழங்கியதால் நான் கொழும்பிலேயே தங்க வேண்டி வந்தது.

எல்ரிரிஈயினரின் வன்முறை புற்று நோய் போல பரவ ஆரம்பித்தது. முதலில் அவர்கள் தமது தலைவர்களையும் மக்களையும் கொன்றார்கள். பின்னர் சிங்கள, முஸ்லிம்கள் மீது பாய்ந்தார்கள். கிழக்கு மாகாண முஸ்லிம்கள் கொலை அல்லது வெட்டித் துண்டாக்கல் போன்றவற்றின் அச்சத்தினால் உறைந்து போயிருந்தார்கள். முஸ்லிம் இளைஞர்கள் கடத்தப்பட்டு அரக்கத்தனமாகக் கொல்லப்படுவது சகஜமாக மாறியிருந்தது.

ஒவ்வொரு நாளும் கடத்தல், கொலைச் செய்திகள் கொழும்பிலிருந்த எனக்கு எட்டிய வண்ணமேயிருந்தன. உண்மையில் அவ்வாறில்லாவிட்டாலும் [illegible] காட்டிக் கொண்டதனால் இவர்களைத் தாண்டி தமக்கு ஏதும் தீர்வு கிடைக்காது என்று மக்கள் துயரத்தில் தோய்ந்து போனார்கள்.

கிழக்கு மாகாணத்துக்கு அப்பால் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பொதுப் போக்குவரத்து நிலையங்களிலும் வெடிக்கப்பட்ட குண்டுகளினால் பல அப்பாவி உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. வணக்கஸ்தலங்களையும் கூட இவர்கள் விட்டு வைக்கவில்லை.

இலங்கை இராணுவத்தை நேரடியாகச் சந்திப்பதைத் தவிர்ப்பதற்கு எல்ரிரிஈ தீர்மானித்தபோது தாக்கி விட்டு ஓடி ஒழியும் தந்திரத்தைக் கையாண்டதோடு, சிங்கள முஸ்லிம் கிராமங்களில் புகுந்து அப்பாவி மக்கள் மீதும் தாக்குதல் நடத்தினார்கள்.

எல்ரிரிஈயினரையும் ஏனைய பயங்கரவாத அமைப்புக்களையும் உலகம் அறியாவிட்டாலும் கிழக்கு மாகாண மக்கள் அவர்களை நன்றாகவே அறிந்து வைத்திருக்கிறார்கள். வறுமையில் வாடிய சிறுவர்கள், கல்வியில் பின்தங்கிய மாணவர்கள், வேலையற்றவர்கள், கூலித் தொழிலாளர்கள், திருடர்கள், குண்டர்கள், மற்றும் தாம் சொல்வதை சிரமேற்கொண்டு செயற்படுத்துபவர்கள் போன்றவர்களினாலேயே எல்ரிரிஈ படை நிரப்பப்பட்டிருந்தது. இந்த வகையில் கௌரவமான தமிழ் மக்கள் இவர்களையும் இவர்களது வன்முறை வெறியாட்டத்தையும் வெறுக்கத் தொடங்கினர்.

இதற்காக இந்தத் தமிழர்கள் ஆயுத முனையில் மிரட்டப்பட்டதனால் அவர்களும் தமது உயிருக்குப் பயந்து வாய் மூடி மௌனிகளாகினர். இவர்களுக்கு எதிரான சிறியதொரு வார்த்தையும் அவர்களை மின்கம்பங்களில் தொங்கச் செய்தன. அவர்களை எதிர்த்தவர்களையெல்லாம் அவர்கள் மின்கம்பங்களிலே கட்டி சுட்டுத் தள்ளினார்கள். சடலத்துக்குப் பக்கத்தில் தமிழர்களின் துரோகி என்ற வாசகத்தையும் கட்டி வைத்தார்கள்.

எல்ரிரிஈ ஆரம்பத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான பிரச்சாரங்களை முன்னெடுத்தது. பின்னர் அதனை சிங்கள மக்களை நோக்கி விஸ்தரித்தது. சிங்கள அடையாளம் கொண்ட எவரையும் கொல்வதை நியாயப்படுத்துவதற்காக அவர்கள் 'சிங்கள அரசாங்கத்தின்' மீது வெறுப்பை விதைத்தார்கள். மிரட்டியும் கொலை செய்தும் சிங்கள மக்களை அவர்களது கிராமங்களில் இருந்து விரட்டி சிங்கள மக்கள் மீதான யுத்தமொன்றைப் பிரகடனப்படுத்துவதற்காக அவர்கள் இந்த உத்தியைக் கையாண்டார்கள்.

கிழக்கு முஸ்லிம்களின் சமாதானத்துக்கான தேடலுக்கு மாற்றமாக, தமது ஈவிரக்கமற்ற சட்டங்களினால் அவர்களை அடிமைப்படுத்தி இரும்புக் கரங்களால் ஆள நினைத்தார்கள். முஸ்லிம்கள் இனரீதியாக தமிழர்கள் என்ற இராமநாதனுடைய பழைய பல்லவியை மீட்டும் வகையில் போலிக்காரணங்களை முன்னிலைப்படுத்தி முஸ்லிம்களை இஸ்லாமியத் தமிழர் என வகைப்படுத்தினார்கள். இன்றுவரையான வரலாறு நெடுகிலும் முஸ்லிம்களால் இந்த அடையாளம் மறுதலிக்கப்பட்டே வந்திருக்கிறது.

இந்தப் புதிய அடையாளத்தை முஸ்லிம்கள் ஏற்க மறுத்தபோது, அவர்கள் முஸ்லிம்களை அச்சுறுத்திப் பணிய வைக்கும் வகையில் முஸ்லிம்கள் மீது கடத்தல், கொள்ளை, கொலை போன்ற மாபாதகங்களை ஏவிவிட்டார்கள். மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழ்ப் பயங்கரவாதக் குழுக்களின் முஸ்லிம்கள் மீதான முதலாவது வன்முறை, 1985 இல் எல்ரிரிஈ அல்லாத தமிழ்ப் பயங்கரவாதிகளினால் உன்னிச்சைப் பிரதேசத்தில் சில முஸ்லிம் விவசாயிகள் வெட்டிக் கொல்லப்பட்டு ஆற்றில் வீசியெறிந்ததுடன் ஆரம்பித்தது. முஸ்லிம்களை அரசாங்கத்துக்குத் தகவல் கொடுப்பவர்களாக அவர்கள் குற்றம் சாட்டினர். இந்தப் புள்ளியில் இருந்து தமிழ் முஸ்லிம் உறவுகளைப் பாதிப்பதான தாக்குதல்கள் தொடர்ந்தன.

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258 077 222 7569
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## கணவான் அரசியலை உருவாக்குவது மக்கள் கைகளிலேயே உள்ளது

பாகிஸ்தான் மக்கள் தெரிவு செய்த 17 பிரதமர்களுள் கொல்லப்பட்ட மூவரைத் தவிர ஏனையவர்கள் அனைவரும் ஏதோ ஒரு குற்றச்சாட்டில் பதவி விலகியவர்கள். இந்த வரிசையில் பாகிஸ்தானின் 18 ஆவது பிரதமர் நவாஸ் ஷரீபும் அண்மையில் இணைந்து கொண்டார். இதன் அடிப்படையில் தாம் தெரிவு செய்த எந்தப் பிரதமருமே முழுமையான ஐந்து வருடங்களும் ஆட்சி செய்யக் கிடைக்காத நிலை பாகிஸ்தான் மக்களின் மரபுரிமையாகியுள்ளது.

டுபாயில் தனது பிள்ளைகளின் பேரில் வாங்கிக் குவித்த செல்வங்களின் விபரங்களை 2013 ஆம் ஆண்டில் தேர்தலில் போட்டியிடும்போது வெளிப்படுத்தவில்லை என்ற குற்றச் சாட்டை ஏற்றுக் கொண்டே அவர் பதவி விலகியிருக்கின்றார். ஊழல் மோசடிகள் அரசியல் தலைவர்களுக்கே உரித்தான குணாதிசயங்களில் ஒன்றாகவே கீழைத்தேய அரசியலில் கணிக்கப்படுகிறது. இருந்தபோதிலும் சட்டமும் அதன் மீதான மக்களின் அழுத்தமும் பலமாக உள்ள இடங்களில் அரசியல் வாதிகள் அடிபணிவது தவிர்க்க முடியாதது என்பதையே இந்த நிகழ்வு காட்டுகிறது. பாகிஸ்தானில் மட்டுமன்றி இந்தியா விலும் கூட இப்படி அரசியல்வாதிகள் தமது பதவியைத் துறந்த சந்தர்ப்பங்கள் பல பதிவுசெய்யப்பட்டுள்ளன.

இலங்கையிலும் 69 வருடங்களாக அரசியல்வாதிகள் தலைவர்களாகி இருக்கிறார்கள். ஆட்சி பீடம் ஏறிய பின்னர் நாட்டையே சுரண்டி வங்குரோத்து நிலைமைக்குக் கொண்டு வந்தவர்கள் இருக்கிறார்கள். நாட்டின் சொத்துக்களைச் சூறையாடி தனது குடும்பத்தைப் போஷித்தவர்கள் இருக்கிறார்கள். என்னதான் ஊழல் அராஜகம் புரிந்தாலும் அடுத்த தேர்தல் வரும் வரை காத்திருப்பதெல்லாமல் வேறெதுவும் செய்யத் தெரியாத நிலையிலேயே இலங்கையின் வாக்காளப் பெருமக்கள் இருக்கிறார்கள்.

கோடிக் கணக்கில் நாட்டின் சொத்துக்களைச் சூறையாடியும் வீண்விரயம் செய்தும் ஆட்சி நடத்திய முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ, ஜனநாயகத்துக்கு விரோதமாக மூன்றாவது முறை ஜனாதிபதியாவதற்கு வாக்குக் கேட்டபோதும் நாட்டு மக்களில் 58 இலட்சம் பேர் அவருக்கு வாக்களித்தனர். ஜனாதிபதியாக அவர் தோல்வியடைந்த போதும் அதிகப்படியான வாக்குகளால் அவரை இந்த மக்களே பாராளுமன்றத்துக்கும் அனுப்பினர். வெறும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியன்றி, அவருக்குப் பிரதமர் பதவி வழங்கப்பட வேண்டும் என்றும் கோஷமெழுப்பினர்.

மக்கள் அரசியல்வாதிகளின் அடிவருடியாக இருக்கும் வரை நாட்டில் முன்னேற்றத்தை எதிர்பார்க்க முடியாது. அதே போல ஊழலையோ மோசடியையோ இல்லாமல் செய்யவும் முடியாது. ஊழலும் மோசடியும் இன்றி அரசியல் செய்ய முடியாது என்பதை இலங்கை மக்கள் அரசியல் சித்தாந்தமாகவே எடுத்துக் கொண்டுள்ளதையே இது காட்டுகிறது.

மக்களின் இந்த அரசியல் சித்தாந்தத்தின் வழியேதான் அரசியல் தலைவர்களும் ஆட்சி நடத்துகிறார்கள். ஊழல் மோசடிகளில் இருந்து நாட்டைக் காப்பதற்கு வந்த நல்லாட்சி அரசியலும் அதே குட்டையில் அமிழ்ந்து போயிருப்பதற்கு மக்களின் இந்த மனப்பாங்குதான் காரணம்.

கடந்த காலங்களில் நடைபெற்ற ஊழல் மோசடிகள் விசாரிக்கப்படப் போவதில்லை என்ற ஏமாற்றமே மக்களிடம் இருக்கிறது. நல்லாட்சி அரசிலும் ஆட்சித் தலைவர்கள் ஊழல் செய்யாவிட்டாலும் அவர்களின் கட்சிக்காரர்கள், உறவினர்கள், நெருங்கியவர்கள் என நீளும் பட்டியலின் ஊழல் மோசடிகள் தற்போது வெளிவந்த வண்ணம் உள்ளன. இவர்களில் யாருடைய ஊழல் நிரூபிக்கப்பட்டாலும் தமது பதவியை விட்டு ஒதுங்கும் கணவான்கள் துரதிர்ஷ்டவசமாக இலங்கை அரசியலில் இல்லை.

இதற்குக் காரணம் வாக்களித்த மக்கள்தான். தாம் எதிர் பார்த்த அளவு நல்லாட்சி தமக்குக் கிடைக்கவில்லை என்றா லும் கூட அதனை மாற்றுவற்கும் இன்னும் சில வருடங்கள் சகித்துக் கொண்டு வாழ்வதைத் தவிர வேறில்லை என்ற நிலைமையில் தான் மக்கள் இருக்கும் போது, எந்தத் தலைவ னும் கொள்ளைக்காரனாக மாறாமல் இந்த நாட்டில் இருந்தால் அவர்கள் தேவதூதர்களாகத்தான் இருக்க வேண்டும்.

பனாமா அறிக்கைக்கு மேலதிகமாக தகவல் அறியும் உரிமை மூலமாகவே பாகிஸ்தான் பிரதமருக்கு எதிரான தகவல்கள் சேகரிக்கப்பட்டுள்ளன. தேர்தலுக்கு முன்னர் சொத்துக்களை வெளிப்படுத்த வேண்டும் என்ற சட்டம் பயன்பட்டிருக்கிறது.

இலங்கையிலும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது. பாராளுமன்ற அங்கத்தவர்களின் சொத்துவிபரத்தை மக்கள் அறிந்து கொள்ளும் வகையில் 1975 ஆம் ஆண்டிலிருந்தே சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.

மக்களுக்கு இவற்றை அறிந்து கொள்வதில் ஆர்வம் இல்லையென்றால், மாற்றம் ஒன்று தொடர்பில் மக்களுக்கு எதுவிதத் தேவையும் இல்லையென்றால் கணவான் அரசியல் தலைமைகளை எமது நாட்டில் எதிர்பார்ப்பது சாத்தியமில்லை.

# சைட்டம் அரசுடமையாக்கப்பட்டது கல்விப் பிரச்சினைக்குத் தீர்வாகுமா?

• பிரசாத் மொஹொட்டி

மேல் மட்டத்தில் விளங்கும் விடயம் உண்மையென்றால் மனிதனுக்கு விஞ்ஞா னம் அவசியப்படுவதில்லை என கால்மாக்ஸ் குறிப்பிட்டுள்ளார். இன்று சமூக வலைதளங் களின் மூலமும் ஊடகங்களின் மூலமும் சமூகமயப்படுத்தப்பட்டு வருகின்ற சில ஊகங்களை ஆராய்ந்து பார்ப்பதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

1. மாணவர்கள் உயிர்த்தியாகம் செய்து பாதுகாத்த சுதந்திரக் கல்வியொன்று இலங்கையில் உள்ளதா?
2. இலங்கை மாணவர் சமுதாயத்தின் முதன்மை பிரச்சினை சைட்டமா?
3. சைட்டமை நிறுத்திவிடுவதன் மூலம் இலங்கையின் சுதந்திரக் கல்வியை பாது காக்க முடியுமா?

இவ்வனுமானங்கள் சரியானதா? இல்லா விட்டால் குறிப்பிட்ட 'செம்போ' வகையை பாவிப்பதின் மூலம் தலைமயிர் பளபளப் பாகும் என்ற நம்பிக்கையைப் போன்று சமூக மயப்படுத்தப்பட்ட நம்பிக்கையொன்றா?

மேல் மட்டத்தில் விளங்கும் உண்மைகள் தொடர்பாகவும் அதிகாரத்திலுள்ளவர்கள் மற்றும் ஊடகங்கள் சமூகமயப்படுத்த முயற்சிக்கின்ற அரைகுறை உண்மை தொடர் பில் கலந்துரையாடுவதே இக்கட்டுரையின் அடிப்படை நோக்கமாகும்.

களை கைப்பற்றிக்கொண்டுள்ளனர். அவ் வாறே பணத்திற்கு வழங்கப்படுகின்ற கல்வி யின் சிறந்த பகுதிகளையும் அனுபவிக்கின் றனர். (டியூசன் வகுப்புக்கள், அரை அசாங் கம் மற்றும் தனியார் பட்டங்களை வழங்கும் நிறுவனங்கள், SLIT, NIBM, AQUINAS, NSBM).

இதன் காரணமாக, மருத்துவ கல்லூரிகள், பல்கலைக்கழகங்களில் தரமான பாடநெறி கள், அரை அரசாங்கம், நிவாரண அடிப்படை யிலான தனியார் பாடநெறிகளில் நகர்ப்புற மற்றும் நகர்ப்புற நடுத்தர வகுப்பினரே பெரும்பான்மையாக உள்ளார்கள். இலவசக் கல்வியை பகிர்ந்தளிக்கின்ற உயர் கல்வி நிறுவனங்களில் விவசாயிகளினதும் தொழி லாளர்களினதும் பிள்ளைகள் குறைந்தள வினரே உள்ளனர். இப்போட்டியின் மூலம் குரலற்ற ஏழைப் பெற்றோரின் பிள்ளைகளே மிகவும் அநீதியான முறையில் பாதிக்கப் படுகிறார்கள்.

ஆனால் லிப்டன் சுற்றுவட்டத்திலிருந்து வொய்ஸ்கட் வழங்கும் போது இலங்கையில் இல்லாத சுதந்திரக் கல்வியை பாதுகாக்க போராடுவதாகவும் தெரிவிக்கிறார்கள். இற் றைக்கு சில தசாப்தங்களுக்கு முன்னர் மத்திய மகா வித்தியாலயங்களை அடிப்படையாக கொண்டு நிலவிய ஓரளவுக்குச் சுதந்திரத் துடன் காணப்பட்ட கல்வி முறையை இன்று காண முடியவில்லை. உண்மையில் இலங்கை மண் மீது . இன்று பிரதானமாக கலப்புமுறைக் கல்வியே காணப்படுகின்றது.



### இலங்கையில் சுதந்திரக் கல்வி உள்ளதா?

இன்று இலங்கை மண் மீது காணப்படு வது, முன்னேற்றமடைந்துள்ள ஸ்கண்டி னேவிய நாடொன்றில் உள்ள சுதந்திரக் கல்விக்குச் சமமான கல்வி முறையொன் றல்ல. எமது நாட்டின் மாணவர் சமூகம் மூன்று முறைகளில் கல்வியை பெற்றுக் கொள்கிறார்கள். ஒன்று, பணம் செலுத்திப் பெறும் கல்வி. இரண்டாவது, இலவசமாக பெறும் கல்வி. மூன்றாவது, இவ்விரண்டு முறைகளையும் உள்ளடக்கிய கலப்பு முறை கல்வி ஆகியவையே அவை.

பிரதானமாக நாம் இலவசமாகப் பெற்றுக் கொள்ளும் கல்வியினதும் பணம் செலுத்திப் பெறும் கல்வியினதும் கலப்பையே காண்கி றோம். இக்கலப்பு முறைக் கல்வியின் அளவு பெற்றோரின் பணம் மற்றும் சமூக நிலைமை களின் அடிப்படையில் மாற்றமடையும்.

உண்மையானதொரு சுதந்திரக் கல்வி இருக்குமாக இருந்தால் தொழிலாளர்கள், வங்கிகளின் உயர் அதிகாரிகள் மற்றும் நிறை வேற்று தரமிக்கி தொழில்களில் ஈடுபடுப வர்கள், ஜனசவிய பெறுபவர்கள், கிராமிய விவசாயிகள், நகர்ப் புறத் தொழிலாளர்களின் பிள்ளைகள் என அனைவரும் உள்ளடங்க வேண்டும். உண்மையில் இடம்பெறுவது என்னவெனில், கிராமிய விவசாயிகள் மற் றும் நகர்புறத் தொழிலாளர்கள் போன்ற சமூகத்தின் அடித்தட்டு மக்களின் பிள்ளை கள் போட்டியில் அப்புறப்படுத்தப்பட்டு நகர்ப்புற மற்றும் அரை நகர்ப்புற மத்திய வகுப்பினரால் 'ஹய்பிரிட்' கல்வி முறை கைப்பற்றப்பட்டுள்ளது.

(சிறந்த முறையில் போட்டிக்கு முகம் கொடுப்பதற்கு இலவசமாக கிடைக்கின்ற கல்வியையும் பணம் செலுத்தி பெறுகின்ற கல்வியையும் கலந்து) இலவசமாக வழங் கப்படுகின்ற கல்வியை மாத்திரம் பயன் படுத்தி, நவீன போட்டித்தன்மையுடன் கூடிய தொழிற் சந்தையை விஞ்சுவது கண் தெரியாத ஆமை சிறு துளையால் வானத்தை பார்ப்பதை விடவும் கடினமானது.

இம்மத்திய வகுப்பினர்கள் இலவசமாக [illegible] தியை, அதாவது புகழ்பெற்ற பாடசாலை

இது தவிர, கடந்த இரு தசாப்தத்திற்குள் வளர்ச்சியடைந்த சர்வதேச மற்றும் தனியார் பாடசாலைகளும் காணப்படுகின்றன.

சமூகத்தில் மிகவும் அடித்தட்டில் உள்ள மாணவர்கள் இலவசமாக வழங்கப்படுகின்ற கல்வியை மாத்திரம் பயன்படுத்தி இக்கல் விப் போட்டிக்கு முகம்கொடுத்து தமது எதிர் கால அபிவிருத்தியை சிறப்பாக அமைத்துக் கொள்ள முயற்சிக்கிறார்கள். உண்மையில் மிகவும் அநீதியான முறையில் தமக்கு மேல் மட்டத்தில் உள்ள வகுப்பினர்களால் இவர்கள் சூரையாடப்படுகிறார்கள் என்பதே உண்மை.

சைட்டம் தேசியப் பிரச்சினையொன் றல்ல. சைட்டம் புரட்சி ஒட்டுமொத்த மாண வர் சமூகமும் எதிர்கொள்கின்ற பல்வேறு பட்ட நெருக்கடிகளின் கூட்டுப் பிரகடன மொன்றும் அல்ல.

எமக்கு விளங்காத இதையும் விட ஆயிரக் கணக்கிலான பிரச்சினைகள் கல்வித் துறை யில் நிலவுவதாக பின்வரும் அறிக்கை சுட்டிக் காட்டுகிறது.

### கல்விக்கான ஒதுக்கீடுகள் குறைவு

இவ்விடயம் கடந்த காலப்பகுதியில் கலந்துரையாடப்பட்டதுடன், காலத்திற்கு காலம் மேடையேறுகின்ற மத்திய வகுப்பு புத்திஜீவிகள் மேடையை விட்டு இறங்கிச் சென்றதன் பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பி விடுகின்றது.

### பாடசாலையை விட்டுச் செல்லல்

புள்ளிவிபரமொன்றின் படி, 2009 ஆம் ஆண்டில் 45,000 மாணவர்கள் பாடசாலை யை விட்டு விலகிச் சென்றுள்ளார்கள். (Dr. M.A.N. Rasanjalee Perera – Senior Lecturer Department of Sociology and Anthropology Jayapura university) இத்தொகை முதலாம் வருடத்தில் நுழைகின்ற மாணவர் தொகை யில் 13 வீதமாகும். அதாவது முதலாம் வருடத்தில் நுழைகின்ற 10 மாணவர்களுள் ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் ஆரம்பக் கல்வியைப் பூர்த்திசெய்வதற்கு முன்னரே பாடசாலையை விட்டுச் செல்கிறார்கள். [illegible] பகுதியில் வசிக்கின்ற பிள்ளை களுள் 5 பேருக்கு ஒருவர் பாடசாலை விட்டு இடைநிற்கிறார்கள்.

### கல்வித் தரம்

2014 ஆம் ஆண்டில் 250,000 மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்கு தகுதி பெற்றிருந்தார் கள். அதில் 2500 மாணவர்களுக்கு மாத்திரமே பல்கலைகழக அனுமதி கிடைத்தது. இது 9 வீதமாகும். (UGC Statistics 2014) அதாவது 91 வீதமான மாணவர்களுக்கு பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. பல்கலைக்கழ கத்திற்கு நுழைகின்ற மாணவர்களுள் அரை வாசிக்கும் அதிகமானவர்கள் கலைத்துறை யில் கற்கின்றார்கள். அக்கலைப் பிரிவுக்குரிய பாடங்கள் தொழிற் சந்தையை இலக்கு வைப்பதுமில்லை. மொழி முக்கியத்துவம் தொடர்பில் அவதானம் செலுத்துவதுமில் லை. இறுதியில் அம்மாணவர்கள் பௌத்த கலாசாரப் பாடத்தை எடுத்துவிட்டு தொழில் தருமாறு கோரி ஆர்ப்பாட்டம் செய்கின் றார்கள்.

### எல்லையற்ற வகையில் ஊதிப் பெருகப்பட்ட சைட்டம் பிரச்சினை

வருடமொன்றில் மொத்தமாக சுமார் 3 இலட்சத்து 25,000 மாணவர்கள் முதலாம் வகுப்பில் நுழைகிறார்கள். இம்மாணவர் களுள் மருத்துவக் கல்வியைப் பெறுவது 1500 பேர் என நினைத்தாலும் (2014/2015 Medical Intake 1255- UGC) முழு மாணவர் தொகையில் 0.004 வீதத்திற்கும் குறைவான வர்களே மருத்துவ மாணவர்களாகின்றனர்.

எனவே ஒட்டு மொத்த மாணவர் தொகை யுடன் ஒப்பிடுகையில் எவ்வகையிலேனும் இது தேசிய பிரச்சினையாக முடியாது. சைட்டம் மருத்துவ கல்லூரியை மூடுவதன் மூலம் ஒட்டுமொத்த மாணவர் தொகையில் மிகவும் சொற்ப விகிதத்தையுடைய மருத்துவ மாணவர்களின் எதிர்பார்ப்புக்களே நிறை வேறுகின்றது.

### சைட்டம் எதிர்ப்பு சமூகத்தில் மிகப்பெரும் உரையாடலை தோற்றுவித்தது எப்படி?

சாதாரண மனிதனுக்கு முறையாக ஒழுங் கமைக்கப்பட்ட மனிதர்களின் குரலிலேயே தயவு ஏற்படுகிறதேயன்றி சிதறிய மனித சமூகத்தின் ஓலங்களிலல்ல. இக்குரலுக்கு சமூக ஆதிக்கமும் பிரபல ஊடகங்களும் இணைகின்றபோது சமூகத்தைக் குழப்பும் பெரும் கோசத்தை உண்டாக்க முடிகிறது. அதனால் பெரும்பான்மையினரின் அநீதிகள் மூடி மறைக்கப்பட்டு சிறுபான்மையின் அநீதி கள் மாத்திரம் சமூகமயப்படுத்தப்பட்டுள்ளது.

சமூகமயமாவதற்கு தாக்கம் செலுத்து கின்ற மற்றுமொரு உளவியல் காரணியாக இருப்பது மருத்துவத் தொழிலுடன் பிணைக் கப்பட்ட மனோநிலையாகும். நிறைவேற்று அதிகாரியொருவர், பொறியியலாளர் அல் லது விமானி தொடர்பில் எமக்குள் ஏற்படு கின்ற மனோநிலையை விட வித்தியாசமான தொரு மனோநிலையை மருத்துவ சேவையை வழங்கும் மனிதனுக்குள் காண முடியும்.

### சைட்டமை பாதுகாக்க வேண்டுமா?

எவ்விதத்திலும் அதனை பாதுகாக்கக் கூடாது. சரியாகக் கூறினால் சைட்டம் என் பது ஒரு திருட்டுப் பட்டக் கடையாகும். ராஜபக்ஷ ஆட்சிக் காலப்பகுதிக்குள் இடம் பெற்ற பல்வேறு விடயங்களை போன்று மோசடியின் மூலமும், பயமுறுத்தல் மற் றும் சந்தோசங்களை வழங்குவதன் மூலம் சைட்டம் என்னும் திருட்டுப் பட்டக்கடை ஸ்தாபிக்கப்பட்டது.

ஷென்கிரீலா நிறுவனத்திற்கு கொழும்பு பொருளாதார மத்திய நிலையத்தை இரண்டு வாரத்தில் குத்தகைக்கு எழுதிக் கொடுத்தமை தொடர்பில் பெருமை பாராட்டியது போன்று, உமா ஓயா சூழல் அறிக்கையை தமக்கு சார் பான பல்கலைக்கழமொன்றின் மூலம் பெற் றுக்கொண்டது போன்று, குப்பை மேடுகளை அமைத்து கொழும்பு நகரை அழகுபடுத்தி யது போன்று ராஜபக்ஷ அரசாங்கம் மக்க ளின் பெயரால் எவ்வித இடையூறுகளு மின்றி சைட்டம் மருத்துவக் கல்லூரியை முன்னெடுத்துச் சென்றது.

வைத்தியர் பாதெனியவின் தேர்தல் போராட்டம் வெற்றியளித்திருப்பின் இன் றும் இடையூறுகளின்றியே சைட்டம் முன் னகர்ந்திருக்கும். சைட்டம் உள்ளிட்ட அரச அல்லது அரச சார்பற்ற சகல பட்டம் வழங் கும் நிறுவனங்களுக்கும் அங்கீகாரம் காணப் பட வேண்டும். அங்கீகாரமற்ற பொறியிலா ளர்கள், விமானிகள், நிறைவேற்று அதிகாரி கள், கொள்கை வகுப்பாளர்கள், இராஜதந்தி ரப் பணியாளர்களால் ஏற்படும் பாதிப்புக்கள் நாட்டின் மனித உயிர்களுக்கும், சமூக, பொரு ளாதார நிலவுகைக்கும் அழிவுகளையே ஈட் டித்தரும். (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடியப்பச் சிக்கலில் அரசாங்கம் மீள்வதற்கான மார்க்கம் என்ன?



றவூப் ஸெய்ன்



## நல்லாட்சி அரசியல்

ஜூலை மாதம் இலங்கை அரசியலில் எப்போதும் ஒரு பேசுபொருளாகவே இருந்து வருகின்றது. 1983 ஜூலை தமிழர்களுக்கு எதிரான சிங்களவர்களின் இனவாதத் தாக்குதல் கட்டவிழ்க்கப்பட்டது. 1989 ஜூலை முஸ்லிம்களின் அபிலாஷைகளுக்கு எதிராக இலங்கை-இந்திய ஒப்பந்தம் செய்யப்பட்டு முஸ்லிம்கள் நடுத் தெருவில் நிறுத்தப்பட்டனர். இப்போது 2017 ஜூலை 29 இல் ஹம்பாந்தோட்டை துறை முகத்தை 100 ஆண்டுகளுக்கு சீனாவுக்கு குத்தகைக்கு விடும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

கடந்த வார அரசியல் காலநிலை ஜனாதிபதி மைத்திரியையும் அவரது நல்லாட்சி பரிவாரத்தையும் இடியப்பச் சிக்கலில் மாட்டியுள்ளது. இச்சூழ்நிலை தொடர்ந்தும் இறுக்கமடைவதற்கே வாய்ப்புள்ளது. அதன் இறுதி முடிவாக ஆட்சி கவிழலாம் என்று எதிர்வுகூறப்படுகின்றது.

ஜூலை இறுதிப் பகுதியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரிகள் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அதனால் பல பில்லியன் ரூபாய்கள் இலங்கைக்கு நஷ்டம் ஏற்பட்டது. இலங்கையில் இயங்கும் இந்திய பெற்றோலியக் கம்பனி பல பில்லியன் இலாபமடைந்தது.

இலங்கையில் 1226 இலங்கைப் பெற்றோலிக் கூட்டுத்தாபனத்திற்குரிய பெற்றோல் நிரப்பு நிலையங்கள் உள்ளன. பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் 2530 பேர் நிரந்தர ஊழியர்களாகப் பணியாற்றுகின்றனர். இந்திய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நாடளாவிய ரீதியில் 202 நிரப்பு நிலையங்களே உள்ளன.

2016/2017 ஆண்டுகளில் இந்திய ஒய்ல் கம்பனியின் நிகர இலாபம் 81.3 பில்லியனாகும். இத்தனைக்கும் அதில் 171 நிரந்தர ஊழியர்களே உள்ளனர். அவர்களுள் 24 சிரேஷ்ட முகாமையாளர்களும் அடங்குகின்றனர். 40 நிரப்பு நிலையங்கள் கொழும்பில் மாத்திரம் உள்ளன. இந்திய ஒய்ல் கம்பனியின் ஒவ்வொரு ஊழியனும் 17.9 பில்லியன் ரூபாய்களை இலாபமாக ஈட்டிக் கொண்டிருக்க, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் பணிப் பகிஷ்கரிப்பில் குதித்தனர். விளைவாக நாட்டின் பெருந்தொகை மக்கள் அல்லாடி நின்றனர். நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகளில் காத்திருந்து அலைக்கழிந்தனர்.

கடும் ஊழலும் மோசடிகளும் நிறைந்த பெற்றோலியக் கம்பனி ஊழியர்களின் இந்த நடவடிக்கை பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியமாக இருந்தது. இத்தருணத்தில் எண்ணெய் விநியோகத்தை இராணுவத்திடம் ஒப்படைப்பதற்கு ஜனாதிபதி எடுத்த தீர்மானம் நெருக்கடியை முடிவுக்குக் கொண்டு வந்தது. ஆனாலும், ஜனாதிபதியினால் முடிவுக்குக் கொண்டு வர முடியாத பல அரசியல் பிரச்சினைகள் நீடிக்கவே செய்கின்றன. சைட்டம் அதில் முக்கியமானது.

கடந்த வாரம் அரசாங்க மருத்துவ /அதிகாரிகள் சங்கம் மேற்கொண்ட அடையாள வேலை நிறுத்தத்தால் பல்லாயிரக்கணக்கான நோயாளிகள் பெரும் துயரங்களுக்கு ஆளாகினர். சைட்டத்தை தேசியமயமாக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு சுகாதார அமைச்சரோ அவரது அரசாங்கமோ வளைந்து கொடுக்கும் நிலையில் இல்லை.

மறுபுறம் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பல்கலைக்கழக சமூகம், இடதுசாரிகள் என் போரும் தமது போராட்டத்தைக் கைவிடும் நிலையில் இல்லை. இந்த இழுபறியினால் இறுதியில் பாதிக்கப்படப் போவது பொதுமக்கள் என்ற கசப்பான உண்மை அரசாங்கத்திற்கு பிரதிகூலமாகவே அமையும்.

ஆகஸ்ட் 02 ஆம் திகதியிலிருந்து சைட்டம் அரசமயமாக்கப்பட வேண்டும் என்றும் வேறு பல கோரிக்கைகளை முன்வைத்தும் நாடளாவிய ரீதியிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இணைந்த எதிர்க்கட்சியினர் தமது கடந்த கால நீசத்தனங்களை மூடி மறைத்து சைட்டம் நெருப்பில் குளிர்காய எத்தனிக்கின்றனர். ஏதோ அவர்கள் உத்தமர்கள் போன்று அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டத்தில் கிளர்ந்தெழுகின்றனர்.

மைத்திரி அரசுக்கு தலையிடியைக் கொடுக்கும் மூன்றாவது பூதம் இலங்கை மின்சார சபையிலிருந்து கிளர்கின்றது. திடீர்த் திடீரென நாட்டின் பல பாகங்களிலும் மின்சாரம் துண்டிக்கப்படுகின்றது. கரவலபிடிய மின்சார உற்பத்தி இயந்திரக் கோளாறே இதற்குக் காரணம் என பிரதியமைச்சர் அஜித் பெரேரா பாராளுமன்றத்தில் கூறுகின்றார்.




வடக்கிலும் கிழக்கிலும் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினாலும் பொதுவாக நாட்டில் ஏற்பட்டுள்ள மழைத் தட்டுப்பாட்டினாலும் மின் உற்பத்தி கணிசமாகக் குறைந்துள்ளது. இதனால் குறிப்பிட்ட நேரம் பல இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டு வருகின்றது. இது அரசாங்கத்தின் திட்டமா அல்லது மின்சார சபையில் பணியாற்றும் மஹிந்த ஆதரவு அணியின் சதித் திட்டமா என்ற குழப்பம் பொது மக்களுக்கு உள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் ஏற்பட்டுள்ள கடும் வரட்சியினால் இலட்சக்கணக்கானோர் நிர்க்கதிக்கு உள்ளாகியிருக்கின்றனர். குடிநீர் தட்டுப்பாடு தேசிய பிரச்சினையாக மாறியுள்ளது.

இதற்கிடையில், கடந்த மூன்று மாதங்களில் பதிவாகியுள்ள டெங்கு தொற்றுக்கு உட்பட்டோரின் தொகை பெருக்கல் விருத்தியில் சென்று கொண்டிருக்கிறது. கடந்த ஆறு மாதங்களில் 115,605 பேர் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர். தலைநகரம் கொழும்பே முன்னணியில் உள்ளது. அங்கு 24,676 பேரும் கம்பஹாவில் 20,441 பேரும் களுத்துறையில் 6,886 பேரும் டெங்குவினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

- சைட்டத்திற்கு எதிராக தொடர்ந்தும் போராட்டம்
- கடன் சுமையால் பொருளாதாரம் பின்னடைவு
- மின் உற்பத்தியில் வீழ்ச்சி
- டெங்கு நோயாளர்கள் பெருக்கம்
- வைத்தியர்களின் மறியல் போராட்டம் தொடர்கிறது.
- மத்திய வங்கி பிணைமுறி விவகாரம் சூடுபிடிக்கின்றது
- தேர்தல் வாக்குறுதி எதுவும் நிறைவேற்றப்படவில்லை.
- இணைந்த எதிரணி குளிர்காய்கின்றது

மே மாதத்தில் 15,886 ஆக இருந்த நோயாளர் தொகை, ஜூனில் சடுதியாக 24,978 ஆக உயர்ந்து, ஜூலையில் 29,055 ஆக அதிகரித்துள்ளது. டெங்குவைக் கட்டுப்படுத்த சுகாதார அமைச்சின் நோய்த் தொற்றியல் பிரிவும் கல்வியமைச்சும் இணைந்து பல்வேறு வேலைத் திட்டங்களை முன்னெடுக்கின்ற போதும் டெங்கு அபாயம் நாட்டில் ஒழியவில்லை.

பொலன்னறுவையில் முழு நாட்டிற்கும் தேவையான அளவு அரிசி சேமிப்பில் உள்ளது. எனவே, அரசியை இறக்குமதி செய்ய வேண்டாம் என பொலன்னறுவை [illegible] அரசாங்கத்தைக் [illegible]

கம் செவிடன் காதில் ஊதிய சங்கு போல் அமைதியாக இருக்கிறது.

இத்தனை நெருக்கடிகளினதும் உச்சமாகவும் உணர்ச்சி வேகம் நிறைந்ததாகவும் இன்று பரப்பரப்பாகப் பேசப்படும் விவகாரம் மத்திய வங்கி பிணைமுறி ஊழல் ஆகும். ஆங்கில, தமிழ், சிங்கள ஊடகங்களில் அர்ஜுன் எலோய்சியஸ் என்ற பெயர் பரவலாக அடிபடுகின்றது.

அர்ஜுன் மஹேந்திரன் மத்திய வங்கியின் ஆளுநராகக் கடமையாற்றிய காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் பிணைமுறி ஊழல் குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்வதற்கு ஜனாதிபதி நியமித்த ஆணைக்குழு வெளிவிவகார அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு விடுத்த அழைப்பாணைக்கு அவர் இன்னும் பதிலிறுக்கவில்லை. இத்தருணத்தில் ரவி கருணாநாயக்க மீதான குற்றச்சாட்டுக்கள் அடுக்கடுக்காக முன்வைக்கப்படுகின்றன. அவை ஆதார பூர்வமானவை எனவும் வலுவானவை எனவும் சுதந்திரக் கட்சி அங்கத்தவர்கள் அடித்துக் கூறுகின்றனர்.

ரவி மனச்சாட்சியும் நற்குணமும் உள்ள ஓர் மனிதர் என்றால் அவர் பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என விளையாட்டுத் துறை அமைச்சரும் பிரபல தொலைக்காட்சிப் பாடகருமான தயாசிறி தயாசேகர ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கி ஆளுநராக அர்ஜுன் மஹேந்திரனை நியமித்தது பிரதமர் ரணில். அப்போது நிதியமைச்சராக இருந்தவர் ரவி கருணாநாயக்க. மஹேந்திரன் மருமகன் அர்ஜுன் அலோய்சியஸும் இந்த ஊழல் மோசடியில் சம்பந்தப்படுகிறார். பல கோடிப் பெறுமதியான அரச நிதியை முறைகேடாகக் கையாண்டுள்ளார் என்ற குற்றச்சாட்டை அர்ஜுனவும் அவரது மருமகனும் முன்னாள் நிதியமைச்சரும் எதிர்கொண்டுள்ள நிலையில், ரணிலைப் பகைத்துக் கொள்ள முடியாத திண்டாட்டத்தில் ஜனாதிபதி உள்ளார் என்று அதே ஆங்கிலப் பத்திரிகை எழுதுகின்றது.

தற்போதைய இலங்கை அரசாங்கம் எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளைக் கூர்ந்து அவதானிக்கும்போது இலங்கையின் அரசியல் எதிர்காலம் எங்கு போய் முடியும் என்ற கேள்வி கறாராக எழுகின்றது. இருக்கும் பிரச்சினைகளை வினைத்திறனுடன் கையாள முடியாத ஒரு கையாலாகாத அரசாங்கம் புதுப் புதுப் பிரச்சினைகளை உருவாக்கிக் கொண்டே இருக்கின்றது. மக்களை மிகுந்த அசௌகரியத்திற்கும் தொந்தரவிற்கும் ஆளாக்கும் இன்றைய இத்தனை பிரச்சினைகளும் வெறும் கட்சி அரசியலோடும் தனிநபர்களோடும் தொடர்பானவை. அப்பிரச்சினைகளுக்கு இறுதியில் விலை கொடுப்பவர்கள் மக்கள் என்பதுதான் பெரும் வாய்ப்புக்கேடாகும்.

முறைப்பாடுகள், ஆணைக்குழுக்கள், அறிக்கைகள் என்றவாறு நகரும் இலங்கை அரசியலில் நம்பிக்கைக்குரிய எந்த மாற்றமும் நிகழவில்லை. மஹிந்த அரசாங்கத்தின் மீது மக்கள் கொண்டிருந்த வெறுப்பையும் அதிருப்தியையும் மூலதனமாகப் பயன்படுத்திக் கொண்டு கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்ற பின் உருவாக்கிய சந்தர்ப்பவாதக் கூட்டு மெல்ல மெல்ல கலையத் தொடங்கியுள்ளது.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்போம், புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவோம், கல்வித் துறையிலுள்ள நெருக்கடிகளைத் தீர்ப்போம், 100 நாட்களுக்குள் எடுப்போம் கவிழ்ப்போம் என்று வாய்ச்சவாடல் விடுத்த இன்றைய ஜனாதிபதியும் பிரதமரும் பிரச்சினைகளுக்கு முன்னால் வாய் பிழந்து நிற்கின்றனர்.

நல்லாட்சியின் இரண்டரை ஆண்டுகளில் மக்களுக்குக் கிடைத்த நிவாரணம் என்ன? தேசிய பிரச்சினைகளுக்கு முன்வைக்கப்பட்ட தீர்வு என்ன?

கடந்த ஆட்சியில் ஊழல் பேர்வழிகள் எவரேனும் தண்டிக்கப்பட்டனரா? நிதிக் குற்ற புலன் விசாரணைப் பிரிவு உருவாக்கப்பட்டதன் அர்த்தம் என்ன? எவென்ட் கிராண்ட் மிதக்கும் ஆயுதக் கப்பலுக்கு என்ன நடந்தது?

தோண்டி எடுக்கப்பட்ட வஸீம் தாஜுதீனின் பிரேதம் மீண்டும் புதைக்கப்பட்டது போல், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த அத்தனை விவகாரங்களும் புதைக்கப்பட்டு விட்டன. மக்கள் ஆவலோடு எதிர்பார்த்திருந்த அரசியல் மாற்றங்களெல்லாம் கிடப்பில் போடப்பட்டு விட்டன.

ஏற்கனவே நாடு பெரும் கடன் சுமையினால் திணறி வருகின்றது. மக்களின் அன்றாட வாழ்க்கைச் செலவீனம் ஏவுகணைகள் போல் உயர்ந்து செல்கின்றது. கல்வித் துறையில் பாரிய பிரச்சினைகள் இருந்து வருகின்றன. அரசியல்வாதிகளின் ஊழலும் மோசடியும் இன்னும் ஓயவில்லை. இத்தனைக்கும் மத்தியிலேதான் நல்லாட்சி அரசாங்கம் அல்லாடி நிற்கின்றது. ஆட்டங் காணத் தொடங்கியுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற வகையில் மைத்திரியின் தலைமையில் புதிய அரசாங்கம் உருவாக வேண்டும் என சுதந்திரக் கட்சியினரும் விலகிச் சென்றால் தனியாட்சி அமைப்போம் என்று ஐக்கிய தேசியக் கட்சியினரும் சூளுரைத்து வருகின்றனர்.

செப்டம்பர் ஒரு தீர்மானகரமான மாதமாக இருக்கப் போகின்றது என்பதில் சந்தேகமில்லை. 106 ஆசனங்களைக் கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியா, 95 ஆசனங்களைக் கொண்ட சுதந்திரக் கட்சியா என்ற இழுபறியில் சிறு கட்சிகள் சிக்குண்டு சீரழியப் போகின்றனவா? 16 ஆசனங்களைக் கொண்ட TNA எந்தப் பக்கம் திரும்பப் போகின்றது. 6 ஆசனங்களைக் கொண்ட JVP மஹிந்த தலைமையிலான இணைந்த எதிர்க்கட்சியுடன் இணையுமா? இவையெல்லாம் நிச்சயமற்ற கேள்விகள்.

நிறைவேற்று அதிகார முறைமை ஒழிக்கப்பட வேண்டும் என்ற மூல மந்திரத்திலிருந்தே சோபித தேரர் சமூக நீதிக்கான இயக்கத்தை ஸ்தாபித்தார். அது நல்லாட்சி என்ற ஒரு புதிய அத்தியாயத்தை இலங்கை அரசியலில் எழுத முயற்சித்தது. 2015 தேர்தல்களில் பெரும்பான்மை மக்கள் அதற்குப் பின்னணியில் இருந்தனர். இரண்டரை ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று அத்தனையும் உடைந்த கனவாயிற்று.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களை எதிர்கொண்டுள்ள இத்தருணத்தில் மீளவும் இனவாதமும் மதவாதமம் தலைவிரித்து தாண்டவமாடத் தொடங்கியுள்ளன. காத்தான்குடியில் தொழுகையில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் நூற்றுக்கணக்கானோரை சுட்டுக் கொல்வதற்குக் கட்டளையிட்ட கருணா அம்மான் முஸ்லிம் ஆதிக்கத்திலிருந்து கிழக்கை மீட்பதற்கு தமிழர்கள் ஒன்றுபட வெண்டும் என்கிறார்.

கூட்டு எதிரணிக்கு இதன் பின்னர் முஸ்லிம் வாக்குகள் தேவைப்படாது என்கிறார் விமல் வீரவன்ச. கடந்த வாரத்தில் அரசாங்கம் வெளியிட்ட 83 கறுப்பு ஜூலை கலவரம் குறித்த ஓர் அறிக்கை இவை எல்லாவற்றையும் விட சுவாரஸ்யமானது. சட்டம், ஒழுங்கு அமைச்சு பாராளுமன்றில் சமர்ப்பித்த அந்த அறிக்கையில் ஜூலைக் கலவரத்தில் கொல்லப்பட்ட மொத்தத் தமிழர்களின் எண்ணிக்கை 7 என்று தெரிவித்துள்ளது. ஆக, 83 ஜூலையில் நடந்தது இனக்கலவரமா அல்லது குடும்பச் சண்டையா என்பது குழப்பமாக உள்ளது.

இந்த அறிக்கைகளும் உணர்ச்சிகரமான கூற்றுக்களும் குரூரமான அரசியல் உள்நோக்கத்தைப் பிரதிபலிக்கின்றன. தேர்தல் காலங்களில் சந்தர்ப்பவாதக் கூட்டுக்களை உருவாக்கும் கட்சிகள் இப்போது இனவாதத்தைக் கிளறுகின்றன. எல்லா அதிகாரங்களையும் கொண்டுள்ள ஜனாதிபதியோ அவற்றை முறையாகப் பிரயோகிக்கத் தெரியாமல் திண்டாடுகின்றார்.

அமைச்சரவையில் பிரேரணைகளைக் கொண்டு வந்து அங்கீகாரம் பெறுவது அவரது அகிம்சை மனோநிலைக்கு தெளிவான சான்று. ஆனால், நிறைவேற்று அதிகார முறையை இலங்கையின் தேச முன்னேற்றத்திற்குப் பிரயோகிப்பதற்கு அது சரியான வழியல்ல. அமைச்சரவையில் ஏற்கனவே தேசிய பொருளாதாரத்தைக் கையாள்வதற்கான ஒரு குழு பிரதமர் தலைமையில் நிறுவப்பட்டுள்ளது. கடந்த இரண்டரை ஆண்டுகளாக தேசிய பொருளாதாரத்தைத்

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 1977 புரட்சிக்கு 40 வயது

1977ல் இந்நாட்டில் ஏற்பட்ட புரட்சிகரமான மாற்றம் ஆகஸ்ட் 04ம் திகதி கொண்டாடப்படவுள்ளது. 1977ல் ஏற்பட்ட ஆட்சி மாற்றம் ஒரு பெரும் புரட்சியாக நோக்கப்படுகிறது. 1977 ஆட்சி மாற்றத்தினை தொடர்ந்தே திறந்த பொருளாதாரம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தியாவும் சீனாவும் பிரித்தானியாவும் சுதந்திரப் பொருளாதார கொள்கையில் நுழைய முன் இலங்கை சுதந்திர பொருளாதாரக் கொள்கையைப் பின்பற்றியது.

எமது நாட்டில் குறைபாடுகள் இல்லாத அரசியல் தலைவர்கள் எவரும் இல்லை. 1977 புரட்சியில் பாரிய குறைபாடுகள் காணப்பட்ட போதிலும் அது இந்நாட்டிற்கு அதிகளவிலான நன்மைகளையே பெற்றுத் தந்துள்ளது. 1977 இற்கு முன்பு காணப்பட்ட மூடிய பொருளாதாரக் கொள்கை நிலவிய காலத்தையும் 77 திறந்த பொருளாதார கொள்கைக்கு பின்பு இலங்கை வெற்றி கொண்ட விடயங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கும் போதே யதார்த்தத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது.

1977 இற்கு முன்பு காணப்பட்ட தோட்டங்கள் அனைத்தையும் அரசாங்கம் பெற்றது. தேயிலை, இறப்பர் தொழிற்சாலைகளின் மூலம் பெற்ற இலாபங்களிலிருந்து அதன் உரிமையாளர்கள் அரசாங்கத்திற்கு வரி செலுத்தினார்கள். அவ்வரிகளால் மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்ப முடிந்தது. ஆனால் பொறாமை, காழ்ப்புணர்வுகளை ஏற்படுத்தும் கோஷங்களைச் சொல்லி அரசாங்கம் அவற்றை கைப்பற்றியதன் மூலம் தன்னுடையது எனும் உரிமை வேலை செய்பவர்களுக்கு இருக்கவில்லை. அவை அரசாங்கத்தினுடையது என்கின்ற உணர்வே அவர்களிடம் காணப்பட்டது.

இதனால் மோசடிகளும் களவுகளும் அதிகரித்தன. அதனால் தோட்டப் பயிர்ச் செய்கையில் நஷ்டத்தை எதிர்கொண்டது. மக்களின் அடிப்படை வசதிகளை நிவர்த்திக்கவென ஒதுக்கப்பட்டிருந்த நிதியின் மூலம் நஷ்டங்கள் ஈடுசெய்யப்பட்டன.

இது தவிர, 1977இற்கு முன்னர் தனியார் துறையினரிடம் காணப்பட்ட பஸ் வண்டிகளும் அரசாங்கத்திற்கு எடுக்கப்பட்டது. அப்போது உருவாக்கப்பட்ட இலங்கை போக்குவரத்து சபையும் கோடிக்கணக்கில் நட்டத்தை எதிர்கொண்டது. மக்களின் பணம் இந்நஷ்டத்தை ஈடு செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டது.

முன்னர் காணப்பட்ட பொருளாதார இலாபங்கள் இலங்கைக்கு இல்லாமல் போனது. நாட்டின் வீழ்ச்சிக்கு அது காரணமானது. 1977முன்பு தொழில்களில் கோட்டா முறை காணப்பட்டது. "இது யாருடைய பணம்? தாசவின் பணம்" என்பதாக சத்தமிட்டு ஆர்ப்பாட்டம் செய்தது எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. தாச முதலாளிமார் போன்ற ஒரு சிலருக்கே அன்று கோட்டாக்கள் வழங்கப்பட்டது. அவர்கள் தயாரித்த சட்டையே நாட்டில் சிறந்த சட்டையாக காணப்பட்டது.

அன்று போட்டித்தன்மை இருக்கவில்லை. அன்று சீத்தை துணிகளை பெறுவதற்கும் வரிசையில் நிற்க வேண்டும். அதுவும் மண்ணெண்ணெய் வாசமுடைய சீத்தை துணி. போட்டிகள் இல்லை. வெளிநாடுகளிலிருந்து புதிய தொழில்நுட்பங்கள் வரவில்லை. அதற்கான கதவுகள் மூடப்பட்டிருந்தது.

வீதியில் அரிசி, மிளகாய்களை கொண்டு செல்ல முடியாது. வீதியில் பொலிஸார் சோதனை நடாத்தினார்கள். செவ்வாய் மற்றும் வெள்ளி தினங்களில் கடைகளில் சோற்றுப் பார்சல்களை விற்க முடியாது. இவ்விரண்டு நாட்களிலும் சோறு சாப்பிடுவது தடைசெய்யப்பட்டது. மணமகன் திருமணத்திற்கான ஆடையை எடுக்க வேண்டும் என்றால் திருமணத்தை ஏலவே பதிவுசெய்து பிரதேச செயலகத்திற்கு திருமணச் சான்றிதழை காண்பிக்க வேண்டும். நூறு பேரையும் விட அதிகமானவர்களை திருமண வீட்டிற்கு அழைக்க முடியாது. அப்படிப்பட்டதொரு யுகமே அன்று காணப்பட்டது.

1977ல் திறந்த பொருளாதார முறை அறிமுகப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட ஆரம்பித்தன. திறமையானவர்களுக்கு இடமளிக்கப்பட்டது. போட்டித்தன்மை உருவானது. அன்று கிராமத்தில் 10 பேரில் ஒருவருக்கே கடவுச்சீட்டு காணப்பட்டது. திறந்த பொருளாதாரத்தின் பின்னர் லட்சக்கணக்கானோர் வெளிநாடு சென்றார்கள். முதலீட்டினார்கள். முன்னேற்றமடைந்தார்கள். பாரம்பரிய குல முறை, வகுப்பு வாதங்கள் ஒழிய ஆரம்பித்தது.

வீடமைப்பு திட்டங்கள் உருவாக்கப்பட்டன. எமது அபிவிருத்திகளை பார்த்தே சிங்கப்பூர், சீனா போன்ற நாடுகள் முன்னேற்றமடைய ஆரம்பித்தது. இன்று சீனா எமக்கு உதவும் நிலைக்கு வந்துள்ளது. கட்சி, குல பேதமின்றி முன்னேற்றத்திற்கு சகலரும் உதவி செய்ய வேண்டும். அன்று அரசியலமைப்பு மாற்றப்பட வேண்டும் எனக் கூறியவர்கள் இன்று அரசியலமைப்பு மாற்றத்திற்கு எதிராக குரல் கொடுக்கிறார்கள். நாம் பிரச்சினைப்பட வேண்டியதில்லை.

இதுவொரு சிறிய நாடு. நாம் பிரச்சினைப்படாமல் ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்ப வேண்டும். இலங்கையில் இனவாதப் பிரச்சினை தலைதூக்கியமையினாலேயே இலங்கை பின்னடைவைச் சந்தித்தது என 10 வருடங்களுக்கு முன்னர் லீ குவான்யூ கூறினார். இக்குறைபாடுகளை நிவர்த்தி செய்து நாம் சரியான பாதையில் பயணிக்க வேண்டும்.

# மக்கள் ஒன்று திரண்டால் அதிகாரம் மக்கள் கையில்

எல்லா பேதங்களையும் மறந்து ராஜபக்ஷ அரசாங்கத்தை மாற்றி நல்லாட்சியை கொண்டு வந்த சமூகக் குழுமம் ஒன்று நாட்டில் இருந்தது. இவர்கள் தற்போது நல்லாட்சியில் சலிப்படைந்துவிட்டனர். நல்லாட்சியின் இரண்டு தலைவர்களும் சேர்ந்து தம்மை ஏமாற்றி விடுவர் என்ற எதிர்பார்ப்புத் தான் தற்போது இவர்களிடம் நிலவுகிறது. அரசியல் விஞ்ஞானத்தின்படி இலங்கையில் இருக்கும் முதிர்ச்சியடைந்த சமூகக் கட்டமைப்பாகத் தான் இந்த சமூகக் குழுமத்தை கருத முடியும். இவர்கள் வலுவிழந்து சோர்ந்து போய்விட்டால் அது நாட்டின் நிகழ்காலத்தில் மட்டுமன்றி எதிர்காலத்திலும் மோசமான தாக்கத்தை செலுத்தும்.

சமூக, அரசியல் அனுபவங்களின்படி, தனிப் பாணியிலேயே சமூக முதிர்ச்சி வளர்ச்சியடைகிறது. நிலச்சுவாந்தர் முறையிலும் மன்னராட்சியிலும் காலனித்துவ ஆட்சியிலும் மக்கள் ஒரே மாதிரியாக சிந்திக்கவில்லை. அது படிப்படியாக வளர்ச்சியடைந்திருந்தது.

முதலாவித்துவ முறைக்கு மாறியதன் பின்னர் தான் தேசிய அரசாங்கமும் தேசமும் உருவாகியது. மன்னர் முறையில் அரசாங்கம் இருந்தாலும் நில எல்லைகள் இருக்கவில்லை. போர்த்துக்கேயர் இங்கு வரும்போது இருந்த மூன்று ராஜ்யங்களுக்கும் கூட அடிக்கடி மாறும் தேச எல்லைகள் இருந்ததேயொழிய நிலையான எல்லைகள் இருக்கவில்லை. பிரித்தானியரின் காலத்திலேயே எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டன.

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குத் தேவையான தேசியத்தைக் கட்டியெழுப்புதல், முதிர்ச்சியடைந்த சமூகமொன்றிலேயே சாத்தியமாகும். இந்தியாவுக்கு இது சாத்தியமாகியது. ஆனால் இன்றுவரை இலங்கையில் இது சாத்தியமாகவில்லை. இந்தியா தனது சுதந்திரத்துக்கு ஊடாக இதனை அடைந்து கொண்டது. இந்தியத் தலைவர்கள் சுதந்திரப் போராட்டத்துடன் தேசிய உணர்வைக் கட்டியெழுப்பும் பணியையும் பிணைத்துவிடுவதில் வெற்றி கண்டனர்.

இந்த முதிர்ச்சி இலங்கைத் தலைவர்களுக்கு இருக்கவில்லை. இதனால் தேசிய உணர்வை பெறும் முதிர்ச்சி மக்களுக்கு நகர்த்தப்படவில்லை. எங்களது தலைவர்களது இயலாமை இங்கிருந்து தான் ஆரம்பிக்கிறது. இலங்கை சுதந்திரம் அடையும் போது தற்போதைய சமூகத்தின் அளவுக்கு அன்றிருந்த சமூகம் அறிவு பெற்றிருக்கவில்லை. இந்த மக்களை விட அப்போதைய தலைவர்கள் அறிவுள்ளவர்களாக இருந்தாலும் அது இந்தியத் தலைவர்களின் முதிர்ச்சிக்கு ஒப்பாகவில்லை. தேசிய உணர்வைக் கட்டியெழுப்புவதில் இவர்கள் விட்ட தவறினால் சுதந்திரமடைந்து 30 வருடங்களே ஆன நிலையில் உள்நாட்டு யுத்தம் தொடங்கி அது 30 வருடங்கள் நீடித்தது. இதனால் உண்டான மரண பயம், சமூகம் முதிர்ச்சி நிலைக்குப் போகாமல் தடுத்து ஒரே இடத்தில் தேக்கமடையச் செய்தது. இந்தச் சூழலில் அரசியல்வாதிகளும் அறிவற்ற, கட்டுக்கடங்காத, பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடிக்கின்றவர்களாக மாறினார்கள். இது சமூகம் முதிர்ச்சி அடைவதை மேலும் பலவீனப்படுத்தியது.

இவ்வாறு முதிர்ச்சி அடைவதற்கு வாய்ப்புக் கிடைக்காத சமூகம், அறிவு பூர்வமாக சிந்திப்பதை விட்டு, மூட நம்பிக்கைகளிலும் மத விவகாரங்களிலும் தலைக்கு மேலே மூழ்கியது. மக்களின் கவனமெல்லாம் நாட்டில் நடந்தேறிய பயங்கரவாத நடவடிக்கைகளில் ஆழ்ந்து போயின. ஊடகங்களும் இவற்றுக்கு முக்கிய வகிபாகம் வழங்கியது. இதனால் நாட்டிலே ஊழல் நடப்பதையோ அரசியலும் அரசியல்வாதிகளும் அழுகி நாற்றமடிப்பதையோ மக்கள் கவனிக்கவில்லை.

பிரபாகரன் தோற்கடிக்கப்பட்டு மக்கள் மரண பயத்தில் இருந்து மீண்டதன் பின்னர் நாட்டின் நிலைமைகள் மாறத் தொடங்கியன. இப்போது தான் நாட்டிலே நடக்கின்ற ஊழலையும் மோசடியையும் மக்கள் கண்டுகொண்டார்கள். இவை அரிதாக நடப்பதாகவன்றி ஆட்சியாளர்களின் அன்றாட நிகழ்வுகளாக மாறியதனால் மக்கள் வீரபுருஷராகக் கருதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மீது புத்திஜீவிகள் விரக்தி அடையத் தொடங்கினார்கள். இறுதியில் மஹிந்தவின் குடும்ப ஆட்சியை இல்லாதொழிப்பதன் அவசியத்தை அவர்கள் உணர்ந்தார்கள். இந்த எதிர்ப்பு மனப்பான்மை சோபித ஹிமி உருவாக்கிய நீதியான சமூகத்துக்கான இயக்கத்தின் பால் மக்களை ஈர்த்தது.

சோபித ஹிமி தனது இயக்கத்தை ஆரம்பிக்கும் பொழுது மக்கள் முன்னரை விட தெளிவு பெற்றிருந்தார்கள். படித்த மக்கள் நாட்டில் நடக்கின்ற விடயங்களுக்கூடாக பல விடயங்களை தெரிந்து வைத்திருந்தார்கள். தேங்கி இருந்த மக்களின் முதிர்ச்சி நிலை படிப்படியாக வளர்ச்சியை நோக்கி




நகரத் தொடங்கியது. ஆனாலும் சமூகத்தின் முதிர்ச்சி நிலையின் வளர்ச்சி, மொத்தமான சீர்குலைவை விளங்கிக் கொள்ளக் கூடிய உயர் நிலையில் அல்லாமல் ஆட்சியை மாற்றுதல் என்ற குறுகிய வட்டத்திலேயே இருந்தது.

நவீன உலகுக்கு மக்கள் மாற்றமடையும் பொழுது, வரலாற்றில் முதற் தடவையாக நாட்டின் படித்த மக்கள் நாட்டுத் தலைவர்களின் முதிர்ச்சிக்குச் சமனான முதிர்ச்சியைப் பெற்றார்கள். சுதந்திரம் அடையும் போது தலைவர்களுக்கும் படித்தவர்களுக்கும் இடையில் இருந்த இடைவெளி, 80களில், 90களில், 2000 ஆம் ஆண்டுகளில் படிப்படியாகக் குறைந்து, 2010 இல் சோபித ஹிமி இயக்கம் ஆரம்பிக்கும் போது சமநிலைக்கு வந்தது. இதனால் அரசியல் தலைவர்களுக்கு மக்களை எதிர்கொள்ள முடியாமல் போனது. விளைவாக மக்களுக்கு ஆணையிடுகின்ற பழைய நிலையிலிருந்து மாறி மக்களின் குரலுக்கு செவிசாய்க்க வேண்டிய நிலைக்கு முதற்தடவையாக அரசியல் தலைவர்கள் மாறினார்கள்.



மஹிந்தவை ஆட்சியில் இருந்து மாற்றுவதற்கு முன்வைத்த திட்டத்தின் ஊடாக பாரிய மாற்றங்களை புத்திஜீவிகள் சமூகம் எதிர்பார்த்தது. ஆனாலும் இதனுடைய செயற்பாடுகள் மஹிந்தவை ஆட்சியிலிருந்து மாற்றியதுடன் ஸ்தம்பிதமடைந்தது. முன்வைக்கப்பட்ட திட்டத்தின் குறைந்த அளவைத்தானும் பூரணமாக நடைமுறைப்படுத்த நல்லாட்சியால் முடியவில்லை. நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை ஒழித்தல் என்ற மக்களின் எதிர்பார்ப்பு நிறைவேறவில்லை.

ஜனாதிபதி சுதந்திரக் கட்சியின் தலைவராதல், சுதந்திரக் கட்சியின் சிலரை ஆளுந் தரப்புக்கு ஈர்த்தல், ராஜபக்ஷக்களின் ஊழல்களை வாக்களித்தபடி விசாரிக்காதிருத்தல், பாராளுமன்ற உறுப்பினர்களின் வசதி வாய்ப்புக்களை அதிகரித்து மக்கள் மீது சுமையை அதிகரித்தல் போன்ற விடயங்களினால் அர்ப்பணிப்புடன் மாற்றத்துக்காக உழைத்தவர்கள் நல்லாட்சியில் விரக்தியடைந்திருக்கிறார்கள். அதேபோல ராஜபக்ஷ அலையை இல்லாதொழித்ததன்றி ராஜபக்ஷ பரிவாரங்களை களையத் தவறியதனால் தோற்கடிக்கப்பட்ட சக்திகள் மீண்டும் தலையெடுப்பதற்கு முயற்சிக்கின்றன.

இந்தத் தருணத்தில் இலங்கையர் எதிர்பார்க்கும் வரலாற்று மாற்றத்தைக் கொண்டுவரும் நிலையில் நல்லாட்சி அரசாங்கம் இல்லை. விளக்கம் கொடுப்பதிலும் முன்வைப்பதிலும் சில எளிய மாற்றங்கள் நடந்திருந்தாலும் மொத்தமான வடிவத்தில் ஆழமான எந்த மாற்றங்களையும் அதனால் கொண்டுவர முடியவில்லை. இதற்கு மாற்றீடாக முன்கொண்டுவரக்கூடிய மூன்றாந் தரப்பும் இப்போது கிடையாது. தோற்றவர்களுக்கு மீண்டும் அதிகாரத்துக்கு வருவது அழிவுக்கே இட்டுச் செல்லும் என்பதால் அவர்களுக்கு மீண்டும் வாய்ப்பளிக்கவும் முடியாது. இந்த நிர்க்கதி நிலைமையில் மாற்றத்துக்காக உழைத்தவர்களும் விரக்தி அடைந்து விட்டால் சமூகத்தில் வளர்ச்சியடைந்து வருகின்ற முதிர்ச்சி நிலை மீண்டும் தேக்க நிலைக்குப் போய்விடும்.

முதிர்ச்சியடைந்த இந்த சமூகக் கட்டமைப்பை செயலிழந்து போகாமல் பாதுகாப்பது தான் தற்போது முன்னெடுக்க வேண்டிய பணி. நாட்டை முன்னகர்த்திச் செல்லக் கூடிய மூன்றாந்தரப் பொன்று இல்லையென்றால் ஒரே இடத்தில் தேங்கிப் போன அரசாங்கமொன்றைத் தெரிவு செய்வதற்கு புத்தியுள்ள மக்கள் தள்ளப்படுவார்கள். தோற்கடிக்கப்பட்டவர்கள் மீண்டும் வெல்வதிலிருந்து இவர்களால்தான் பாதுகாக்க முடியும்.

இந்த நாகரிக சமூகத்தை செயலிழந்து போகாமல் ஆக்கபூர்வமானதாக மாற்றக் கூடிய சமூக அசைவியக்கம் ஒன்றுதான் தற்போது தேவையாக இருக்கிறது. இதுதான் நாட்டின் தற்போதைய நெருக்கடியைத் தீர்ப்பதற்கான வழியாகவும் அமைய முடியும். இந்த சமூக அசைவியக்கத்துக்கான சட்டகத்தை அமைப்பதில் சில விடயங்கள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

மக்களுக்கு முன்பிருந்த சில விலங்குகளை தளர்த்துவதற்கு நல்லாட்சியால் முடிந்ததே தவிர நாட்டின் நெருக்கடிக்கான தீர்வை முன்வைக்கும் சிற்பிகளாகத் தொழிற்படுகின்ற ஆற்றல் அவர்களுக்கில்லை. நல்லாட்சித் தலைவர்கள் நாட்டின் பிரச்சினைகளை ஆழமாக அறிந்து, புரிந்து வைத்தவர்கள் அல்லர். இந்த நெருக்கடியை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தங்களும் அவர்களிடம் இருக்கவில்லை. ஆட்சிக்கு வந்த பின்னரேனும் நிலைமைகளை சரிவரப் புரிந்து கொண்டவர்கள் அல்ல அவர்கள். அவர்கள் முக்கியமாகக் கருதிய ஒரே விடயம் ஆட்சியைக் கைப்பற்றுவதுதான்.

நாட்டில் நடந்த துர்ப்பாக்கிய நிகழ்வுகள் பற்றிய உண்மையான கவலையோ, கடுமையான தாக்கங்களோ அவர்களிடம் இருப்பதாகத் தெரியவில்லை. இரண்டு முக்கிய தலைவர்களும் பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தவர்களாக கருதப்பட முடியாதவர்கள் என்றாலும், அவர்களது அரசியல் உடன்பிறப்புக்கள் செய்கின்ற மோசடிகளை சகித்துக் கொள்வதற்கு இவர்கள் பழகிப் போயிருக்கிறார்கள். இதனால் ஊழல் மோசடிகளை இல்லாதொழிப்பதற்கான தேவையை இவர்களிடம் காணமுடிவதில்லை.

இலங்கையின் மரபு ரீதியான கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் வரலாற்றில் இருந்து வழக்கொழிந்து வருகிறார்கள். நாடு எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளுக்கு இந்தக் கட்சிகளும் அவற்றின் தலைவர்களும் ஏறக்குறைய பங்களிப்புச் செய்திருக்கிறார்கள். இந்தக் கட்சிகள் அனைத்தும் நாட்டை ஒளிமயமாக்குவதை விட இருளடையவே செய்திருக்கிறார்கள். அன்பையும் கருணையையும் அன்றி கோபத்தையும் குரோதத்தையுமே இவர்கள் விதைத்திருக்கிறார்கள். மக்களை ஒன்றிக்கச் செய்வதை விட பிரிவினையையே உருவாக்கியிருக்கிறார்கள். எந்தப் பிரச்சினைக்கும் இவர்களால் தீர்வுகளை முன்வைக்க முடியவில்லை. நாட்டின் வங்குரோத்து நிலை இந்தக் கட்சிகளின் வங்குரோத்து நிலையின் பிரதிபிம்பமாகவே இருக்கிறது.

இலங்கை முதலாளித்துவ முறைமைக்கு மாறியதன் பின்னரில் இருந்துதான் தேசிய உணர்வைக் கட்டியெழுப்புதல் அசாத்தியமாகியது. இதனால் இன, குல, மத பேதங்களை முன்வைத்து முரண்பாடுகள் தோன்றுவதை தவிர்க்க முடியாமல் போய்விட்டது. சுதந்திரத்துக்காக உழைத்த எமது தலைவர்களுக்கும் அதிகாரமே தேவைப்பட்டது. இதனால் தேசிய அரசாங்கமொன்றுக்குத் தேவையான தேசிய உணர்வை கட்டியெழுப்புவதற்குரிய முதிர்ச்சியை வளர்ப்பதற்கு இவர்கள் முயற்சிக்கவில்லை. இந்தியத் தலைவர்களுடன் ஒப்பிடும் பொழுது சுதந்திர வீரர்களாகக் கருதப்படும் எமது தலைவர்களை அறிவீனர்களாகவே கருத வேண்டியிருக்கிறது.

சுதந்திரம் பெறும் போது இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பதற்கு முட்டுக்கட்டையாக இரு பிரிவினர் இருந்தனர். இன ரீதியாக சிறுபான்மையாக இருந்தவர்களும் குல ரீதியாக சிங்கள தமிழ் சமூகங்களிடையே சிறுபான்மையாக வாழ்ந்தவர்களுமே அவர்கள். இந்த இரு (இன, குல) சிறுபான்மைச் சமூகங்களும் முதலில் டொனமூர் ஆணைக்குழுவிடமும், பின்னர் சோல்பரி ஆணைக்குழுவிடமும், இலங்கை இன்னும் சுதந்திரம் வழங்கப்படும் நிலையில் இல்லை என்று தெரிவித்தனர். சுதந்திரத்தின் மூலம் சிங்களப் பெரும்பான்மைக்கு அதிகாரம் கிடைத்து விட்டால் தாம் இன்னல்களுக்கு ஆளாக நேரிடும் என்ற கருத்தை சிறுபான்மை இனத் தலைவர்கள் முன்வைத்தனர். சிங்கள தமிழ்ச் சமூகங்களின் மேட்டுக்குடிகளுக்கு அதிகாரம் கிடைத்தால் தாங்கள் பாதிக்கப்படுவதாக தாழ்ந்த சாதியினர் முறையிட்டனர்.

சுதந்திர இலங்கையில் வாழப்போகும் அனைவருக்கும் பாகுபாடின்றி சமனான உரிமைகளும் கௌரவமும் வழங்கப்படுவதை (பக்.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாற்றம் இன்றேல் ஐ.தே.க.வுக்கு எதிர்காலம் இல்லை

**ஜனாதிபதி சட்டத்தரணி மைத்ரீ குணரத்ன**
பொதுச்செயலாளர், ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி

நேர்காணல்: ஹெட்டி றம்ஸி

- **தற்போதைய அரசியல் செயற்பாடுகள் குறித்து...**

தற்பொழுது நாம் 'ஐக்கிய தேசிய சுதந்திர முன்னணி' எனும் பெயரில் புதிதாக கட்சியொன்றை பதிவுசெய்துள்ளோம். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உபாலி அமரசிறி கட்சியின் தவிசாளராகவும் பொதுச் செயலாளராக நானும் (மைத்ரி குணரத்ன) உள்ளேன். ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவத்தில் அதிரிப்தியுற்றவர்களை இணைத்துக்கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகிறது. எதிர்வரும் காலத்தில் மாநாடொன்றை கூட்டி கட்சியை பகிரங்கப்படுத்த உள்ளோம்.

- **புதிதாக கட்சியொன்றை பதிவுசெய்தமைக்கான காரணம் என்ன?**

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் தொடர்பில் இன்று பெரும்பாலானவர்கள் திருப்திகொள்வதில்லை. கட்சி தொடர்பில் அதிருப்தி கொண்டவர்கள் இன்று கட்சியை விட்டும் காணாமல் போயுள்ளனர். 1977 இல் ஐ.தே.க. 5/6 பெரும்பான்மை பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றியது. சிறப்பானதொரு வெற்றியின் மூலமே ஐ.தே.க. அதிகாரத்திற்கு வந்தது. இவ் வெற்றியின் மூலம் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுத்து பொருளாதாரத்தை மேம்படுத்தினார் ஜே.ஆர்.

ஆனால் இன்றைய நிலை மிகவும் பரிதாபகரமாக உள்ளது. ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி இன்று 1/6 ஐயும் விட குறைந்த பலத்துடன் உள்ளது. இன்று அவரது 40 ஆண்டுகால அரசியலைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் கட்சியின் நிலை அந்தோ பரிதாபம்! கொண்டாடுவதற்கு அங்கு ஒன்றுமில்லை. ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்த வேண்டிய தருணம் இது.

1994 இல் அவர் கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றதும் அவரைக் கட்சியின் தலைமைப் பதவியிலிருந்து சதாவும் நீக்க முடியாத அமைப்பில் ஜனநாயக விரோதமான முறையில் கட்சியின் யாப்பை மாற்றியமைத்தார். அன்று முதல் ஐ.தே.க.வினை விட்டும் ஆதரவாளர்கள் விலகிச் செல்ல ஆரம்பித்தார்கள். அது இன்றும் தொடர்ந்தவண்ணமுள்ளது.

ரங்ஜன் ராமநாயக்கவுக்கு நடப்பதை பாருங்கள். கட்சி ஊழல் மோசடிகளுக்கு எதிராகச் செயற்படுவதில்லை என அவர் கட்சிக்குள் இருந்துகொண்டு குரல் எழுப்புகிறார். அவரும் கட்சியை விட்டு செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுவா ஜனநாயகம்? கட்சிக்குள் 50 வீதமாவது ஜனநாயகம் காணப்பட வேண்டும்.

ரணில் விக்ரமசிங்க போன்ற ஒருவர் பிரதமராக இருப்பது இந்நாட்டின் துரதிஷ்டம். அவர் இருக்கும் வரையில் ஐ.தே.க.வுக்கு தலைதூக்க முடியாது. இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ஐ.தே.க.வுக்கு வேட்பாளர்களை களமிறக்க முடியாமல் போனது. 2009 இல் சரத் பொன்சேகாவையும் 2015 இல் மைத்திரிபால சிறிசேனவினையும் களமிறக்கியது. ரணில் விக்ரமசிங்கவும் அவருடைய சகாக்களும் இணைந்து கட்சியை வங்குரோத்து நிலைக்குத் தள்ளியுள்ளனர்.

ஐக்கிய தேசிய கட்சி என்பது சகல இனங்களையும் ஒன்றிணைக்கும் கட்சி. ஆனால் கிழக்கு மாகாணத்தின் ஐ.தே.க. வாக்குகள் ரவூப் ஹக்கீமுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. மலைநாட்டு வாக்குகள் தொண்டமானுக்கு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு குத்தகைக்கு வழங்கியே ஐ.தே.க.வை உயிர்ப்பித்து வருகிறார்கள். இதனை நாம் எதிர்க்கின்றோம். ஐ.தே.க.வுக்கென முஸ்லிம் மக்கள் உள்ளார்கள். தமிழ் மக்களும் உள்ளார்கள். அவர்களுடன் பயணிக்க முடியும்.

- **உங்களது கட்சி தேர்தல்களில் தனித்து போட்டியிடும் எதிர்பார்ப்பில் உள்ளதா?**

தொகுதிவாரி முறையில் தேர்தலை நடாத்துமாறு நாம் ஜனாதிபதியை வலியுறுத்தி வருகின்றோம். யாரும் எதிர்பார்த்திராத வகையில் அவர் தனது அதிகாரங்கள்ள குறைத்துக் கொண்டார். இன்று இந்நாட்டில் சர்வாதிகாரியொருவர் உருவாக முடியாது. அதனால் நாம் அவரை மதிக்கின்றோம். அதுபோன்று அவர் தேர்தல் முறையை மாற்றுவதாகவும் வாக்குறுதியளித்தார்.

அரசியலமைப்பை மாற்றுமாறு இந்நாட்டில் எவரும் கோருவதில்லை. அது ரணில் விக்ரமசிங்கவின் பைத்தியச் செயல். அரசியலமைப்பை மாற்ற வேண்டும் என்றால் மீண்டும் கருத்துக் கணிப்புக்குச் செல்ல வேண்டும்.

கருத்துக் கணிப்புக்கு சென்றால் இவர் நிச்சயமாக தோல்வியை சந்திப்பார். தேர்தல் முறையை மாற்றுமாறே நாம் கோருகிறோம். அதற்கு ரணில் விரும்புவதில்லை. அநுர குமார திசாநாயக்க, மஹிந்த ராஜபக்ஷ, ரவூப் ஹக்கீம் மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு உறுப்பினர்கள் விரும்புவதுமில்லை. ஏன்? தேர்தல் முறை மாற்றப்பட்டால் பாராளுமன்றத்திற்கு தெரிவாகியுள்ள 98 வீதமானவர்களுக்கு வீட்டுக்குச் செல்ல நேரிடும். அவர்களுக்கு பதிலாக நன்கு படித்த, புத்திஜீவிகளே பாராளுமன்றத்திற்கு வருவார்கள். நாடு தொடர்பில் பற்றுள்ள சகலருக்கும் கூடுதல் செலவின்றி தேர்தலில் போட்டியிடலாம்.

தற்போதைய தேர்தல் முறையின் கீழ் போட்டியிட எனக்கு விருப்பமில்லை. நாம் போட்டியிட்டால் இயல்பாகவே திருடர்களாக மாறுவோம். அப்போது மக்களுக்கு சேவையாற்றும் வாய்ப்பு கிடைக்காது. தேர்தலில் போட்டியிட எமக்கு உதவியர்களுக்கு விசுவாசமாக நடந்து கொள்ளவே நேரிடும். அதனால் தேர்தல் முறையை மாற்றுவதே எமது கட்சியின் பிரதான குறிக்கோளாக உள்ளது. அதன் பின்னரே தேர்தலில் போட்டியிடுவது பற்றிச் சிந்திப்போம்.

- **புதிய தேர்தல் முறைக்கூடாக எவ்வாறு நல்லிணக்கத்தை கட்டியெழுப்பலாம்?**

தேர்தல் முறை மாற்றப்பட்டால் இன ஐக்கியம் உருவாகும். காரணம், இன்று ஒரு முஸ்லிம் முஸ்லிம்களின் வாக்குகளின் பின்னால் செல்கிறான். தமிழன், தமிழர்களின் வாக்குகளின் பின்னால் செல்கிறான். சிங்களவன், சிங்கள குல அடிப்படையிலான வாக்குகளின் பின்னால் செல்கிறான். இன்று வாக்குகள் பிரிந்துள்ளன.

> “ரணில் விக்ரமசிங்க போன்ற ஒருவர் பிரதமராக இருப்பது இந்நாட்டின் துரதிஷ்டம். அவர் இருக்கும் வரையில் ஐ.தே.க.வுக்கு தலைதூக்க முடியாது. இரண்டு ஜனாதிபதித் தேர்தல்களில் ஐ.தே.வு.க்கு வேட்பாளர்களை களமிறக்க முடியாமல் போனது. 2009 இல் சரத் பொன்சேகாவையும் 2015 இல் மைத்திரிபால சிறிசேனவினையும் களமிறக்கியது. ரணில் விக்ரமசிங்கவும் அவருடைய சகாக்களும் இணைந்து கட்சியை வங்குரோத்து நிலைக்கு தள்ளியுள்ளனர்.

புதிய முறை ஏற்படுத்தப்பட்டால் ஒரு தொகுதியில் சகல இனமக்களும் காணப்படுகிறார்கள். எனவே தெரிவு செய்யப்படுபவர் எல்லாவற்றையும் சமாளித்துச் செல்லக்கூடியவராகவே உருவாகிறார். 90 வீதம் சிங்களப் பெரும்பான்மையுள்ள பேருவலை ஆசனத்திலிருந்து ஒரு பாக்கிர் மாக்காரை பாராளுமன்றம் அனுப்ப முடியுமாக இருந்தால், பலாங்கொடையில் அபூசாலி எனும் ஒருவரை பாராளுமன்றம் அனுப்ப முடியுமாக இருந்தால் அதை விடவும் ஒரு சகவாழ்வு தேவைப்படுகின்றதா? அவன் முஸ்லிமாக இருப்பினும் எங்களுடைய ஒருவன் என்கின்ற உணர்வு சிங்களவனிடம் இருக்க வேண்டும்.

சகல இன மக்களும் கூட்டாக இணைந்து விட்டுக்கொடுப்புடன் [illegible] யுடனும் பணியாற்றக்கூடிய பாதுகாப்பானதொரு எதிர்காலம் எமக்கு இருக்க வேண்டும். இவ்வாறான சகவாழ்வு முறையே தொகுதிவாரி முறையின் கீழ் ஏற்படுத்தப்படுகிறது.

சகல இனவாதக் கட்சிகளையும் ஒதுக்கிவிட வேண்டும். தற்பொழுது இனவாதக் கட்சிகளின் காலம் முடிவடைந்துள்ளது. முஸ்லிம் காங்கிரஸ், தமிழ் காங்கிரஸ், ஜாதிக ஹெல உருமய போன்ற கட்சிகள் இன்று செல்லுபடியற்றதாகியுள்ளன. இவையெல்லா கட்சிகளும் இன்று தேசிய கொள்கையில் செயற்பட வேண்டும். இனவாதக் கட்சிகளுக்கு வாக்களிக்க வேண்டாம் என தமிழ், முஸ்லிம் மக்களுக்கு சொல்ல வேண்டும். சகல இன மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுக்கு வாக்களிக்குமாறே மக்களை வலியுறுத்த வேண்டும். இனங்களை பிரிக்கின்ற கட்சிகளை நாம் ஒதுக்கி விட வேண்டும்.

- **தற்பொழுது நீங்கள் ஐக்கிய தேசிய கட்சியில் அங்கம் வகிக்கும் நிலையில் போராடுகிறீர்கள். நீங்கள் முன்வைக்கும் பலமான கோரிக்கைகள் என்ன?**

மாற்றம் இன்றேல் ஐ.தே.க.வுக்கு எதிர்காலம் இல்லை. 2020 இல் ஜனாதிபதி வேட்பாளராவதற்கே தற்பொழுது ரணில் விக்ரமசிங்க தயாராகிறார். அது அவரது வாழ்நாளில் செய்ய முடியுமானதொரு காரியமல்ல. அவர் ஜனாதிபதி வேட்பாளராக வருவார் என்றால் அதனைத் தோற்கடிக்க நாம் சகல பிரயத்தனங்களையும் மேற்கொள்வோம்.

இந்நாட்டில் நாம் அவருக்கு அதிகாரத்தைக் கொடுப்பதில்லை. அவர் மிகவும் பயங்கரமானதொரு மனிதர். மத்திய வங்கி பிணைமுறி மோசடி தொடர்பில் முழுமையான பொறுப்பை அவரே ஏற்க வேண்டும். நியாயமாகப் பார்த்தால் அவரை பிரதமர் பதவியில் இருந்து விலக்க வேண்டும்.

திறைசேறி முறிகள் தொடர்பான மோசடியின் மூலம் இந்நாட்டின் பல பில்லியன் கணக்கான சொத்துக்களை ரணில் விக்ரமசிங்க சூறையாடியுள்ளார். நல்லாட்சி அரசாங்கம் உருப்பெற்று 3 மாதத்திற்குள் இம்மோசடி இடம்பெற்றது. இம் மோசடியினை நாட்டு மக்கள் தெரிந்து கொண்டார்கள்.

அவ்வேளையில் ரணில் விக்ரமசிங்க அர்ஜூன் மஹேந்திரனை தொடர்ந்தும் பாதுகாத்து வந்தார். அங்கு தான் நல்லாட்சி அரசுக்கு முதலாவது சாவுமணி அடிக்கப்பட்டது. அதனால்தான் 2015 இல் நடாத்தப்பட்ட பாராளுமன்றத் தேர்தலில் ஐ.தே.க.வுக்கு இலகுவான பெரும்பான்மையை (Simple Majourity) பெற்றுக் கொள்ள முடியவில்லை. பாராளுமன்றத்தில் 113 ஆசனங்களை பெற முடியவில்லை. இதற்கான காரணம் திறைசேறி முறி மோசடியில் ஈடுபட்ட திருடர்களை ரணில் விக்ரமசிங்க காப்பாற்றியமையாகும்.

இதனால் கூட்டரசாங்கம் அமைக்க வேண்டியேற்பட்டது. விளைவாக, சிறந்த அமைச்சுப் பதவிகள் சுதந்திரக் கட்சிக்கு சென்றது. தொழில் வாய்ப்புக்களை கூட வழங்க முடியாத அமைச்சுக்களே ஐ.தே.க.விடம் எஞ்சியது. இதனால் ஐ.தே.க. ஆதரவாளர்களிடம் கட்சி தொடர்பில் இன்னுமின்னும் வெறுப்புக்களே உருவாகியுள்ளது. ரணில் விக்ரமசிங்கவே இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும்.

- **மைத்திரிபால சிறிசேன அவர்கள் பொது வேட்பாளராக நியமிக்கப்படும் வரையில் நீண்ட காலமாகவே ஐக்கிய தேசிய கட்சிக்குள் உள்ளக முரண்பாடுகள் இடம்பெற்று வந்தன. அம்முரண்பாடுகள் இன்னும் நீடிக்கிறதா? மாற்றுத் தலைமைக்கான போராட்டங்கள் எவ்வகையில் உள்ளது?**

ரணில் விக்ரமசிங்க, மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து பணியாற்றுகிறார் என 2015 இற்கு முன்பு நாம் கூறி வந்தோம். அதனால் அவர் ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு பொருத்தமற்றவர் என நாம் தெரிவித்தோம். ரணிலைத் தவிர வேறு பொருத்தமான எவருக்கும் ஆதரவு தெரிவிக்க முன்வந்தோம். மைத்திரிபால சிறிசேன சுதந்திரக் கட்சியிலிருந்து வெளியேறிய மறுகணமே நானும் ஷிரால் லக்திலக்கவும் அவரைச் சந்தித்து எமது முழு ஆதரவையும் அவருக்கு வழங்கினோம். ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு 3 வாரங்கள் கழிந்ததன் பின்பே ஐக்கிய தேசிய கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவிக்கும் தேர்தல் போராட்டத்தில் குதித்தது.

- **அரசியலமைப்பு உருவாக்கப் பணிகள் தாமதமாவதற்குரிய காரணங்கள் என்ன?**

(பக்.14)




பள்ளிவாசல்கள் ரமழானில் களைகட்டியதற்கு ரமழானில் பணியமர்த்தப்பட்ட காரிகளும் முக்கியமான காரணம் என்பது ரமழான் முடிவடைந்த பின்னர் தெளிவாகத் தெரிகிறது. ரமழானிலே தொழுகைக்கான சந்தர்ப்பங்கள் அதிகமாக உள்ளதனால் இந்த ரமழானைச் சிறப்பிக்க விரும்புகின்ற பள்ளிவாசல்கள் ரமழானுக்கென்று விஷேடமாக ஹாபிழ்களை வரவழைத்தன.

ரமழானுக்கான விஷேட தொழுகைகளாக சமூகம் வகுத்திருக்கின்ற தராவீஹ், தஸ்பீஹ், கியாமுல் லைல் போன்றவைகளை இந்த ஹாபிழ்கள் சிறப்பிப்பார்கள். மக்களும் இருபதா, எட்டா என்பதையெல்லாம் விட்டு விட்டு நல்ல கிராஅத் நீண்ட நேரத்துக்கு ஓதி தொழுவிக்கப்படும் இடங்களுக்கு ஈர்க்கப்பட்டுச் செல்வார்கள். இதனை எதிர்பார்த்தே பள்ளிவாசல்களும் தமது வெகுஜன அபிப்பிராயத்தை வளர்த்துக் கொள்வதற்காக சில மாதங்களுக்கு முன்பிருந்தே நாடெங்கும் வலை விரித்து ஒரு ஹாபிழைத் தேடிப்பிடித்து காரியாக்கி விடுவார்கள்.

ரமழானில் மக்களுக்குக் கிடைக்கின்ற இந்தப் பாக்கியம் ஏன் ஏனைய நாட்களில் கிடைக்காமல் இருக்கிறது? ரமழானுக்குப் பின்னர் இந்தக் காரிகள் எல்லாம் எங்கே போகிறார்கள்? அண்மையில் புத்தளம் ஜம்மியதுல் உலமாவின் உபதலைவர் தெரிவித்த தகவலின்படி, ரமழானில் தொழுகை நடத்துவதற்காக இலங்கையில் இருந்து 70 ஹாபிழ்கள் மாலைதீவுக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள். நாட்டிலே இருக்கின்ற இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பள்ளிவாசல்களில் ஏன் இவர்களை தொழுகைக்கான இமாமாக அமர்த்த முடியாது?

வருடத்தில் 11 மாதங்கள் பள்ளிவாசல் பேஷ் இமாம்கள் தான் ஐந்து நேரத் தொழுகைகளையும் முன்னின்று நடத்துகிறார்கள். இவர்களில் அல்குர்ஆனை அழகிய முறையில் ஓதுகின்ற பரிச்சயம் இல்லாதவர்களும் இருக்கிறார்கள். இன்னும் சிலருக்கு அல்குர்ஆன் வசனங்களின் உச்சரிப்புக்கள் கூட ஒழுங்காக வருவதில்லை. இந்த நிலையில் ஒரு நாளைக்கு ஐந்து முறை பதினொரு மாதங்கள் இந்த இமாம்களின் பின்னால் இருந்து தொழுதவர்களுக்கு வருடத்தில் ஒரு மாதம் மட்டும் வந்து அழகான தொனியில் ஓதித் தொழுகை நடத்திவிட்டுச் செல்பவர் மீது பிரியம் மேலிடுவது நியாயமானது தானே.

ஏற்கனவே நியமிக்கப்பட்டிருக்கின்ற இமாமை விட சிறந்த முறையில் ஓதித் தொழுவிக்க வேண்டும் என்பதற்காகத் தானே ரமழானில் விஷேட இமாம்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்படியானால் வருடத்தின் ஏனைய நாட்களிலும் இந்தச் சிறப்பை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏன் பள்ளிவாசல் நிர்வாகங்கள் முயற்சிக்கக் கூடாது?

மார்க்கம் படித்தவர்கள் குறைவாக இருந்த காலங்களில் ஊரிலுள்ள ஸாலிஹான ஒரு மனிதர் பள்ளிவாசலின் லெப்பையாக நியமிக்கப்பட்டார். தற்போது தவறி விழுந்தாலும் மௌலவியின் காலடியில் வீழுமளவுக்கு நாட்டிலே தாராளமாக மார்க்கம் படித்த மௌலவிமார்கள் இருக்கிறார்கள். மத்ரஸா கல்வி முறையால் வார்க்கப்பட்ட இவர்களில் மௌலவிகள், ஹாபிழ்கள், காரிகள் என பல்வகை ஆளுமைகள் அடங்குகின்றன. இவர்கள் தொழில் ரீதியாக வகுக்கப்படும் போது இமாம், கதீப், உஸ்தாத் எனப் பெயர் பெறுகிறார்கள். கிதாபுகளைக் கற்று வெளியேறும் மௌலவிமார் தான் பெரும்பாலும் இமாமாகவும் கதீபாகவும் நியமிக்கப்படுகிறார்கள். இவர்கள் தான் வருடத்தில் 11 மாதங்களும் அல்குர்ஆனை ஓதி தொழுகை நடத்துகிறார்கள். அல்குர்ஆனை மனனமிட்டு இராகத்துடன் ஓதுவதற்குப் பயிற்சி பெற்றவர்கள் வருடத்தில் அல்குர்ஆன் இறங்கிய மாதத்தில் மட்டுமே தொழுகை நடத்துகிறார்கள்.

ஐவேளைத் தொழுகையையும் உயிரோட்டமான முறையில் தொழுவதற்கு ஏன் பள்ளிவாசல் நிர்வாகங்கள் வழியமைக்கக் கூடாது? மக்களின் எதிர்பார்ப்புக்களை மெய்ப்பிக்கின்ற விதமாக பள்ளிவாசல்கள் ஏன் நடந்து கொள்ளக் கூடாது? எப்படியோ ஒரு ஹஸ்ரத்தை பணிக்கமர்த்தி பள்ளிவாசலை ஓட்டுவதை விடுத்து, தொழுகையால் கிடைக்கக் கூடிய மன அமைதியைப் பெறும் விதமாக ஏன் தொழுகைகளை மக்களுக்கு அமைத்துக் கொடுக்க முடியாது?

தமது தேவை என்ன என்பதை கேட்டுப் பெறாமல் எந்த மயிலும் இறகு போடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஷீஆ தலைவர் முக்ததா சத்ரும் சவூதி இளவரசரும் சந்திப்பு



சத்ர் தீவிர ஷீஆ பிரிவைச் சேர்ந்த இராணுவப் படையொன்றை வழிநடத்திச் செல்கின்றவர். ரியாதும் வொஷிங்டனும் அவருடன் நடத்தியுள்ள பேச்சுவார்த்தைகள் பல்வேறு கேள்விகளை எழுப்புவதாக அரசியல் அவதானிகள் கருத்துகின்றனர்.

ஈராக்கில் செல்வாக்குள்ள ஷீஆ தலைவர் முக்ததா சத்ரை சவூதியின் புதிய பட்டத்திற்குரிய இளவரசர் முஹம்மத் பின் சல்மான் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். சவூதி அறேபியா தன்னை பேச்சுவார்த்தைக்கு அழைத்ததாக சத்ர் தெரிவித்துள்ளார்.

சவூதி அறேபியாவின் மன்னர் அப்துல் அஸீஸ் விமான நிலையத்தில் சத்ருக்கு பெரும் வரவேற்பளிக்கப்பட்டது. ஈராக்குடனான ராஜதந்திர உறவுகளைத் துண்டித்து 25 ஆண்டுகளுக்குப் பின்னர் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

நூரி மாலிகியை மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் களமிறக்குவதற்கு ஈரான் முயற்சிப்பதாகவும், மாலிகியின் கடும் எதிரியான முக்ததா சத்ரைப் பயன்படுத்தி ஈரானின் முயற்சியை முறியடிப்பதற்கு அமெரிக்காவும் சவூதி அறேபியாவும் மேற்கொள்ளும் நடவடிக்கையின் விளைவே இச்சந்திப்பு எனவும் தெரிய வருகின்றது.

சத்ர் இறுதியாக 2006 ஆம் ஆண்டில் ஜித்தாவிலுள்ள செங்கடல் துறைமுக நகருக்கு வருகை தந்திருந்தார். ஈராக்-சவூதி அறேபிய உறவுகளை மீளவும் புதுப்பிப்பதற்கு ஒத்துழைப்பு சபையொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. பக்தாதுக்கு தாமிர் அல் ஸப்ஹான் என்பவர் சவூதியின் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வெறுமனே சவூதி-ஈராக்கிய உறவுகளை வளர்ப்பதற்கான முயற்சி அல்ல. ஈராக் மீதான ஈரானின் செல்வாக்கைக் குறைப்பதற்கான நடவடிக்கை என்று ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

## சர்வதேசப் பார்வை

# அல் ஜஸீரா மீது குண்டு போட்டு அழிக்குமாறு ஐக்கிய அறபு அமீரக இளவரசர் கோரினார்



ஐக்கிய அறபு அமீரகத்தின் இள வரசர் முஹம்மத் பின் ஸைத் அல் நஹ்யான், அவரது தந்தை கட் டாரைத் தளமாகக் கொண்ட அல் ஜஸீராவை குண்டு போட்டு அழிக் குமாறு அமெரிக்காவைக் கோரினார் என்று தெரிவித்துள்ளார்.

2002 இல் ஆப்கான் மீது அமெரிக்கா தாக்குதலை ஆரம்பித்தபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டதாக விக்கி லீக்ஸில் செய்திகள் கசிந்துள்ளன.

தனது தந்தை ஸியாத் பின் சுல்தான் அல் நஹ்யான் இக்கோரிக்கையை விடுத்திருந்ததாக இளவரசர் தெரிவித்துள்ளார். அப்போதைய அமெரிக்கப் படையினரின் மத்திய படைப் பிரிவுக்குப் பொறுப்பாக இருந்த ஜெனரல் டொம்மி ஃப்ராங்ஸிடம் இக்கோரிக்கை விடுக்கப்பட்டதாக விக்கி லீக்ஸ் இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

2004 இல் தந்தை இறந்ததற்குப் பின்னர் இளவரசர் ஸியாத் அல் நஹ்யானும் அல் ஜஸீரா செய்தி நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தைத் தாக்குமாறு அமெரிக்கா வைக் கேட்டிருந்தார் எனவும் விக்கி லீக்ஸ் தெரிவிக்கின்றது.

அமெரிக்கத் தாக்குதலில் உயிரிழந்த ஆப்கான், ஈராக்கிய பொது மக்கள் குறித்த காட்சிகளை அல் ஜஸீரா அப்போது உடனுக்குடன் உலகத்தின் பார்வைக்குக் கொண்டு வந்தது. எனவே அமெரிக்கா இக் கோரிக்கைக்கு செவி மடுக்கும் என்ற நம்பிக்கை தனக்கிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் கட்டாருடனான உறவுகளை புதுப்பிப்பதாயின் கட்டார் நிறைவேற்ற வேண்டிய 13 நிபந்தனைகளில் ஒன்றாக அல் ஜஸீரா மூடப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# அல் அக்ஸாவில் இலத்திரனியல் கெமராக்களைப் பொருத்துவதற்கு இஸ்ரேலும் அறபு நாட்டுத் தலைவர்களும் இணக்கம்



அல் அக்ஸா பள்ளிவாயல் நுழைவாயில்களில் இலத்திரனியல் கெமராக்களைப் பொருத்துவதற்கு ஆலோசனை பெறப்பட்டது என இஸ்ரேலின் உள் விவகார அமைச்சர் கிலாட் எரிடான் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் நேரடியாக இந்த நாடுகளோடு கலந்துரையாடியதன் பின்னரே இலத்திரனியல் கெமராக்கள் பொருத்தப்பட்டன என எரிடான் தெரிவித்தார்.

எனினும், இஸ்ரேல் நேரடியாகத் தொடர்பு கொண்ட நாடுகள் எவை என்பதை அவர் குறிப்பிடத் தவறிவிட்டார். எனினும், இஸ்ரேல்-சவூதி புரிந்துணர்வு பற்றிய ஊடகச் செய்திகள் வெளிவந்துள்ள நிலையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில் இஸ்ரேலியப் பத்திரிகையான ஹாரட்ஸ் அல் அக்ஸா பள்ளிவாயலின் நுழைவாயிலை இஸ்ரேல் மீண்டும் திறக்க வேண்டும் என்பதற்கான அழுத்தங்களை சவூதி மன்னர் சல்மான் வழங்கியுள்ளதாக எழுதியுள்ளது. ஹாரட்ஸின் கருத்துப்படி கெமராக்கள் பொருத்தப்படுவதற்கு முன்னர் இஸ்ரேல் ஜோர்தானுடன் கலந்தாலோசனை நடத்தியுள்ளது. தற்போது இலத்திரனியல் கெமராக்கள் அகற்றப்பட்டுள்ள போதும், இது போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டி வரும் என இஸ்ரேல் பிரதமர் தெரிவித்துள்ளார்.

# இஸ்ரேலுடன் சவூதி ஒத்துழைத்துச் செல்ல வேண்டும்

**சவூதி அமெரிக்க பொது உறவுகள் விவகார சபைத் தலைவர்**



இஸ்ரேலுடன் சவூதி ஒத்துழைத்துச் செயலாற்ற வேண்டும் என்று பிரபல சவூதி எழுத்தாளரும் அரசியல் விமர்சகரும் சவூதி-அமெரிக்க உறவுகள் சபையின் ஸ்தாபகருமான சல்மான் அல் அன்சாரி கோரிக்கை விடுத்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான பொருளாதார நலன்களை அடிப்படையாகக் கொண்டு ரியாதும் ஜெரூசலமும் ஒத்துழைத்துச் செயலாற்றுவதற்கான வரலாற்றுச் சந்தர்ப்பம் ஒன்று கிட்டியுள்ளது என அவர் தெரிவித்தார்.

இஸ்ரேல் பிராந்தியத்தில் உள்ள தனித்துவமான நாடாகும். எதிர்காலத்தில் அயல் நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உதவக் கூடிய நாடாகும். தொழில்நுட்பத் துறையிலும் விஞ்ஞானத்திலும் உலகத்திலேயே மிக உயர்ந்த ஸ்தானத்தில் உள்ள இஸ்ரேல், பொறியியல் தொழிற்துறையில் -குறிப்பாக நீர் பாசன பொறியியலில் உலகுக்கு தலைமை வழங்கும் நாடாகும். இது சவூதி அறேபியாவை அபிவிருத்தி செய்வதற்குப் பெருமளவு பயன்படும் எனவும் அவரது கட்டுரையில் தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளினதும் பொது எதிரி சர்வாதிகார ஈரானிய அரசாங்கமாகும். சவூதியும் இஸ்ரேலும் இணைந்தால் பிராந்திய ஸ்திரப்பாட்டின் இரட்டைக் கோபுரங்களாகத் திகழலாம். முழு மத்திய கிழக்கிலும் அமைதிக்கும் அபிவிருத்திக்கும் பங்களிப்புச் செய்யலாம் எனவும் அவர் தெரிவித்தார்.

# ஹுதா காலிய்யா ஷரீஆ துறையில் பட்டம் பெறுகிறார்

2006 இல் காஸாவில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 7 உறுப்பினர்களை இஸ்ரேலிய ஆக்கிரமிப்பு இராணுவம் ஈவிரக்கம் இல்லாத வகையில் கொன்று குவித்தது. அக்குடும்பத்தில் உயிர் தப்பிய



ஹுதா காலிய்யா எனும் சிறுமி, தற்போது காஸா பல்கலைக்கழகத்திலிருந்து பட்டம் பெற்று வெளியேறுகின்றார்.

2006 இல் இடம்பெற்ற காஸா கடற்கரை படுகொலையில் அவரது குடும்பத்தின் 7 உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். எஞ்சியிருந்த ஹுதா காஸா பல்கலைக்கழகத்தில் இஸ்லாமிய சட்டத் துறையில் பட்டம் பெற்றும் வெளியேறுகின்றார்.

வடக்கு காஸாவிலுள்ள பைத் லஹிய்யா கடற்கரைக்கு ஹுதாவின் குடும்பம் 2006 ஜூன் 09 இல் சிறிய சுற்றுப் பிரயாணமொன்றை மேற்கொண்டிருந்தது. அப்போது அவர்கள் மீது ஷெல் தாக்குதலும் காலாற் படைத் தாக்குதலும் இஸ்ரேலிலிருந்து மேற்கொள்ளப்பட்டது. அதில் அவரது தந்தையும் ஒன்று விட்ட தாயும் ஐந்து சகோதர சகோதரிகளும் ஷஹீதாக்கப்பட்டனர். 7 பேரின் மரணத்தை நேரடியாகக் கண்ட அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத நிலையிலிருந்த ஹுதா காஸா பல்கலைக்கழகத்தில் இணைந்து பட்டதாரியாக மாறியுள்ளார்.

இவருக்கான பட்டத்தை வழங்குவதற்கு முன்பாக காஸா பல்கலைக்கழகத்தின் தலைவர் ஆதில் அவதுல்லாஹ் கருத்து வெளியிடும்போது, ஹுதா மிகச் சாதாரண ஒருவரல்ல. அவர் ஒவ்வொரு பலஸ்தீனரினதும் பிரதிநிதியாவார். அவர் எங்களது இதயத்திலும் ஆன்மாவிலும் ஆழப் பதிந்துள்ளார் எனத் தெரிவித்தார்.

# கட்டார் இத்தாலியிடமிருந்து 7 கடற்படைக் கப்பல்களை கொள்வனவு செய்கின்றது



கட்டார் இத்தாலியிடமிருந்து புதிய கடற்படைக் கப்பல்களை கொள்வனவு செய்கின்றது. இதன் மொத்தப் பெறுமான 5.9 பில்லியன் அமெரிக்க டொலராகும். இது குறித்த ஒப்பந்தம் கட்டார் மற்றும் இத்தாலி ஆகிய நாடுகளுக்கிடையில் கைச்சாத்தாகியுள்ளது. கட்டார் வெளிவிவகார அமைச்சர் ஷெய்க் முஹம்மத் பின் அப்துர் ரஹ்மான அஸ்ஸானி, இத்தாலியுடனான இரு தரப்பு ஒப்பந்தங்கள் இரு நாடுகளுக்கிடையிலான பொருளாதார மற்றும் அரசியல் உறவுகளைப் பலப் படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

டோஹாவுக்கு வருகை தந்த இத்தாலிய வெளிவிவகார அமைச்சர் அஞ்சலினோ அல்ஃபானோ பயங்கரவாதத்தை எதிர்த்துப் போராடும் கட்டாரின் முயற்சிகளுக்கு இத்தாலி ஆதரவளிக்கும் என குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டொனால் ட்ரம்பும் ரூஸ்வெட்டின் பெருந்தடிக் கொள்கையும்

• றவூப் ஸெய்ன்



உலக வல்லரசுகளின் உச்சத்தில் உட்கார்ந்திருக்கும் டொனால்ட் ட்ரம்ப் அளவுக்கதிகமாய் உணர்ச்சிவசப்படுகின்றார். அவருக்கு யாரேனும் இமோஷனல் இன்டெலிஜன்ஸ் பாடம் கற்றுக் கொடுப்பது அவசியம். இல்லாதபோது ஒட்டுமொத்த ஆசியாவையும் ட்ரம்ப் அழிவில் தள்ளிவிடுவார் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி கூறியிருப்பது கவனத்திற்குரியது.

தேர்தல் பிரச்சாரத்தின் போதும் அமெரிக்காவுக்கே முதலிடம் என்ற கோஷத்தை ட்ரம்ப் முன்னிலைப்படுத்தினார். ஜனாதிபதியானதன் பின்னர் ட்ரம்பின் ஒவ்வொரு நகர்வும் அமெரிக்காவில் சர்ச்சையையும் வெளியுலகில் வெறுப்பையும் உருவாக்கி வருகின்றது.

உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் அவருக்குள்ள உளவியல் நெருக்கடியே இதற்குக் காரணம் என்று பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி சொல்வதில் ஓரளவு நியாயம் உள்ளது. ஆனால், ட்ரம்பின் வார்த்தைகளுக்கும் அதிரடி நடவடிக்கைகளுக்கும் பின்னால் மறைந்திருக்கும் கர்வமும் இறுமாப்பும் கவனிக்கப்பட வேண்டும்.

1901 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் 26 ஆவது ஜனாதிபதியாய்த் தெரிவான தியேடர் ரூஸ்வெல்ட் என்பவரிடம் இந்த அரசியல் அகம்பாவமும் அகந்தையும் குடிகொண்டிருந்தது. அமெரிக்காவுக்குக் கட்டுப்படுங்கள். இல்லையென்றால் எங்கள் இராணுவத்தால் தண்டிப்போம் என்பதுதான் அவரது வெளிநாட்டுக் கொள்கையின் சாரம். இதனை உலக அரசியலின் வெல்திறன் வரலாற்றில் பெருந்தடிக் கொள்கை (Big Stick Policy) என்பர். இந்தக் கொள்கையைத்தான் இப்போது ட்ரம்ப் தீவிரமாகக் கையில் எடுத்துள்ளார்.

ரஷ்யா, சீனா, வடகொரியா, ஈரான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளை ட்ரம்ப் அணுகும் முறை நேர்மையற்றது மட்டுமன்றி, மிகவும் ஆபத்தானது. 3ஆம் உலகப் போரொன்றை ட்ரம்பின் புத்திசாலித்தனமற்ற அணுகுமுறை ஊக்குவிக்குமா என்பது ஒரு புறமிருக்க, குறிப்பிட்ட சில பிராந்தியங்களில் நேரடியான ஆயுத மோதல்களைத் தூண்ட வல்லது என எச்சரிக்கப்படுகின்றது.

ஏவுகணைத் தொழில்நுட்பத்தில் வேகமாக வளர்ந்து வரும் வடகொரியாவைக் கையாள்வதில் நுணுக்கமான ராஜதந்திர அணுகுமுறையொன்று உலகிற்குத் தேவை. அதை விடுத்து வடகொரியா மீது ட்ரம்ப் மேற்கொள்ளும் வார்த்தைப் போரும் பகை முரண்பாடும் பாரிய பின்விளைவுகளையே உருவாக்கும். வடகொரியாவைக் கட்டுப்படுத்தும் பொறுப்பு சீனாவுக்கு உள்ளதென்றும் சீனா அதிலிருந்து விலகினால் சீனாவைத் தண்டிக்க வேண்டுமென்றும் ட்ரம்ப் சூளுரைக்கின்றார்.

வடகொரியா கடந்த மாதத்தில் இருமுறை பாரிய ஏவுகணைப் பரிசோதனையை நடத்தியுள்ளது. அமெரிக்காவின் எந்தவொரு மாநிலத்தையும் தாக்கியழிக்கும் வல்லமை இந்த ஏவுகணைக்கு உள்ளது என்று வடகொரிய ஜனாதிபதி கிம் ஜொங் தெரிவித்துள்ளார். வடகொரியாவைக் கட்டுப்படுத்தத் தவறியுள்ள சீனாவுக்கு எதிராக அணுவாயுதத் தாக்குதலை நடத்த அமெரிக்கா தயார் என்று அமெரிக்காவின் கடற்படைத் தளபதி கூறியிருந்தமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதற்கிடையில் ஹிலாரியை வீழ்த்துவதற்கும் ட்ரம்பை பதவிக்குக் கொண்டு வருவதற்கும் ரஷ்யப் புலனாய்வுப் பிரிவு 2016 அமெரிக்கத் தேர்தலில் தலையிட்டமை குறித்து அமெரிக்காவில் நடைபெற்ற விசாரணைகளைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கு எதிரான பொருளாதாரத் தடையை அமெரிக்கா விதித்துள்ளது. ரஷ்யாவினால் கொண்டு வரப்பட்ட அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பும் ரஷ்யா மீதான பொருளாதாரத் தடைக்கு அங்கீகாரமளிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்.

ரஷ்யா மீதான இத்தடைக்கு ஜனாதிபதி புட்டின் தகுந்த பதிலடி வழங்கப்படும் என்று எச்சரித்துள்ளதோடு, சில எதிர் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளார். ரஷ்யாவிலுள்ள அமெரிக்கா ராஜதந்திரிகளின் எண்ணிக்கையைக் குறைக்கப் போவதாக புட்டின் அறிவித்துள்ளார். அதன்படி 755 அமெரிக்க ராஜதந்திரிகளை நாட்டை விட்டு வெளியேற்றுவதற்கு ரஷ்யா தீர்மானித்துள்ளது.

அரச தொலைக்காட்சியில் தோன்றிய புட்டின் ''நாம் அமெரிக்க தடையுத்தரவிற்கு தகுந்த பதிலடி வழங்குவோம்'' எனக் குறிப்பிட்டார். அமெரிக்காவின் பிரதிநிதிகள் சபையும் செனட் சபையும் அமெரிக்கா மீதான புதிய பொருளாதாரத் தடைக்கு அங்கீகாரம் வழங்கியதைத் தொடர்ந்து ரஷ்யாவிலுள்ள இரண்டு







அமெரிக்க ராஜதந்திர சொத்துக்களையும் ரஷ்யா முடக்கியுள்ளது. வெறும் 450 அமெரிக்க ராஜதந்திரிகள் மட்டுமே ரஷ்யாவில் தங்கியிருக்கலாம் என்று அறிவித்துள்ளது.

புதிய பொருளாதாரத் தடை இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளை மென்மேலும் சீர்குலைக்கவே வழிகோலும் என ரஷ்யா தெரிவித்துள்ளது. இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகள் சுமுகமடையும் என நீண்ட நாட்களாய் நாம் காத்திருந்தோம். ஆனால், புதிய போக்குகள் அமெரிக்க-ரஷ்ய உறவுகளை சீராக்குவதற்குப் பதிலாக மென்மேலும் குழப்பத்தையே உருவாக்கும் என்பது உறுதியாகிவிட்டது என புட்டின் தெரிவித்துள்ளார்.

க்ரீமியாவை ரஷ்யா ஆக்கிரமித்தமை, சிரியாவின் அதன் தலையீடு மற்றும் 2016 அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடு என்பவற்றைக் காரணமாக வைத்து அமெரிக்க செனட் சபை ரஷ்யா மீது புதிய பொருளாதாரத் தடையை விதித்துள்ளது. இது ரஷ்ய-அமெரிக்க ராஜதந்திர மோதல்களைக் கூர்மைப்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில், சீனா மங்கோலிய எல்லைப் புறத்தில் கடந்த வாரம் நடத்திய மிகப் பெரும் இராணுவ அணிவகுப்பில் சீன ஜனாதிபதி கலந்து கொண்டு உரையாற்றினார். சீனாவுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்தவொரு படையெடுப்பையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு சீனப் படையினரால் முடியும் என தான் நம்புவதாக சீன ஜனாதிபதி தெரிவித்தார்.

அவரது எச்சரிக்கை இரண்டு நாடுகளை நோக்கி விடுக்கப்பட்டது. டொனால்ட் ட்ரம்பின் அமெரிக்கா சீனாவுடன் போர் தொடுக்க எண்ணினால் அதற்கு கடும் பதிலடி வழங்குவதற்கு சீன அரசு தயாராக உள்ளது என்று அவர் குறிப்பிட்டதோடு, வடகொரியாவை விட சீனாவின் ஏவுகணைத் தொழில்நுட்பம் பலமானது என்றும் அவர் சூட்சுமமாகத் தெரிவித்தார். சீனாவின் நீண்டகால பகையாளி நாடான இந்தியாவையும் சீன ஜனாதிபதி எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவில் பல பில்லியன் டொலர் முதலீடு செய்துள்ள சீனா பொருளாதாரத்திலும் இராணுவத் துறையிலும் வேகமாக வளர்ச்சி கண்டு வருகின்றது. உலகில் அதிகூடிய எண்ணிக்கையில் இராணுவப் படைப்பிரிவைக் கொண்ட நாடு சீனாவாகும். புதிய போர்த் தளபாடங்களைத் தயாரிப்பதிலும் பல்லாயிரம் கி.மீ. சென்று தாக்கும் ஏவுகணைகளை உற்பத்தி செய்யும் தொழில்நுட்பத் துறையிலும் சீனா வேகமாக வளர்ச்சி கண்டுள்ளது.

செனட் சபை புதிய பொருளாதாரத் தடையை விதித்துள்ள ஈரான் தனது பங்கிற்கு புதிய ஏவுகணைப் பரிசோதனைகளில் இறங்கியுள்ளது. அமெரிக்கப் பொருளாதாரத் தடைக்கு நாம் அடிபணியோம். எமது முழுச் சக்தியையும் பிரயோகித்து இராணுவத் தொழில்நுட்பத்தைப் பலப்படுத்துவோம் என்று ஈரான் அறிவித்துள்ளது. ஈரான் வெளியுறவுத் துறை அமைச்சு இந்த அறிவித்தலை விடுத்துள்ளது.

அமெரிக்க பொருளாதாரத் தடை கண்டிக்கத்தக்கது எனக் குறிப்பிட்டுள்ள ஈரான், முன்னாள் ஜனாதிபதி ஒபாமாவுக்கும் ஈரானுக்கும் இடையில் கைச்சாத்திட்ட அணுசக்தி ஒப்பந்தத்தை அப்பட்டமாக மீறும் செயல் இது எனவும் கண்டித்துள்ளது.

செனட் சபையின் பொருளாதாரத் தடை இந்நாடுகளில் ஏற்படுத்தியுள்ள அதிர்வலைகளும் எதிர்வினைகளும் மிகவும் ஆபத்தானவை. டொனால்ட் ட்ரம்பின் உணர்ச்சிவசப்படும் ஆவேசமும் பெருந் தடிக் கொள்கையும் அமெரிக்காவின் எதிரிகளை அதிகரிக்கின்றது. ட்ரம்ப் ஜனாதிபதியாக இருக்கும் வரையில் தான் அமெரிக்காவுக்கே செல்லப் போவதில்லை என பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ரொட்ரிகோ அறிவித்துள்ளார்.

மொத்தத்தில் ட்ரம்பின் வருகை உலக அரசியலில் ஏற்படுத்தியுள்ள எதிர்வினைகள் அனைத்தும் முற்றிலும் எதிர்மறையானவை. உலக அமைதிக்கு எதிரானவை. சர்வதேச அமைதி, தேசங்களுக்கிடையிலான சமத்துவம் என்பவற்றுக்கு சவால் விடுப்பவை. ட்ரம்பை நிபுணத்துவம் வாய்ந்த உள மருத்துவரிடம் அல்லது உளவள ஆலோசனையாளரிடம் கொண்டு செல்வதுதான் இதற்கான தீர்வு.

# கட்டார் குறித்த அறபு நாடுகளின் நிலைப்பாடு தளருமா?

ஜூன் 05 இல் கட்டாருடனான ராஜதந்திர மற்றும் பொருளாதார உறவுகளை நான்கு அறபு நாடுகள் முறித்துக் கொண்டதை அடுத்து பிராந்தியத்தில் பெரும் அரசியல் பதட்டம் நிலவுகின்றது. ஜூலை மாதத்தின் இறுதிப் பகுதியில் சவூதி அரேபியா தலைமையிலான வளைகுடா நாடுகளுக்கும் கட்டாருக்கும் இடையிலான ராஜதந்திர உறவில் மேலும் பல புதிய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன.

துருக்கிய ஜனாதிபதி அர்தூகான் சவூதி அரேபியா, குவைத் ஆகிய நாடுகளோடு நடத்திய பேச்சுவார்த்தை செயல் திறன் வாய்ந்ததும் வெற்றிகரமானதும் என வர்ணித்திருந்தார். ஜூலை 25 இல் இப்பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. அதேபோன்று லெபனான் பிரதமர் சஅத் ஹரீரி, சவூதி அறெபியா மற்றும் கட்டாருக்கிடையிலான முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கு பேச்சுவார்த்தை ஒன்றே வழி எனத் தெரிவித்திருந்தார்.

ஜூலை 30 இல் எகிப்து கட்டாருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள 13 நிபந்தனைகளையும் நிறைவேற்றாவிடின் அதனுடன் எந்தப் பேச்சுவார்த்தையிலும் தாம் ஈடுபடப் போவதில்லை என்று அச்சுறுத்தியிருந்தது. எகிப்தின் வெளிவிவகார அமைச்சர் சமீ சுக்ரி ஐரோப்பிய ஒன்றியத்தின் ராஜதந்திரிகளோடு நடத்திய பேச்சுவார்த்தைகளை அடுத்து ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கையில், ''இது சமசரம் செய்யும் விவகாரமல்ல. நாம் பயங்கரவாதத்தின் எந்த வடிவத்துடனும் சமரசம் செய்யப் போவதில்லை. கட்டார் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கும் நிலையில் அதனுடனான பேச்சுவார்த்தைகளுக்கு நாம் செல்லத் தயாரில்லை என அவர் தெரிவித்தார்.

இதற்கிடையில் அல்ஜஸீரா ஊடகத்தின் மீது கடந்த இரு மாதங்களாக அறபு நாடுகளின் மேற்கொள்ளப்பட்டு வரும் அழுத்தங்கள், தடைகளை சர்வதேச மனித உரிமை நிறுவனங்கள் வன்மையாகக் கண்டித்துள்ளன. கட்டார் அரசு ஆதரவளிக்கும்

AIPAC
THE AMERICAN ISRAEL PUBLIC AFFAIRS COMMITTEE
*America's Pro-Israel Lobby*

ஊடகம் என்ற வகையில் சவூதி அரேபியா, பஹ்ரைன், ஐக்கிய அரபு அமீரகம், எகிப்து ஆகிய நாடுகளில் அல் ஜஸீரா தொலைக்காட்சி மற்றும் இணைய வசதிகள் அனைத்தும் தடைசெய்யப்பட்டுள்ளமை கருத்துச் சுதந்திரத்தை மீறுவதாகும் என அவை தெரிவித்துள்ளன.

இந்த அரசியல் போக்குகளின் உச்சமாக கட்டாருக்கு எதிரான ஊடகப் போரொன்றைத் தொடங்கியது சவூதி அரேபியா. அமெரிக்காவிலுள்ள சவூதி-அமெரிக்க பொது விவகார சபை பிரபல்யமான அமெரிக்கத் தொலைக்காட்சியில் கட்டார் பற்றிய விளம்பரமொன்றை ஆரம்பித்துள்ளது. 30 செக்கன் நேர இந்த விளம்பரத்திற்கு 138,000 அமெரிக்க டொலர்கள் செலவு செய்யப்பட்டுள்ளதாக அல் ஜஸீரா உறுதி செய்துள்ளது. ஒரு செக்கனுக்கு 1000 டொலர் சவூதி அரசாங்கம் கட்டணம் செலுத்துகின்றது.

வொஷிங்டனைத் தளமாகக் கொண்ட அமெரிக்காவின் தேசிய தொலைக்காட்சி சேவை NBC-4 இல் ஜூலை 23 இலிருந்து கட்டாருக்கு எதிரான இந்த விளம்பரங்கள் ஒளிபரப்பப்படுகின்றன. கட்டார் பயங்கரவாதத்திற்கு ஆதரவளிக்கின்றது எனவும் பிராந்தியத்தில் அமெரிக்க நேச நாடுகளின் அரசியல் ஸ்திரப்பாட்டை குலைத்து வருகின்றது எனவும் இவ்விளம்பரம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் தொடர்பான குற்றச்சாட்டுக்களை அடிப்படையற்றவை என கட்டார் அரசாங்கம் ஏற்கனவே தெட்டத் தெளிவாக மறுத்துரைத்துள்ளது. இது போன்ற தொலைக்காட்சி விளம்பரங்கள் [illegible] பொது மக்களின் அபிப்பிராயங்களை கட்டாருக்கு

SAPRAC
Saudi American Public Relation Affairs Committee

எதிராகத் திருப்புவதை விட ஆபத்தானதாகும். ஏனெனில், இந்த விளம்பரங்கள் தீர்மானமெடுக்கும் இடத்திலுள்ளோரை இலக்கு வைக்கின்றது. குறிப்பாக, அமெரிக்கக் காங்கிரஸ் உறுப்பினர்கள், செனட் சபை அங்கத்தவர்கள், செல்வாக்குள்ள அரசியல் புள்ளிகளின் கருத்து நிலையை மாற்றி விடுவதே இதன் உள்நோக்கம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

அமெரிக்காவில் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சிகளில் நடைபெறும் காலகட்டத்திலேயே இவ்விளம்பரம் திட்டமிட்டு ஒளிபரப்பப்படுகின்றது. இவ்விளம்பரங்கள் மீள மீள ஒளிபரப்பப்படுவது அதன் அரசியல் உள்நோக்கத்தைப் புலப்படுத்துகின்றது என பொரள் அசோசியேட்ஸ் சந்தைப்படுத்தல் நிறுவனத்தின் துணை நிறைவேற்று அதிகாரி கிப் செகினோ கூறுகின்றார்.

அரசியல் பிரச்சாரத்தில் ஊடகங்களின் தாக்கம் குறித்த நிபுணரும் ரூட் கெஸ் பல்கலைக்கழகத்தின் அரசியல் துறை பேராசிரியருமான ரிச்சட் லோ, இந்த விளம்பரம் தெரிவுசெய்யப்பட்ட பார்வையாளர்களை அதாவது அரசியல்வாதிகளை இலக்கு வைக்கின்றது. [illegible] கருத்து நிலைகளையும் மனோபாவங்களையும் உருவாக்குவதே இதன் திட்டமிட்ட நோக்கம் என்று அவர் குறிப்பிடுகின்றார்.

கட்டார் குறித்த புதிய மக்கள் அபிப்பிராயம் ஒன்றை அமெரிக்காவில் உருவாக்குவதற்கு சவூதி அரேபிய ஒரு புதிய மூலோபாயத்தைக் கையாளத் தொடங்கியுள்ளது எனத் தெரிவித்துள்ள ரிச்சட் லோ, மத்திய கிழக்கில் இயங்கும் பயங்கரவாத நிறுவனங்களுக்கு நிதியாதரவளிக்கும் அரசுகள், நிறுவனங்கள் குறித்து அமெரிக்க அரசியல் தலைவர்கள் ஏற்கனவே அறிந்து வைத்துள்ளனர். இதனால், இந்த விளம்பரத்தின் தாக்கம் சவூதி அறேபியாவு புதிதாக எதனையும் வழங்கப் போவதில்லை என்று அவர் தெரிவித்தார்.

சவூதி-அமெரிக்க பொது விவகாரங்கள் சபை 2016 மார்ச் மாதம் ஸ்தாபிக்கப்பட்டது. சவூதிக்கு ஆதரவான அரசியல் நிலைப்பாட்டுக்கு அமெரிக்க சிவில் சமூகத்தின் ஆதரித்து வாதிடுதல் அதன் பிரதான நோக்கம். சல்மான் அல் அன்ஸாரி என்பவரே இச்சபைக்கு தலைமை தாங்குகின்றார். சவூதி அறேபியாவைச் சேர்ந்த எழுத்தாளர் ஆதரித்து வாதிடுபவராகவும் (Logistst) அரசியல் விமர்சகராகவும் உள்ளார். இவரே சவூதி-அமெரிக்க பொது விவகார சபையை நிறுவியவர். 2016 ஒக்டோபரில் இஸ்ரேலுக்கும் சவூதிக்கும் இடையிலான நெருக்கமான உறவுகளின் முக்கியத்துவம் குறித்து இவர் எழுதிய போது சர்ச்சை உருவானது.

முன்னைய பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் நாயிபுக்குப் பதிலீடாக நியமிக்கப்பட்ட முஹம்மத் பின் சல்மான், இஸ்ரேலுடன் உண்மையானதும் உறுதியானதுமான உறவுகளை வளர்த்துக் கொள்ள ஆர்வத்துடன் செயல்படுகின்றார் என சல்மான் அன்ஸாரி தெரிவித்திருந்தார். தற்போது கட்டாருக்கு எதிரான தொலைக்காட்சி விளம்பரத்திற்கு சவூதி-அமெரிக்க பொது உறவுகள் சபையே நிதி வழங்குகின்றது.

அமெரிக்காவில் செயல்படும் அமெரிக்க-இஸ்ரேல் பொது விவகார சபை AIPAC நீண்டகாலமாக அமெரிக்க வெளியுறவுக் கொள்கையில் (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வக்பு சொத்து: மோசடியில் பெரிய பள்ளிவாசல்

• ஹெட்டி ரம்ஸி

### அமைவிட முக்கியத்துவம்

கொழும்பு பெரிய பள்ளிவாசல் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் பெறுகின்றது. இப்பகுதியில் செல்வந்தர்கள் இருந்தமையினால் பள்ளிவாசலின் அமைவிடம் பல சிறப்பம்சங்களை கொண்டுள்ளன. இலங்கையில் முதலாவது ஆங்கில மொழி மூல பாடசாலையான ஹமீட் அல் ஹுஸைனி மற்றும் பிரதான நீதிமன்றங்களும் இப்பகுதியிலேயே அமைந்து காணப்படுகின்றன.

நூறு வருடங்களுக்கு முன்பு இவ்விடம் கொழும்பு 07 ஆக காணப்பட்டது. வெள்ளவத்தை, பம்பலப்பிட்டிய பிரதேசங்களுக்கு இங்கிருந்தே மக்கள் இடம்பெயர்ந்துள்ளார்கள். பெரிய பள்ளிவாசலில் அமைந்துள்ள ஹமீடியா மண்டபத்திலிருந்தே பிறை முடிவு அறிவிக்கப்படுகின்றது. அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை யும் பெரிய பள்ளிவாசலும் இணைந்தே பெருநாள் தினங்களுக்கான தலைபிறையை தீர்மானிக்கிறது. இலங்கையில் மிகப் பழமை வாய்ந்த பள்ளிவாசலாக இது காணப்படுகின்றது.


### வரலாறு

1830ல் மாளிகாவத்தை காணி கொள்வனவு செய்யப்பட்டது. பள்ளிவாயலுக்கு பின்னால் மையவாடி உள்ளது. ஆனால் ஆங்கிலேயர் பள்ளிக்கு பின்னால் ஜனாசா நல்லடக்கம் செய்ய வேண்டாம் என்றும் மாற்றுக் காணியை வாங்குமாறும் கூறினர்.

நிவ்மூர் ஸ்ட்ரீட்டில் உள்ள முஸ்லிம்கள் பணத்தை வசூலித்து 1874 இல் 55,000 ரூபாவுக்கு 38 ஏக்கர் காணியை வாக்கியுள்ளார்கள். அதில் மையவாடியை அமைத்தார்கள். அரசாங்கம் 1950ம் ஆண்டு 2 வர்தமாணி அறிவித்தல்களின் மூலம் 38 ஏக்கர் காணியிலிருந்து 28 ஏக்கரை பெற்றுக் கொண்டது. கேத்தாராம மைதான அபிவிருத்திக்காக வேண்டி இதிலிருந்து காணி எடுக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாசலுக்கு சொந்தமான காணி தொடர்பில் சரியான கணக்குகளை காண்பிக்குமாறு கோரி பள்ளி நிர்வாக சபை நீதிமன்றில் வழக்குப் பதிவுசெய்ய நடவடிக்கை எடுத்து வருகின்றது. தற்பொழுது 11 ஏக்கர் காணி உள்ளது. 11 ஏக்கரில் பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியில் சுமார் 170 வீடுகள் உள்ளன. இங்கு 70 வீதமான முஸ்லிம்கள் உள்ளார்கள். இப்பகுதியில் மத்ரஸாவும் அமைந்துள்ளது.

பள்ளிக்கு சொந்தமான நிலத்திலேயே மக்கள் வாழ்கிறார்கள். ஆனால் ஒரு சிலரே பள்ளிக்கு கூலியை செலுத்துகிறார்கள். அரசாங்கம் 28 ஏக்கரை பெற்றதன் பின்னர் அதற்கான பணம் பெறப்பட்டு புறக்கோட்டையில்; 34 பேச்சர்ஸ் நிலம் வாங்கப்பட்டுள்ளது. அங்கு வியாபார நிலையங்கள் அமைக்கப்பட்டு அவை வாடகைக்கு விடப்பட்டது.




1983 கலவரத்தில் அவ்வியாபார நிலையங்கள் தீக்கிரையாகின. பின்னர் அங்கு புதிதாக கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டு மீளவும் வாடகைக்கு விடப்பட்டது. மொத்தமாக 256 வியாபார நிலையங்கள் காணப்படுகின்றன. ஒரு வியாபார நிலையத்திற்கு 10,000 ரூபா வீதம் என்று கணக்குப் பார்த்தாலும் 25 லட்சம் பணம் மாதாந்தம் கிடைக்க வேண்டும். மாளிகாவத்தை காணியில் உள்ள வாடகைக் கட்டிடங்களுக்கும் புறக்கோட்டையில் உள்ள வாடகைக் கட்டிடங்களுக்கும் 20,000 ரூபா வீதம் பார்த்தாலும் 5 மில்லியன் ரூபா வருமானம் பள்ளிக்கு கிடைக்க வேண்டும்.

பள்ளிவாசலுக்கு பக்கத்திலுள்ள வாடகைக் கட்டிடங்களிலிருந்து 3 மில்லியன் ரூபா வருமானம் கிடைத்தாலும் மொத்தமாக பெரிய பள்ளிக்கு மாதாந்தம் 8 மில்லியன் ரூபா வருமானம் கிடைக்க வேண்டும். இக்காணியிலுள்ள பல கட்டிடங்களுக்கு 100,200 ரூபா என்ற அடிப்படையில் வாடகை மட்டுமே பெறப்படுகின்றது. 3 லட்சம் ரூபாவை வாடகையாக பெற முடியுமான ஒரு கட்டிடத்திற்கும் 3500 ரூபா மட்டுமே வாடகையாக பெறப்பட்டு வருகிறது.

### மாளிகாவத்தை மையவாடிக் காணி

தற்பொழுது மையவாடிக்கு 5 ஏக்கர் 3.75 பர்சஸ் காணி மாத்திரமே எஞ்சியுள்ளது. 2003ல் உபாலி ஜயசிங்க என்பவர் அவரது காணியை வேறுபடுத்துவதற்காக வேண்டி மையவாடிக் காணியின் மதிலை உடைத்துள்ளார். இதற்கு எதிராக கொழும்பு பெரிய பள்ளிவாசல் 2003.07.15 ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்தது. பின்னர் அவர்களாகவே வழக்கினை வாபஸ் பெற்று வழக்குக்கு செலவாக உபாலி ஜயசிங்கவுக்கு 25,000 பணத்தையும் வழங்கியுள்ளார்கள்.


பின்னர் 2006ம் ஆண்டு பொது மக்கள் அக்காணி பள்ளிவாயலுக்கு சொந்தமானது எனக் கோரி மாளிகாகந்த நீதிமன்றில் ஒரு வழக்கை தொடர்ந்தார்கள். காணி தங்களுடையது என நிரூபிக்குமாறு நீதவான் கேட்டதற்கு பள்ளி நிர்வாகம் அதில் அக்கரை காட்டியிருக்கவில்லை. அவர்கள் வழக்கிற்கு போகாமல் இருந்துள்ளார்கள். அதனால் அவ்வழக்குத் தள்ளுபடியானது.

2009ம் ஆண்டு மீண்டும் உபாலி ஜயசிங்க குறித்த காணியில் 8 மாடிக் கட்டிடமொன்றை நிர்மாணிப்பதற்கு கொழும்பு மாநகர சபையிடம் அனுமதி கோரியுள்ளார். நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டிருப்பதனால் குறித்த காணியில் கட்டிடம் கட்ட முடியாது. என்றாலும் கோத்தாபய ராஜபக்ஷவின் சிபாரிசின் பேரில் உபாலி ஜயசிங்க கட்டிட நிர்மானப் பணிகளை ஆரம்பித்துள்ளார்.


இவ்விடயத்தில் கோத்தாபய முன்னிறங்கியமையினால் முஸ்லிம்கள் பின்வாங்கியுள்ளார்கள். இதற்கெதிராக Sri Lanka Muslim Religious Right Organization மேற்முறையீட்டு நீதிமன்றில் ரிட் மனுவொன்றை தாக்கல் செய்தது. இதற்கும் கொழும்பு பெரிய பள்ளிவாயல் ஒத்துழைப்பு வழங்கவில்லை. மீண்டும் இவ்வழக்கு தள்ளுபடியானது.

2013ல் மீண்டும் வழக்குத் தாக்கல் செய்தார்கள். அதுவும் தள்ளுபடியானது. இத்தள்ளுபடிக்கு எதிராக சிவில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்யப்பட்டது. மாவட்ட நீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்தது தவறு என மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. இந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது. கொழும்பு மாநகர சபை கட்டிட நிர்மாணப் பணிகளை நிறுத்துமாறு உபாலி ஜயசிங்கவுக்கு எதிராக வழக்கு தொடுத்தது. அதன் பின் தற்பொழுது நிர்மாணப் பணிகள் இடம்பெற்று வருகிறது.

'பெரிய பள்ளிவாயல் காணி விவகாரத்தில் அக்கறை காட்டவில்லை, வழக்குகளை முறையாக கையாளவில்லை. பொது மக்கள் தொடுத்த வழக்குகளிலும் முறையாக சமூகமளித்திருக்கவில்லை' இவையெல்லாவற்றையும் காரணம் காட்டி, வக்பு சொத்துக்களை முறையாக பராமரிக்கவில்லை எனக் கூறி பள்ளி நிர்வாகம் களைக்கப்பட்டு இரண்டு வருடத்திற்கு தலைவராக காலிகள் சபை தலைவர் சட்டத்தரணி நத்வி பஹாவுத்தீன் வக்பு சபையினால் நியமிக்கப்பட்டார்.



THE FIRST PORTUGUESE FORT OF COLOMBO, 1518
**MOSQUE (*indicated by an arrow*)**
[ Illustration from Correa's "Lendas da India," 1518—first Printed and Published under the direction of Mr. L. F. Wilson, Surveyor-General, Ceylon, in July 1948, with Historical details by Mr. R. L. Brohier, Asst. Surveyor-General. ]



### பள்ளிவாசலின் நிலை

பள்ளிவாயலுக்கு கூலிகள் குறைவாகவே வழங்கப்படுகிறது. 10 வருடங்களுக்கும் அதிக காலம் பள்ளிவாசலுக்கு கூலிப் பணம் செலுத்தாமல் உள்ள கட்டிடங்களும் உள்ளன. பொதுவாக 10 வருடங்களுக்கு அதிக காலம் கூலி செலுத்தாமல் இருந்தால் அக்கட்டிடம் அவர்களுக்கே சொந்தமாகும். அப்படி நிறைய விடயங்கள் கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கு ஏற்பட்டுள்ளன.

மாளிகாவத்த பள்ளிவாயல் நிர்மாணத் திட்ட வரைவு பூர்த்தியாகியுள்ளது. இப்பள்ளிவாயலுக்கு 60 மில்லியனுக்கும் அதிக தொகை முதலீடு செய்யப்படவுள்ளது. பணம் தயாராக உள்ளது. ஆனால் மாநகர சபை அனுமதி வழங்குவதில்லை. பள்ளிவாயல் பதிவிற்கான எவ்வித ஆவணங்களும் இல்லை. பள்ளிவாசலுக்கு சொந்தமான காணிகள் இன்னும் மாநகர சபையில் பதிவு செய்யப்படவில்லை. அதை காரணமாக வைத்து கொழும்பு மாநகர சபையினால் ஒரு பேப்பர் கூட வழங்கப்படுவதில்லை.

[illegible] மாநகர சபைக்கு கையொப்பமிட்டு கொடுக்குமாறு அறிவித்ததை தொடர்ந்தே அதற்கான ஏற்பாடுகள் இடம்பெறுகிறது. தற்பொழுது மாதாந்த செலவுக்கு கூட பள்ளிவாசலுக்கு பணம் இல்லாத நிலை காணப்படுகின்றது. வெள்ளிக்கிழமை நாட்களில் பள்ளி வசூல் செய்தும் தனவந்தர்களின் உதவியில் மின்சார கட்டணங்களை செலுத்தியுமே பள்ளிவாசல் செலவு ஈடுசெய்யப்படுகிறது.

### தற்போதைய நிலை

தற்பொழுது கொழும்பு பெரிய பள்ளிவாசலை பார்க்கின்ற போது 4 வருடங்களுக்கு முன்பு காணப்பட்ட அமைப்பில் இல்லை. பள்ளிவாயலில் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. கடந்த 2 வருடங்களுக்கு முன்னர் வக்கு சபையினால் நியமிக்கப்பட்ட புதிய பரிபாலண சபை பள்ளிக்கு அதிக சேவையாற்றி வருகின்றது. பிறைக் குழு ஹமீடியா மண்டபம் புதிதுபடுத்தப்பட்டுள்ளது. கழிவறைகள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. பாதணிகளை வைப்பதற்கான இறாக்கை கட்டப்படுகிறது.

பள்ளிவாசல் நிர்வாகப் பிரிவுக்கு உட்பட்ட மாளிகாவத்தை மையவாடியில் ஜனாஸாட மண்டபம் ஒன்று காணப்படவில்லை. தற்பொழுது அங்கு புதிதாக ஒரு ஜனாஸா மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கான தொழுகையறை அமைக்கப்பட்டுள்ளது. வாகன தரிப்பிட வசதிகள் செய்யப்பட்டுள்ளது. முழுப் பள்ளிவாசலுக்கும் புதிதாக மின்சார வசதிகள் திருத்தியமைக்கப்படவுள்ளன. தொழுகைக்கான சப் (வரிசைகள்) சரிசெய்யப்பட்டுள்ளது.

பள்ளிவாசலின் தற்போதை நிலைமைகள் குறித்து நிர்வாக சபை உறுப்பினர் ஒருவரிடம் வினவிய போது, பெரிய பள்ளிவாசல் என்றால் அங்கு ஊழல் மோசடி நடந்ததென்றே மக்கள் கருதுகிறார்கள். அவ்வெண்ணத்தை நீக்குவதற்கே இதுபோன்ற அபிவிருத்தி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது எனவும் பள்ளிவாயலை அபிவிருத்தி செய்யவே புதிய சபை நியமிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், பள்ளிவாசலுக்கு 10 மில்லியன் பெறுமதியான வர்ணங்கள் (பெயின்ட்) கிடைத்துள்ளது. பெய்ட் பண்ண 35லட்சம் ரூபா கூலி தேவைப்படுவதாகவும் அத்தொகை தேடப்பட்டு வருவதாகவும் பெரிய பள்ளிவாசலில் முன்னைய நிலமைகள் தற்பொழுது இல்லை என்றும் தற்பொழுது எல்லோரும் உதவுகிறார்கள், ஆனால் மாத வருமானங்கள் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய பரிபாலண சபைக்கு இந்த வருடம் ஒக்டோபரில் 2 வருடம் பூர்த்தியாகின்றது. தற்போதைய நிர்வாக சபை 2016ல் வர்த்தமானி மற்றும் பள்ளிவாசல் காணியுடன் தொடர்பான நிறைய ஆவணங்களை திறட்டியுள்ளார்கள். பல பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து பள்ளிவாசலை நிர்வகித்து வருகிறார்கள்.

கொழும்பு பெரிய பள்ளிவாசலுக்கான வக்பு சொத்துக்கள் கடந்த நிர்வாக சபையினர் மற்றும் அதற்கு முன்பிருந்தவர்களால் முறையாக பலிபாலனம் செய்யப்பட்டிருக்கவில்லை. இதனாலேயே இடைக்கால சபையும் நியமிக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தின் சொத்து முறையாக பராமரிக்கப்பட்டிருப்பின் முழுக் கொழும்பு பிரதேசத்திலும் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை கட்டியெழுப்பியிருக்கலாம்.

கல்வி நிலையை மேம்படுத்தியிருக்கலாம். திருமணம் முடிக்க வசதியற்றவர்களுக்கு உதவியிருக்கலாம். அரசியல் வாதிகளின் பின்னால் அல்லுண்டு செல்ல வேண்டிய நிலையேற்பட்டிருக்காது. சமூகத் தலைமைகளின் காட்டிக் கொடுப்பும் அசமந்தப் போக்கும் எம்மை எந்தளவு கஷ்டத்தில் ஆழ்த்தியுள்ளது என்பதற்கு கொழும்பு பெரிய பள்ளிவாசலின் நிலைமை எமக்கு எடுத்துக்காட்டு.

## சிங்கப்பூர்... (01 ஆம் பக்கத் தொடர்)

தொடர்ச்சியாக 5 முறை எந்த மொழி அல்லது இனப் பிரிவைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதிப் பதவி வகிக்கவில்லையோ, அந்த மொழி அல்லது இனப்பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஜனாதிபதி பதவிக்கு முன்னிறுத்தப்பட வேண்டும் என்று அந்நாட்டுச் சட்டம் தெரிவிக்கிறது. சுழற்சி முறையில் அனைத்துப் பிரிவினருக்கும் உயர் பதவி கிடைக்கும் என்பது அந்தச் சட்டத்தின் நோக்கம்.

அந்த வகையில், சிங்கப்பூரின் அடுத்த அதிபர் மலாயா இனத்தைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். ஹலீமாவின் தந்தை இந்தியர்; தாய் மலாயா இனத்தவர். நாடாளுமன்றத் தேர்தல் வேட்புமனுக்களில் இவர் தன்னை மலாயா இனத்தைச் சேர்ந்தவர் என்றே குறிப்பிட்டு வந்திருக்கிறார். சிங்கப்பூர் சட்டப்படி, தந்தையின் இனம் மூலமே ஒருவரை அடையாளப்படுத்த முடியும். இருந்தாலும் இதுவரை தன்னை மலாயர் என்று கூறி வந்ததில் ஹலீமா யாகூப் எந்தத் தடையையும் எதிர்கொண்டதில்லை. ஆனால் வரவிருக்கும் அதிபர் தேர்தலில் இது சட்டச் சிக்கலைத் தோற்றுவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

ஜனாதிபதித் தேர்தலுக்கு இந்திய வம்சாவளியைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரான முகமது சலே மரிகானின் பெயரும் உச்சரிக்கப்படுகிறது.

சிங்கப்பூர் அதிபரின் பதவிக் காலம் 6 ஆண்டுகளாகும். தற்போதைய அதிபருக்கு முன்னதாக, தமிழரான எஸ்.ஆர். நாதன் 1999-ஆம் ஆண்டு முதல் 2015 வரை இரு முறை அதிபர் பதவி வகித்தார்.

இதனிடையே, அதிபர் பதவிக்கு ஒதுக்கீட்டு முறையைக் கட்டாயமாக்கும் சட்டத்தை எதிர்த்து சிங்கப்பூர் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரபணு மாற்றம்: வேகமாகப் பரவும் உயிர்கொல்லும் உணவு

• **கலாநிதி பரீனா ருஸைக்**
புவியியல்துறை விரிவுரையாளர்-
கொழும்பு பல்கலைக்கழகம்

மரபணு மாற்று உற்பத்திகள் தொடர்பாக உலகளாவிய ரீதியில் எழுந்துள்ள பல்வேறுபட்ட சீர்கேடுகளை அலசிப் பார்ப்பதும், இலங்கை வாழ் மக்கள் மத்தியில் விழிப்பூட்டலை ஏற்படுத்து வதும் இவ்வாய்வின் முக்கிய நோக்க மாகும். இவ்விடயத்தில் கொழும்புப் பல்கலைக்கழக மருத்துவப் புவியியலை கற்கும் மாணவர்கள் தமது ஒத்துழைப் பினை வழங்கியுள்ளார்கள்.

உண்மையிலே நாம் சாப்பிட்டுக் கொண்டிருப்பதைப் பற்றி எமக்குத் தெரிந்திருப்பது மிக மிகக் குறைவுதான். விவசாயி பயிர்களை உற்பத்தி செய்வது முதல் அவை எம்மிடம் சேரும் வரையில் நடைபெறுவது என்ன என்பது பற்றி நாம் பெரிதாக அறிவதில்லை.

காய்கறிகளும் பழங்களும், தூய்மை யாகவும் பளபளப்பாகவும் இருப்பதை யும், தானியங்கள் தூசில்லாது சுத்தமாக இருப்பதையும் கண்டு, அவை சிறந்தவை என்று நினைத்து, கண்ணை மூடிக் கொண்டு வாங்குகிறோம். பெரும்பாலும் பொருளின் நிறத்தையும் பருமனையும் பார்த்தே உணவுப் பொருட்களை வாங்கு கிறோம்.

பதப்படுத்தப்பட்ட பொருள் என்றால், 'பொதி செய்யப்பட்ட நாள்', 'காலவதி யாகும் திகதி' போன்றவற்றை மேலோ ட்டமாகப் பார்த்துவிட்டு, அட்டையின் மேல் எழுதப்பட்டுள்ள ஆரோக்கியப் பலன்கள் சிலவற்றை பார்த்துவிட்டு கவர்ச்சியில் மயங்கி வாங்கிவிடுகிறோம்.

ஆரோக்கியமான வாழ்வுக்கு ஆரோக் கியமான சிறந்த உணவுப் பழக்க வழக் கமே அடிப்படையாக உள்ளது. இன்று எமக்கு சகல உணவு வகைகளும் தாரா ளமாகக் கிடைத்துக் கொண்டிருக்கின் றன. ஆரோக்கியமான, போஷாக்கான உணவு என பல விடயங்களை நம்பி நுகர்ந்து கொண்டிருக்கிறோம். நுகர்வ தற்கு முன் நாம் உட்கொள்ளும் உணவு ஆரோக்கியமானதா? பாதுகாப்பானதா? போசனையானதா? என்பதை தெரிந்து கொள்ள எம்மில் எத்தனை பேர் முயற் சிக்கிறோம்.?

நாம் நுகரும் பெரும்பாலான காய் கறிகள், பழங்களில் அதிகளவிலான இரசாயன பசளைகள் மற்றும் பூச்சிக் கொல்லிகள் பயன்படுத்தப்படுவது உண் மையே. இயற்கையாக விளைந்த காய் கறிகள், பழங்கள் பார்ப்பதற்குப் பள பளப்பாகவோ, நல்ல நிறமாகவோ இருக்காது. செயற்கைப் பசளைகள் பயன்படுத்தப்பட்ட தாவரத்தில் விளை யும் பொருற்களே பளிச்சென்ற நிறத்தில் இருக்கும். அந்தக் காய்கறிகளில் சில வற்றை வீட்டில் விளைவித்துப் பாருங் கள். உண்மை தெளிவாகப் புரியும்.

பொதுவாக உணவு பொருட்களை வாங்கும்போது, அவை பொதி செய்யப் பட்ட நாள், காலாவதியாகும் நாள் போன்றவற்றைப் பார்த்து விட்டு வாங்கி விடுகிறோம். அப்படிச் செய்வதாலேயே நாம் வாங்கும் பொருள் பாதுகாப்பானது என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.


எந்த ஒரு பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருளை வாங்கும் போதும், அந்தப் பொதியில் அச்சிடப்பட்டிருக்கும் 'பயன் படுத்தப்பட்டுள்ள மூலப்பொருட்கள்' பட்டியலை நாம் கவனிக்க வேண்டும். சில பொருட்கள் நமக்குத் தெரிந்தவை யாகவும், மேலும் சில பொருட்களின் பெயர்கள் நமக்குத் தெரியாதவையாக வும் இருக்கும்.

எந்தவொரு பொருளை வாங்கும் போதும் நமக்குத் தெரியாத பெயர்கள் மூலப்பொருள் பட்டியலில் இருந்தால், அப்பொருளைத் தவிர்ப்பது நல்லது. பல நிறுவனங்கள் தடைசெய்யப்பட்ட, மற்றும் தவறான சேர்க்கைப் பொருட் களுக்கு மக்கள் அறியாத குறியீட்டு பெயர்களைத் தந்திரமாகப் பயன்படுத்து கின்றன. உதாரணமாக, அஜினோ மோட்டோ உட்பட பல்வேறு பொருட் கள், இப்படி மாற்றப்பட்ட பெயர்களில் காணப்படுகின்றன.

இவ்வரிசையில் இந்நவீன யுகத்தில் மற்றுமொரு வடிவில் சந்தைக்கு வரும் காய்கறிகள் மற்றும் பழவகைகள் மர பணு மாற்றப்பட்ட அமைப்பில் உற்பத்தி செய்யப்படுகின்றதை அவதானிக்கலாம்.

எமது எண்ணம் மற்றும் உணர்வு இரண்டையும் உருவாக்குவது எமது மர பியல் மற்றும் வாழ்வியல் முறைகளா கும் என்றால் மிகையாகாது. நாம் அன் றாடம் உண்ணும் உணவுப் பழக்கம், குடும்ப உறவுகள், நட்பு, சமுதாயம் மற்றும் சுற்றுப் புறச் சூழல் ஆகியவை நமது மரபியல் அமைப்பை மெல்ல மாற்றும் திறன் கொண்டவை. மனித னின் எண்ணம் மனஎழுச்சி இரண்டும் நேரடியாகவும், மறைமுகமாகவும் மர பணுக்களின் செயற்பாடுகளில் செல் வாக்குச் செலுத்துகின்றன.

அதே போல் ஒருவருடைய நடத்தை, மூளை மற்றும் உடலுறுப்புக்களில் பல வகை மரபணுக்களைச் செயல்படச் செய்வதோடு, மரபணுக்களின் செயற் பாடுகளை நிறுத்தவும் செய்கின்றன. இவ்வரிசையில், தற்கால நவீன மரபணு மாற்று உற்பத்திகளின் நுகர்வு தொடர் பாக நோக்க வேண்டியதன் தேவை அவசியமாகவுள்ளது.



**மரபணு மாற்றுப் பயிர்கள்**

மரபணு மாற்றுப் பயிர் (Genetically modified Crops) என்பவை மரபணு மாற்றப்பட்ட உயிரினங்கள் மூலம் உரு வாக்கப்பட்ட பயிர்வகைகளாகும். மர பணு மாற்றப்பட்ட உயிரினங்களின் டி. என்.ஏ.வில் மரபணு பொறியியல் மூலம் குறிப்பிட்ட மாற்றங்கள் உருவாக்கப்படு கின்றன. இதன் முக்கியமான நோக்கம், குறிப்பிட்ட ஒரு இனப் பயிரில் இயற் கையாக இல்லாத ஒரு புதிய இயல்பை அந்தப் பயிரில் புகுத்துதல் ஆகும். இவற்றில் உணவுப் பயிர்களும், உண வல்லாத வேறு உற்பத்திப் பொருட்க ளுக்கான பயிர்களும் (மருந்துப் பயிர், உயிரி எரிபொருள் பயிர்) அடங்கும்.

இவ்வகைப் பயிர்கள் 1990 களிலிருந்து சந்தைக்கு வர ஆரம்பித்தன. குறிப்பாக சோயா அவரை, தக்காளி, விதையற்ற முந்திரி, கடுகு, பருத்தி விதை, எண்ணெய் என்று மரபணு மாற்றப்பட்ட பயிர்களின் உற்பத்திகள் சந்தைக்கு வர ஆரம்பித்தன. இந்த மரபணு மாற்றத்திற்குக் காரணங் களாக பூச்சி எதிர்ப்பு, நோய் எதிர்ப்பு, ஊட்டச்சத்து அதிகரிப்பு, விளைச்சல் அதிகரிப்பு, வரட்சி மற்றும் உப்புத் தன்மையைத் தாங்கிய நிலையிலும் பயிர் வளர்தல் போன்றவை கூறப்படுகின்றன. தோல் தடிமனான, சதைப்பற்றான தக்காளி கிடைக்க, அதில் உருளைக் கிழங்கின் மரபணுக்களை கலந்திருக் கின்றனர். பின்னர் விலங்குகளிலும் இம்முறை கையாளப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மரபணு மாற்றப்பட்ட பயிர்களி லிருந்து பெறப்படும் உணவு மற்றும் ஏனைய நுகர்வுப் பொருட்களானது, வழமையான முறையினால் பெறப்படும் உணவிலிருந்து மாறுபட்டு மனிதர் களுக்கு அதிக உடல்நலத் தீங்குகளைத் தருவதோடு, இத்தொழில்நுட்பத்தின் அளவுக்கதிகமான பயன்பாடானது விவ சாயிகளுக்குச் சில சூழலியல் சீர்கேடு களையும் ஏற்படுத்துகின்றது. அதாவது, மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் மண் ணுக்கும் நிலத்தடி நீருக்கும் மற்றும் சுற்றியுள்ள பயிர்கள், உயிரினங்கள் மற்றும் நுண்ணுயிரிகள் ஆகியவற்றுடன் சுற்றுச் சூழலுக்குச் சேதம் விளைவித்து அவற்றை நஞ்சாக்கி விடுமளவுக்கு அபாயகரமானவை.

இத்தோடு, ஒரு முறை பயிரிடப்பட்ட பின்னர் அவற்றை கட்டுப்படுத்த முடி யாமல் விரிந்த அளவில் பரவிவிடக் கூடியவை. இப்படிப்பட்ட விளைவுகள் காரணமாக உலகில் பல நாடுகளில் மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் தடை செய்யப்பட்டுள்ளன. அங்கு அவற்றை களப் பரிசோதனை கூட மேற்கொள்ள முடியாது.

**மரபணுப் பயிர்களை அறிமுகப் படுத்தும் மான்சாண்டோவின் வரலாறு:**

கி.பி.1901 ஆம் ஆண்டு ஜான் எஃப் க்யூனி என்பவரால் தனது மனைவி ஒல்கா மான்சாண்டோவின் பெயரால் துவங்கப்பட்ட நிறுவனமே இது. சாக்க ரின் தயாரிக்கும் நிறுவனமான இது பிற் காலத்தில் உலகின் மோசமான பிராடுக் கம்பெனி (Proud Company) என அமெ ரிக்காவிலேயே 'பெயர் பெற்ற' நிறுவன மாக வளர்ந்தது.

கடந்த 108 ஆண்டுகளில், பல்வேறு தில்லுமுல்லுகளைச் செய்து 55 நாடு களில் கிளைகளைப் பரப்பி நிற்கிறது. இதன் கிளைகள், பாகிஸ்தான், சீனா, டென்மார்க், பிரேசில், பேரு, பிலிப் பைன்ஸ், இந்தியா என பலநாடுகளில் காணப்படுகிறது. இதன் நடவடிக்கைகள் பெரும்பாலும் மர்மமானவை.

உலகம் முழுவதும் இந்த நிறுவனம் மரபணு மாற்றம் செய்யப்பட்ட உண வுப் பொருட்களை அறிமுகம் செய்து கி.பி. 2100 க்குள் உலக உணவுச் சந்தை யில் ஒரேயொரு வல்லரசு நிறுவனமாக, சர்வாதிகார நிறுவனமாக மாறத் துடிக் கிறது. உலகம் முழுவதும் வாழும் 700 கோடிக்கு மேற்பட்ட மக்களும் உணவுப் பொருட்களை பயிரிட இந்த நிறுவனத் தின் விதைகளை மட்டும் சார்ந்திருக்கும் நிலையை உருவாக்கிட திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது. வட இந்தியா வில் இந்நிறுவனம் பி.டி. பருத்தி விதைகளை அறிமுகம் செய்தது.

இதனால் பீகார், உத்ரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் முதலான மாநிலங் களில் வருடத்திற்கு ஒரு லட்சம் விவசா யிகள் தற்கொலை செய்துள்ளனர்.

மான்சாண்டோவின் இலாப வளர்ச்சி யைப் பார்த்தால் இதன் அசுர வளர்ச்சி புரியும்.

மண்ணில் இருக்கும் நுண்ணுயிரி ஒன்றின் மரபணுவை எடுத்து, பயிரின் விதைக்குள் செலுத்தி, அந்தப் பயிரி லேயே பூச்சிகளுக்கு எதிரான விஷத் தன்மையை உருவாக்கும் தொழில் நுட்பம்தான் இந்த மரப்ணு மாற்றுத் தொழில்நுட்பம்.

ஏற்கனவே பயிரின் மீதுதான் விஷத் தைத் தெளித்தார்கள். தற்போது, பயிருக் குள்ளேயே 'டெக்னாலஜி' (Technology) கொண்டு விஷத்தைத் திணித்துள்ளனர். மாற்றப்பட்ட பயிரை, புழு மற்றும் பூச்சி கள் சாப்பிடாது என்பதுதான் நம் முன் பாக வைக்கப்படும் மிக முக்கியமான பிரசாரம்! இதனால் பூச்சிக் கொல்லி தெளிக்கும் செலவு குறையும் என்றும் வலை வீசுகிறார்கள்.

புழு, பூச்சிகளே சாப்பிடாது என்றால், அந்தப் பயிரில் நிச்சயமாக அவற்றுக்கு எதிரான விஷம் இருக்கும்தானே! மனி தர்கள் மட்டும் எப்படி சாப்பிட முடியும்?

ஒரு கட்டத்தில் இங்கே இருக்கும் அத்தனை விதைகளும் இந்த மரபணு மாற்று மலட்டு விதைகளாக மாற்றப் பட்டுவிட்டால், இந்தப் பூமியில் வாழ்ந்து கொண்டிருக்கும் புழு, பூச்சி, பறவைகள் எல்லாம் உணவுக்காக எங்கே போவது?

மான்சான்டோவின் தயாரிப்புகளான பி.டி. (Bacillus Thuringiensis) வகை விளைபொருட்களால் உடல்நல பிரச்ச னைகள், மரபணு ரீதியான பிரச்சனைகள் வருகின்றன என்பதை நிரூபிக்கும் பல ஆய்வுகள் வெளிவந்திருக்கின்றன. 2009 ஆம் ஆண்டு சர்வதேச உயிரியல் இதழில் வெளிவந்த ஆய்வு முடிவுகள், பி.டி உணவு பொருட்கள் பரிசோதனை செய் யப்பட்ட எலிகளுக்கு சிறுநீரகம், கல் லீரல் பிரச்சனையை ஏற்படுத்தியதை உறுதி செய்தன.

**மரபணு மாற்றப்பட்ட உற்பத்திகளால் உருவாகும் சீர்கேடுகள்**

மரபணு மாற்றப்பட்ட பயிர்கள் நிச்ச யம் பாதுகாப்பானவை அல்ல. இந்தி யாவில் அதிகம் பயிரிடப்பட்ட மரபணு பருத்தி ஏற்படுத்தும் பிரச்சினைகள், தற்போது பரவலாகக் கவனத்துக்கு வந்துள்ளன. விவசாயிகள் தற்கொலை முதல், மண் மலடாதல், சுற்றுச் சூழல் சீர்கேடு, தேனீக்கள் மறைவு, விலை வீழ்ச்சி வரை பல்வேறு சிக்கல்கள் ஏற்படக் காரணமாகயிருந்தன. அத்துடன் வேறுபட்ட உடல்நலப் பாதிப்புகள் ஏற்படுவதற்கு இம்மரபணு உற்பத்திகள் காரணமாகவுள்ளன. இது பற்றி இந்தி யாவில் 400 இற்கும் மேற்பட்ட விஞ் ஞானிகள் மேற்கொண்ட ஆய்வுகளின் தொகுப்பு ஒரு நூலாக வெளியிடப் பட்டுள்ளது.

மரபணுக்கள் பிழையான செய்முறை குறிப்புகளை வெளிப்படுத்துவதன் பின் விளைவாக உடல் செல்கள் (Cells) முறைகேடாகச் செயல்படுகின்றன. டி. என்.ஏ சிதைவால் பல்வேறு வகை மரபணுக்களும் சிதைவதால், செல்களி லும் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுகின் றன. கூடுதலாக கலோரி ஆற்றல் கொடுக்கக்கூடிய மாப்பொருள்கள் மற் றும் சக்கரை உணவுகளை அதிகம் உண்பதால், இரத்தத்தில் குளுகோஸ் மற்றும் இன்சுலின் அளவுகளும் உயர் கின்றன. இதற்கிடையில் இன்சுலின் அளவு உயர்வதால், பலவகை மரபணுக் கள் தூண்டப்பட்டு செயல்படுகின்றன.

இந்த மரபணுக்கள், அழற்சி மற்றும் மன அழுத்த ஹோர்மோன் ஆகிய வற்றை பெருமளவில் உருவாக்கி விடு கின்றன.

வயிற்றுப் பகுதியில் பெருமளவில் கொழுப்பு செல்கள் உருவாகி உடல் பருமன் நோயை வளரச் செய்கிறது. உடல் முதிர்ச்சி சார்ந்த மரபியல் சிதைவு களால் உடலில் ஊட்டச்சத்துகளைப் பயன்படுத்தும் செய்முறை குறைகிறது. இதன் விளைவால், உடல் நோய் எதிர்ப்பு இயக்கத்திறன் குறைவடைந்து தொற்று நோய் கட்டுப்பாடு சீர்குலைகிறது என பல இந்திய ஆய்வு வெளியீடு மற்றும் கட்டுரைகள் கருத்துக்களை பரிமாறி யுள்ளன.

**மரபணு மாற்று உற்பத்திகளிலிருந்து நம்மை பாதுகாத்துக் கொள்வ தற்கான சில ஆலோசனைகள்.**

- மரபணு மாற்றப்பட்ட பயிர்களினால் ஏற்படும் பாதிப்புக்களையும் பாரம் பரிய பயிர்களின் பாவனையினால் ஏற் படும் நன்மைகளையும் பற்றிய தெளி வினை மக்களுக்கு எடுத்துரைத்தல்.
- பாடசாலை மற்றும் பல்கலைக்கழ கங்களில் இது தொடர்பாக பாடத் திட்டங்களில் உள்ளடக்கப்படல்.
- அரசு மரபணு உற்பத்தி தொடர்பி லான கொள்கைகளையும் சட்ட திட்டங்களையும் வகுத்தல்.
- வெளிநாடுகளிலிருந்து மரபணு உற் பத்திகளை இறக்குமதி செய்வதை தடைசெய்தல்.
- அரசாங்க கொள்கைத் திட்டங்களை அமைத்து அதன் பிரகாரம் மக்களுக்கு பாரம்பரிய பயிர்களையும் அதன் விதைகளையும் மானிய அடிப்படை யிலும் இலவசமாகவும் வழங்குதல்.
- பாரம்பரிய பயிர்ச்செய்கை விவசாயி களை ஊக்குவித்தல்.
- சிறு வீட்டுத் தோட்டங்கள் உட்பட மக்கள் தம் வீட்டு சுற்றுப்புற சூழலில் பாரம்பரிய பயிர்களை நடுதல்.
- பெரிய விவசாய நிலப்பரப்புக்களி லும் மரபணு மாற்றப்பட்ட பயிர் களுக்குப் பதிலாக மரபு ரீதியான பயிர்களை செய்கை பண்ணுதல்.
- பாரம்பரிய பயிர்களின் முக்கியத்து வத்தினை எடுத்துரைத்தல். அதன் சூழல் நேயத் தன்மையின் அவசியத் தினையும் விழிப்புணர்வூட்டல்.
- சந்தைகளிலும் விற்பனை நிலையங் களிலும் பாரம்பரிய பயிர்களை விற்பனை செய்தல்.
- பாரம்பரிய பயிர்களின் விலைகளில் அனைவரும் கொள்வனவு செய்யக் கூடிய வகையில் விலையினை ஏற்படுத்தல்.
- கவர்ச்சிகளுக்கும் பொலிவிற்கும் ஏமாந்து விடாது எம்மை நாமே காப்பதே சிறந்த வழியாகும்.

**பாரம்பரிய மற்றும் மரபணு மாற்று முறையிலான உற்பத்திகளுக்கு இடையிலானதொரு ஒப்பீடு**

| பாரம்பரிய முறையிலான உற்பத்திகள் | மரபணு மாற்று முறையிலான உற் பத்திகள் |
|---|---|
| சூழல் நேயமான முறையில் உற்பத்தி செய்யப்படும். | மரபணுக்களை மாற்றி உற்பத்தி செய்யப்படும். |
| கவர்ச்சி, அழகு, பொழிவு, நிறம், பளபளப்பு தன்மை என்பன குறைவு. (நுகர்வோரை கவரும் தன்மை குறைவு ) | கவர்ச்சி என்பன அதிகம் காணப்படுவதால் நுகர்வோரை அதிகம் ஈர்க்கும். |
| குறுகிய நீடித்திருப்புத் தன்மை | நீண்ட கால நீடித்திருப்புத் தன்மை. |
| உடல் ஆரோக்கியத்திற்கு உகந்தது | உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியது. |
| பூச்சிகள், களைகளின் தாக்கம் அதிகம். | களைகளின் தாக்கங்களை கட்டுப்படுத்த மரபணுக்களில் மாற்றம் செய்யப்பட்டிருக்கும். |
| சுவை அதிகம் | சுவை குறைவு. டொக்ஸின் அதிகம் |
| விதைகள் இனப்பெருக்க ஆற்றல் கொண்டது. | விதைகள் அற்றது. இனப்பெருக்க ஆற்றலும் அற்றது. |
| பாரம்பரிய பயிர்களே உற்பத்தி செய்யப்படும். | புதிய இனங்கள், பயிர்களை உற்பத்தி செய்யலாம். |
| சூழல் மற்றும் மனித நலத்திற்கு நேயமுள்ளது. | புதிய நோய்களை தோற்றுவிக்கக் கூடியது. |
| உயிர்ப்பல்வகைமையின் செழுமைக்கு துணைசெய்யும் | சூழலுக்கு தீங்கு விளைவிக்கத் தக்கது. |
| | [illegible] பாதிப்படைதல். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைக்குக் கட்டுப்படுதலும் கருத்துச் சுதந்திரமும்



• முஹம்மத் பகீஹுத்தீன்

இஸ்லாமிய சட்டப்பரப்பில் தலைமைக்குக் 'கட்டுப்படுதல்' என்ற கருத்தியலுக்கான வரையறைகள் யாது என்ற வினாவிற்கு இந்தக் கட்டுரை விடை தேடுகிறது. மேலும் சுதந்திரமான கருத்தாடல்கள், மக்கள் எழுச்சிப் போராட்டங்கள், பேரணிகள், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் போன்ற கருத்து வெளிப்பாட்டுக்கான வழிமுறைகள் ஆட்சிக்கு எதிரான போர் முரசு அல்ல என்பதை இந்த ஆக்கம் தெளிவுபடுத்த முனைகிறது.

''இறை விசுவாசிகளே! அல்லாஹ்விற்குக் கீழ்படியுங்கள். அவனது தூதருக்கும் கீழப்படியுங்கள். உங்களில் அதிகாரம் உள்ளவர்களுக்கும் கட்டுப்படுங்கள். (அரசு-குடிமக்கள் விவாகரத்தில்) ஏதாவது பிணக்கு ஏற்பாட்டால் அதில் தீர்வு காண்பதற்கு குர்ஆன் மற்றும் சுன்னாவின் பக்கம் தரும்பி விடுங்கள்.'' (சூரா நிஸா:59)

அல்லாஹ்விற்கும் அவனுடைய தூதருக்கும் முற்று முழுதாகக் கட்டுப்படுவது வாஜிபாகும் என்பதில் அறிஞர்களுக்கு மத்தியல் கருத்து பேதம் கிடையாது. அவ்வாறே ஒவ்வொரு முஸ்லிமான ஆணும் பெண்ணும் பாவமல்லாத விடயத்தில் தலைமைக்குக் கட்டுப்படுவது வாஜிப் என்பது இஸ்லாமிய சட்டப் பரப்பின் தீர்ககமான கருத்தாகும்.

ஆனால் அதிகாரம் வழங்கப்பட்ட மக்கள் தலைமைக்குக் கட்டுப்படுதல் என்பது 'நன்மையான விவாகாரங்களில்' மாத்திரம் என்ற வரையரையுடனே அவர்களுக்கான கீழ்படிதலை இஸ்லமிய சட்ட ஒழுங்கு விளக்கியுள்ளது. பாவமான காரியங்களில் தலைமைக்குக் கட்டுப்படுதல் ஆகாது என்தே இஸ்லாத்தின் அடிப்படையாகும்.

மக்கள் தலைவர்களான ஆட்சியாளர்களுக்கு, சமூகத் தலைமைகள் மற்றும் வழிகாட்டிகளுக்குக் 'கீழ்ப்படிதல்' என்ற கருத்தியலைப் புரிந்து கொள்ளும் வகையில் தெளிவான சட்ட நுணுக்கங்களை வளைகுடா உலமா ஒன்றியத்தின் தலைவர் அஷ்ஷெய்க அஜீல் நிஷ்மி அவர்கள் வெளியிட்ட ஒரு அறிக்கையில் மிகவும் தெளிவாக விழுக்கியுள்ளார்கள். அதில் கூறப்படட முக்கியமான விடயங்களை இங்கே தருகின்றோம்.

1) தலைமைகளின் கட்டளைகள் பாவமான காரியங்களில் இருந்தால் 'கீழ்ப்படிதல்' ஹராம் என்பது ஷரீஆ சட்டத்தின் தீர்க்கமான முடிவாகும். இறைத்தூதர் கூறியதாக அலி (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'பாவமான விவகாரங்களில் கீழ்படிதல் என்பது கிடையாது. கீழ்ப்படிதல் என்பது நன்மையான விவகாரங்களில் மாத்திரமே உண்டு.'' (புகாரி)

ஆட்சித் தலைமைகள் இஸ்லாமிய நெறி முறைகளுக்கு புறம்பான நிலைப்பாடுகளை எடுக்கும் போது அவர்களுக்கு கட்டுப்பட வேண்டாம் என்பதே ஷரீஆ சட்டத்தின் வரம்பாகும். இதனை எதிர்மறையான அணுகுமுறை என்றோ அல்லது எதிர்மறை மனப்பாங்கை ஊக்குவித்தல் என்றோ அர்த்தம் கொள்ளத் தேவையில்லை. மாறாக தலைவர்களின் இஸ்லாத்திற்கு முரணான நிலைப்பாடுகளை அல்லது நீதிக்கு புறம்பான கொடுமைகளை மக்கள் நிராகரிக்க வேண்டும் என்ற வழிகாட்டலாகவே மனம் கொள்ள வேண்டும்.

2) இந்த வகையில் அதிகாரமுடைய தலைமைகளுக்கு 'நல்லுபதேசம் செய்வது' கீழ்ப்படிதல் என்ற சிந்தனைக்கு முரணானது அல்ல. மாறாக அது ஒரு வணக்கமாகும். 'மார்க்கம் என்பது உபதேசமாகும்'' என்ற ஹதீஸில் குடிமக்களுக்கு உபதேசம் செய்வதை விடவும் இமாம்களுக்கு உபதேசம் செய்வதை நபிகளார் முற்படுத்தியுள்ளார்கள்.

இங்கு உபதேசம் செய்தல் என்பது நன்மையை ஏவி தீமையைத் தடுத்தல் என்ற வட்டத்தில் வரும் பாரிய சீர்திருத்தப் பணியைச் சுட்டுகிறது. உபதேசம் செய்தல் என்பதை அந்த விரிந்த கருத்தில் நோக்கத் தவறும்போது இஸ்லாமிய அரச ஒழுங்கையே பிழையாகப் புரிந்துகொள்ளும் தவறு நிகழ்கிறது.

தவறைச் சுட்டிக் காட்டுவது, விமர்சிப்பது கட்டுப்படுதல் என்ற வட்டத்திற்கு வெளியிலுள்ள செயற்பாடல்ல. அது கீழ்ப்படிதல் என்ற அடிப்படையை வேண்டி நிற்கும் ஒரு செயலாகும். சில போது சுட்டுவிரல் மொட்டு விரிக்கும் போது அதிகாரம் தொற்றியுள்ள நெஞ்சில் காயம் ஏற்பட்டால் நாம் சுட்டுவிரலை நொந்துகொள்ள முடியாது.

3) மக்கள் தலைவனாக அமர்த்தப்பட்ட ஆட்சியாளின் தவறுகளைச் சுட்டிக் காட்டும்போது அது தனிமையில் அமைய வேண்டும் என்பது இஸ்லாமிய போதனையாகும். நாலு பேர் முன்னிலையில் சந்தி, சந்தியாக நின்று பகிரங்கமாக கீறிக் கிழிப்பது இஸ்லாமிய பண்பாடல்ல.

''யார் ஒரு ஆட்சியாளனுக்கு நல்லுபதேசம் செய்ய விரும்புகிறாறோ அவர் அதனை பகிரங்கமாகச் செய்யாதிருக்கட்டும். உபதேசம் செய்ய விரும்புபவர் அதிகாரியின் கையைப் பிடித்து யாருமில்லாத வகையில் தனிமையில் அழைத்து அந்த உபதேசத்தை செய்யட்டும். அவர் அதனை ஏற்றுக் கொண்டால் சரி. இல்லாவிட்டால் அவர் தனது கடமையை நிறைவேற்றியவராவார்.''


4) இது இரகசியமாக உபதேசம் செய்வாதால் பயன் உண்டு என்று கருதப்படும் தலைவர்களுக்குப் பொருத்தமான வழிமுறையாகும். இரகசிய உபதேசம் வேகாது என்று கருதப்படும் தலைவர்களுக்கு பகிரங்கமாகச் சுட்டுவதும் இஸ்லாமிய ஷரீஆ அனுமதித்த வழி முறையே. ஏனெனில் தப்பான பாதையில் பயணிக்கும் தலைமைகளை சமூகமே நிராகரிக்க வேண்டும் என்பதை இஸ்லாம் விரும்புகிறது.

எனவேதான் நபி (ஸல்) அவர்கள்: 'ஷஹீத்களின் தலைவர் ஹம்ஸா பின் அப்துல் முத்தலிபாவார். அவ்வாறே ஒரு மனிதர் ஒரு அநியாயக்கார ஆட்சியாளர் முன் எழுந்து நின்று நன்மையை ஏவி தீமையைத் தடுத்ததன் காரணமாக கொல்லப்படுகின்றவனுமாவான்'' என்று கூறினார்கள். எனவே அநியாயக்கார தலைவனுக்கு முன்னால் எழுந்து நின்று பகிரங்கமாக உபதேசம் செய்வது உயர்ந்த ஜிஹாதாகும் என்ற கருத்தை நபி (ஸல்) அவர்கள் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

5) துணிவோடு தவறுகளைச் சுட்டுவது உயர்ந்த குணமாகும். அதனை இஸ்லாமிய சட்டப் பரபரப்பில் ஆட்சியாளருக்கு செய்யும் நல்லுபதேசம் என்ற வகையில் கடமையாக்கியுள்ளது. அந்தக் கடமையை இரகசியமாக செய்வதா அல்லது பகிரங்கமாக செய்வதா என்பது சூழ்நிலைகளை கருத்திற் கொண்டு 'நலன்கள்' என்ற சட்ட விதிக்கு ஏற்பத் தீர்மானிக்க வேண்டும்.

6) நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் மகத்தான பணிக்கான வழிமுறைகள் இன்று விரிவாக்கம் பெற்றுள்ளது. ஒரு நாட்டில் நிலவும் சட்டம் ஒழுங்கு, சுதந்திரத்திற்கு ஏற்ப அதன் வழிமுறைகளும் விரிவடையும்.

அனைத்து அரசுகளும் சகல விமர்சனங்களை உள்வாங்கும் வகையில் கதவுகளை திறந்து வைப்பதில்லை. இருப்பினும் குடிமக்களின் கருத்துக்களையும் விமர்சனங்களையும் செவிமடுப்பதற்கான பல பொறிமுறைகள் நவீன கால அரச ஒழுங்கில் காணப்படுகின்றன. அதனை மக்கள் பயன்படுத்துவது அரசுக்கு எதரிரான புரட்சியாக யாரும் கருதுவதில்லை.



### ஆர்ப்பாட்டாங்கள் அரசுக்கு எதிரான கிளர்ச்சியல்ல

நவீன உலக ஒழுங்கில் கருத்துச் சுதந்திரத்தை வழங்கும் அரசாங்க பொறிமுறைகள் வித்தியாசப்படுகின்றன. சில ஆட்சி பீடங்கள் இறுக்கமான போக்கையும் இன்னும் சில ஆட்சி பீடங்கள் மிதவாத போக்கையும் கடைப்பிப்பது நாம் அறிந்ததே.

நாட்டின சட்டயாப்பு கூறும் விதிமுறைகளுக்கு ஏற்ப ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடும் ஒருவனை துரோகி என்றோ கிளர்ச்சியாளன் என்றோ ஒருபோதும் கூறமுடியாது. எனவே மக்கள் தலைமை வழங்கியுள்ள வரையறைக்குள் இருந்து கொண்டு அமைதி வழிமுறையில் கருத்துக்களையும் ஆட்சேபனைகளையும் வெளிப்படுத்துவது தலைமைக்குக் கட்டுப்படுதல் என்ற கருத்தியலோடு முரண்படாது. மாறாக அது உண்மையான கட்டுப்படுதலின் ஒரு அங்கமாகவே பார்க்கப்படும். ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பேரணிகள் என எந்த வடிவத்திலாவது சுதந்திரமாக கருத்து வெளியிடும் அனுமதி அடிப்படையில் மக்களின் உரிமையாகும்.

இங்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் என்பது அடிப்படையில் மக்கள் எழுச்சிப் போராட்டத்தின் ஒரு வழிமுறையாகும். அதன் நோக்கமும் இலக்குகளும் நலன்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருந்தால் அது ஒரு நாகரிமான வழிமுறையாகும். மக்கள் நலன்களை அடைந்து கொள்ளும் வகையில் ஒரு வழிமுறையைப் பின்பற்றுவது ஆகும் என்பதே இஸ்லாமிய சட்ட மரபாகும். மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு அல்லது ஒரு கருத்தை தலைமைக்கு எட்டச் செய்வதற்கு இதுதான் தக்க வழியாகும் என்றிருந்தால் அந்த வழிமுறை 'ஆகும்' என்ற நிலையில் இருந்து 'வாஜிப்' என்ற நிலைக்குக் கூட மாறும்.

ஒரு நாட்டின் குடிமக்கள் மக்கள் நலனை நாடி சட்ட ஒழுங்குகளைப் பேணி நாசகார செயல்களில் ஈடுபடாமல் அமைதி வழியில் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது, எதிர்ப்பு ஊர்வலங்கள் செல்வது ஆகுமானதே. பொது நலன்களை அடைந்து கொள்வதற்காக களமிறங்கிய ஆர்ப்பாட்டங்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் மீறும் போது தடை செய்யப்படலாம். அப்போது கூட அந்த வழிமுறை தவறு என்பதற்காக அது தடை செய்யபடவில்லை. அதன் இலக்குகளை மறந்து துஷ்பிரயோகம் செய்தமைக்காகவே அந்த வழிமுறை தடை செய்யப்படுகிறது என்பதை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

### அரச அங்கீகாரமற்ற ஆர்ப்பாட்டங்கள்

மக்கள்* தலைவர்களாக வீற்றிருக்கும் ஆட்சியாளர்களின் அநியாயங்கள் எல்லை மீறிச் செல்லும் போது அவற்றை சுட்டிக் காட்டுவதற்கு அனுமதி தேவையில்லை. அது அடிப்படையில் மக்கள் [illegible] களின் கெடுபிடிகள் எல்லை மீறிப் பரவும் போது தீமையை தடுக்கும் நவீன கால உக்திகளில் ஒன்றான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடாத்துவதற்கு தலைமைகளின் அனுமதியோ அங்கீகாரமோ தேவையில்லை.

சுதந்திரம் மறுக்கப்பட்டு, வாய்களுக்கு பூட்டுப் போடப்பட்டு, வதை முகாம்களான சிறைச்சாலைகள் நிரப்பப்படும் போது, கண்டிப்பாக மக்கள் கொதித்தெழுவார்கள். இந்தச் சந்தர்ப்பங்களில் மக்கள் எழுச்சிப் போராட்ட வழிமுறைகள் நிச்சயமாக தீமையைத் தடுப்பதற்கான சிறந்த வழிமுறையாகும்.

ஆட்சிபீடத் தலைமைக்குக் கட்டுப்படுதல் என்பதையும் முஸ்லிம் ஆட்சியாளர்களுக்கு எதரிராக கிளர்ச்சி செய்தல் என்பதையும் சிலர் உரிய வடிவில் புரிந்து கொள்ளாமல் சிக்கல் படுத்தி குழப்பியுள்ளனர். நேரெதிரான இரண்டு விடயங்களை ஒன்றாக முடிச்சுப் போட்டு நோக்கியதால் இந்த குழப்ப நிலை தோன்றியிருக்கலாம்.

ஷரீஆ சட்டம் 'ஆகுமானது' என்ற விடயத்தையும் 'ஹராம்' என்று தடுத்த விடயத்தையும் ஒரே கூடையில் கலந்து பார்க்கும் அறியாமையை இங்கு அவதானிக்க முடிகிறது. ஆட்சி அதிகாரத்தில் இருக்கும் தலைமை தவறு விடும்போது 'நல்லுபதேசம் செய்தல்' என்ற கடமையானது நன்மையை ஏவி தீமையைத் தடுக்கும் பாரிய பணியை வேண்டி நிற்கும் ஒரு காத்திரமான பொறுப்பாகும். ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்தல் என்பது அதற்கு எதிர் நடவடிக்கையாகும்.

அதிகாரமுடைய தலைமைகளின் தவறை சுட்டிக் காட்டுவது என்பது உபதேசம் செய்தல் என்ற வட்டத்தில் உள்ள நன்மையை ஏவி தீமையை தடுக்கும் உயர்ந்த பணியாகும். ஆட்சிக்கு எதிரான கிளர்ச்சி என்பது ஷரீஆ தடுத்துள்ள ஹராம் என்ற வட்டத்தில் உள்ளதாகும். முதலாவது கூறிய கடமையை செய்யும் ஒரு பிரிவை இரண்டாவது கூறப்பட்ட பாவமான, தடுக்கப்பட்ட காரியமாகப் பார்க்கும் தவறே இன்று நாம் காணும் சிக்கலாகும்.

இஸ்லாமிய சட்ட அறிஞர்கள் 'தடை' என்ற வட்டத்தை விட வாஜிப் என்ற வட்டத்தை அகலப்படுத்தியுள்ளார்கள். அதாவது உபதேசம் என்ற கடமையை, அது குறித்து நிற்கும் அர்த்தங்களை விசாலப்படுத்தி பேசியுள்ளார்கள். ஆட்சிக்கு எதிராகப் புரட்சி செய்வதை முடிந்தளவு கட்டுப்படுத்தி ஒடுக்கியுள்ளார்கள். இன்னொரு வகையில் கூறுவதாயின் வாஜிப் என்பது நேர். ஹராம் என்பது மறை. முஸ்லிம் அறிஞர்கள் சட்ட மரபின்படி நேர்பகுதியை ஆழ அகலத்தோடு கூடுதலாகப் பேசியுள்ளார்கள்.

அரசுக்கு எதிராகப் புரட்சி ஒன்று தேவைப்படின் அதற்கு இரண்டு நிபந்தனைகள் கண்டிப்பாக இருந்தாக வேண்டும் என்று தெளிவாக அறிஞர்கள் விளக்கியுள்ளார்கள்.

1) திட்டவட்டமான ஆதாரங்களுடன் பட்டவர்த்தனமாக இறை நிராகரிப்பு வெளிப்பட்டு ஷரீஆ சட்டத்தை செயலிழக்கச் செய்யும் நிலை தோன்றுமாயின் ஆட்சிக்கு எதிராகப் புரட்சியை மேற்கொள்ளலாம்.

2) ஷரீஆ சட்டத்தை நிலை நிறுத்துவதற்கும் குப்ரை அழிப்பதற்குமான சக்தியும் இயலுமையும் இருப்பதோடு அந்தப் புரட்சி தற்போதைய நிலையை விட கேவலமான ஒரு குழப்பத்திற்கு இட்டுச் செல்லாமலும் இருக்க வேண்டும்.

இது ஆட்சிக்கு எதிரான புரட்சியின் வாசலை சட்ட இமாம்கள் முடிந்தளவு மூடியே வைத்துள்ளார்கள் என்பதற்கான ஆதாரமாகும். அதன் பொருள் ஆகுமான சீர்திருத்த வழிமுறைகளை புறக்கணிப்பது அல்ல.

### உன் தோலுரிக்கப்பட்டாலும் அநீதிக்கு உடந்தையாக இருக்காதே

இரும்புக் கரம் கொண்டு அடக்கி யாளும் அரசர்கள் உன் முதுகில் கசையடி கொடுத்தலும் கட்டுப்படுதல் வேண்டும் என்பது மடமையாகும். ''ஆட்சித் தலைவர் உன் முதுகில் சாட்டையடி கொடுத்தாலும் அல்லது உன் சொத்துக்களை சூரையாடினாலும் கூட நீ அரசுக்குக் கட்டுப்படத்தான் வேண்டும்'' என்ற நீண்ட ஹதீஸின் வாசகம் அநியாயத்திற்கு துணை போகும்படி ஒரு போதும் கூறவில்லை.

இஸ்லாமிய சட்டவியலின் மொத்த அடிப்படைக் கொள்கையே அநியாயம் களையப்பட்டு நீதி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதும், நலன்கள் உறுதிப்படுத்தப்பட்டு தீமைகள் அழிக்கப்பட வேண்டும் என்பதாகும். எனவே நிச்சியமாக மேற்கூறிய ஹதீஸுக்கு வேறு அர்த்தம் இருக்க வேண்டும் என்பது புலனாகிறது.

எனவேதான் உன் தோலுரிக்கப்பட்டாலும் பேசாமல் கட்டுப்படு என்ற மேற்கூறிய நீண்ட ஹதீஸில் வரும் கூற்றுக்கு இஸ்லாமிய அறிஞர்கள் பல அர்த்தங்களைத் தந்துள்ளார்கள்.

1) நீ கொடுமைப்படுத்தப்பட்டாலும் கட்டுப்பட்டுத்தான் ஆக வேண்டும் என்பது 'தலைமைக்கு கட்டுப்படுதல்' என்ற கோட்பாட்டிற்கு முரணாகும். நீதியான மக்கள் தலைவன் ஒருபோதும் மக்களை வதைப்பதில்லை. சர்வாதிகார ஆட்சியாளன் மட்டுமே இப்படி நடந்து கொள்வான். இந்நிலையில் அவனுக்குக் கட்டுப்படும் மக்கள் மனத்திருப்தியோடு அடிபணிவதில்லை. நிர்ப்பந்தமும் பலவீனமும் காரணமாக உள்ளம் வெறுத்த நிலையில் தான் அவர்கள் கட்டுப்படுவர். இது ஈமானின் தாழ்ந்த நிலையாகும் என நபிகளார் விளக்கியுள்ளார்கள்.

அநீதியான ஆட்சியாளனின் தவறுகளை சுட்டிக்காட்டாமல் மௌனமாக இருந்தால் ஒட்டுமொத்த சமூகத்திற்கும் இறை தண்டனை இறங்கும் என இஸ்லாம் கடுமையாக எச்சரித்துள்ளது.

''ஒரு அநியாயக்காரனின் கொடுமைகளை மக்கள் தடுக்காமல் வேடிக்கை பார்த்தால் இறை தண்டனை முழு சமூகத்திற்கும் பொதுவகவே சூழந்து கொள்ளும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள். எனவே அடக்குமுறைக்குப் பயந்து மௌனம் காப்பது அநியாயத்தை அங்கீகரித்தல் என்ற அர்த்தம் அல்ல.

2) ''உன் முதுகில் கசையடி விழுந்தாலும் தலைவனுக்கு கட்டுப்படு'' எனும் நபிவாக்கு ஸஹீஹ் முஸ்லிமில் பதிவாகியுள்ள ஒரு ஹதீஸாகும். ஹுதைபா (ரழி) அவர்கள் தீமைகள் நிறைந்த காலப்பகுதியில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என வினவிய போதே, நபி (ஸல்) அவர்கள் இதனைக் கூறுகிறார்கள். இங்கே அநியாயக்கார ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் தடுக்கப்பட வேண்டிய தீமையாகும் என்பதையே அந்த ஹதீஸ் உறுதி செய்கிறது.

அவர்களின் அடாவடித்தனங்களுக்கு இந்த ஹதீஸ் ஒப்புதல் வழங்கவில்லை. மக்கள் தலைவன் என்பவன் குடிமக்களுக்கு நீதி வழங்கவேண்டும். அவர்களின் உடமைகளை பாதுகாக்க வேண்டும். அவர்களின் மானம், உயிர், உடம்பு, கல்வி, வாழ்வு அனைத்திற்கும் உத்தரவாதம் தரவேண்டும். அது தலைமையின் பொறுப்பாகும். நாட்டுக்கும் மக்களுக்கும் நலன்களை அமுல்படுத்த தவறும் அநியாயக்கார ஆட்சியாளன் மக்களை ஆளும் சட்டபூர்வத் தன்மையை இழந்தவனாவான் என்ற கருத்தையே அந்த ஹதீஸ் சுட்டுகிறது.

எனவேதான் தறிகெட்ட ஆட்சியாளர்களுக்கு முன்னால் இஸ்லாமிய அறிஞர்கள் எதிர்த்து நின்று போராடியுள்ளார்கள். அப்பாஸிய ஆட்சியாளர் அபூ ஜஃபர் அல்மன்ஸூரின் காலத்தில் அநீதிக்கு எதிரான புரட்சிக்கு இமாம் அபூஹனீபா அவர்கள் ஆதரவளித்தார்கள். அதனால் அவர் கடுமையான சாட்டையடிக்கு உட்படுத்தப்பட்டார். விளைவாக விலங்கிடப்பட்ட நிலையிலேயே ஹி150 இல் சிறையில் வைத்து வபாத்தானார்கள்.

அவ்வாறே இமாம் அபூஹனீபா (ரஹ்) அவர்களும் அநியாய

(பக்.13)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சபாஷ்! ஜெனீவா சென்று, வென்று வரவேண்டும் சௌபாத்

• அனஸ் அப்பாஸ்






செல்வன் ஏ.எம்.எம். சௌபாத் மூன்று பாடசாலைகளுக்குச் சொந்தக்காரர். தரம்-5 வரை GMMS உம், பின்னர் 3 வருடங்கள் சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயமும், இறுதியாக கல்முனை ஸாஹிராக் கல்லூரியும், இவரை செதுக்கியது எதற்காக?

குறைந்த மின்சக்தியில் இயங்கும் மா அரிக்கும் இயந்திரத்தை அடுத்து, சர்வ தேச கவனத்தை ஈர்த்த கண்டுபிடிப்பாக இவர் உருவாக்கியது. "சூரிய சக்தியில் இயங்கும் கிருமிநாசினி தெளிக்கும் இயந்திரம்." இது நிறையிலும் (பாரம்) குறைந்தது.

ஒரு இளம் கண்டுபிடிப்பாளருக்கு முதலில் குடும்பமும், சிறுவயது முயற்சிகளும், பாடசாலை சமூகமும், தேடல்களுமே பாடசாலைக் காலத்திலேயே தனது அடைவை வெளிக்காட்ட உறுதுணையாக இருப்பதை கடந்த பல 'மீள்பார்வை' பத்திரிகையின் இளம் சாதனையாளர் பகுதிகளில் வாசித்திருப்பீர்கள். அர்ப்பணிப்பு மிக்க வியாபாரியான அப்துல் மஜீத் அவர்களின் மகனும், 3 பேருக்கு சகோதராருமான சௌபாத்தின் கதையும் அதையே பிரதிபலிக்கின்றது.

இயந்திரமாக இதுவரை இல்லாத, மிகையாக மனித வலுவை உறிஞ்சாத ஒரு பிரயோசனமிக்க தயாரிப்பைதான் செய்திருக்கின்றேன் என்ற திருப்தி. இம்மாதம் க.பொ.த உயர்தர பரீட்சையை எழுதவுள்ள சௌபாத்திடம் தெரிகின்றது அல்ஹம்துலில்லாஹ்.

இத்துடன் நின்றுவிடவில்லை சௌபாத். க.பொ.த. உயர்தர பரீட்சைக்குப் பின் என்ன கண்டுபிடிப்பை மேற்கொள்வார் என்றும் சொல்கிறேன் கேளீர்!

இலங்கையின் ஏற்றுமதி வணிகத்தில் அதிகம் செல்வாக்குச் செலுத்தும் ஒன்றே 'கருவாப்பட்டை'. தற்போது கைகளைப் பாவித்தே கருவாவை பிரித்தெடுக்கின்றனர். கருவாவை பிரித்தெடுக்கும் இயந்திரம் ஒன்றை தயாரிப்பதே இவரின் அடுத்த டார்கட் (Target).


தேசிய ரீதியாக பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற "Innova minds - 2017" போட்டியில் 21 பேர் தெரிவாகினர். இதில் Semi Final இற்கு தெரிவான 7 பேரை ஜெனீவா அல்லது இந்தோனேசியாவுக்கு அழைத்துச் செல்கின்றனர். அந்த 7 பேரில் சௌபாத்துடன் இன்னொரு முஸ்லிம் மாணவனும் இலங்கையில் இருந்து தெரிவாகி இருக்கின்றனர்.

உள்நாட்டில் இவருக்குக் கிடைத்த அங்கீகாரங்களை பட்டியலிட்டால், இலங்கை கண்டுபிடிப்பாளர் ஆணைக்குழு, சாய்ந்தமருது விதாதாவள நிலையம், 'The Talent" போட்டி மூலம் தேசிய இளைஞர் கழகம், கொழும்பு ஆனந்தா கல்லூரியின் தேசிய மட்ட புத்தாக்கப் போட்டி, இலங்கை புத்தாக்க ஆணைக்குழுவின் தேசிய மட்ட போட்டி, இலங்கை பொறியியலாளர் நிறுவகத்தின் போட்டி என்பன இவரை கௌரவப்படுத்தியிருக்கின்றன. பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கியிருக்கின்றன.

தனது பெற்றோருக்கும், சகோதரர்களுக்கும், ஊக்கமூட்டிய பாடசாலை அதிபர் M.S. முஹம்மட், புத்தாக்குனர் கழக பொறுப்பாசிரியர் ஏ. ஆதம்பாவா அவர்களுக்கும், அனைத்திற்கும் வழிகாட்டிய வல்ல இறைவனுக்கும் நன்றி சொல்லும் சௌபாத், அறிவியலில் மட்டுமன்றி அறிவிலும் தான் கெட்டி என்பதை நிறுவ தினமும் 1-2 மணித்தியாலங்கள் புத்தக வாசிப்பிலும் ஈடுபடுகின்றார்.

சர்வதேச புத்தாக்குனர் பலப் பரீட்சைக்காக இன்ஷா அல்லாஹ் எதிர்வரும் செப்டெம்பர் 21 ஆம் திகதி ஜெனீவாவிற்கு பறக்கின்றார் சௌபாத்.



# சர்வதேசத்தில் வெல்ல அஜாத்திற்காக பிரார்த்தியுங்கள்

தச்சுத் தொழிலாளியான சமூன் அவர்களின் 7 புதல்வர்களில் இறுதியானவர்தான் செல்வன் S.M. அஜாத். கல்முனை ஸாஹிராக் கல்லூரியில் தரம்-8 இல் பயிலும் அஜாத், தரம்-5 இல் கற்கும்போதே நண்பர் அப்ராத்துடன் சேர்ந்து சிறு தயாரிப்புகளை மேற்கொண்டு வந்துள்ளார்.

சிறு தயாரிப்புக்களில் இருந்து பெரிய தயாரிப்புக்களாக செதுக்கிய இவர், சூரிய சக்தியினால் இயங்கக் கூடிய தானியங்களின் விதையை விசிறும் இயந்திரத்தை முதலில் வெளிக் கொணர்ந்தார். சௌபாத் மற்றும் அஜாத் ஆகியோர் ஒரே பாடசாலையைச் சேர்ந்தவர்கள் என்பதால் தமது வெற்றிக்கான அடையாளங்களை ஒரே தளத்திலேயே முன்வைத்தனர். விவசாயத் துறைக்கே தமது கண்டுபிடிப்புக்கள் பெரும் பயன்கொடுக்கும் என்கின்றார் அஜாத்.

"இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழு நடாத்தும் 'இலங்கை பொருளாதார அபிவிருத்திக்கான அதிவிஷேட புத்தாக்கங்களை தெரிவு செய்தல் - Innova Minds - 2017' விண்ணப்பித்து தெரிவானோம். தேசிய தொலைக்காட்சியான ரூபவாஹினியில் எமது படைப்புக்கள் குறித்து தொடராக ஒளிபரப்பாகின" என்கிறார் அஜாத்.

இதில் தேசிய ரீதியாக தெரிவான 21 பேரில் Semi Filnal க்கு தெரிவான 7 பேர் ஜெனீவா அல்லது இந்தோனேசியா செல்கின்ற நிலையில், ஏனைய 14 பேரும்' ஆகஸ்ட் 8 ஆம் திகதி தென் கொரியாவுக்கு சர்வதேச புத்தாக்குனர் போட்டிக்காகப் பயணிக்கின்றனர். அந்த வகையில் அந்த 14 பேரில் முஸ்லிம் மாணவர்கள் இருவர். அதில் ஒருவரே அஜாத்.

தனது அடுத்த இலக்காக விவசாயிகள் படும் கஷ்டத்தை போக்க, வயலில் வரம்பு அமைக்கும் இலகுவான இயந்திரத்தை உருவாக்க உத்தேசித்துள்ளார். சர்வதேசத்தில் வென்று நாடு திரும்ப உங்களைப் பிரார்த்திக்கச் சொல்கின்றார் அஜாத்.

## மக்கள்... (06 ஆம் பக்கத் தொடர்)

உறுதிசெய்யும் முறையொன்றின் மூலம் தேசத்தைக் கட்டியெழுப்புவதன் ஊடாக இந்த அடிப்படைப் பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்க முடியும். ஆனால் தேசமொன்றைக் கட்டியெழுப்பாமலேயே இலங்கை சுதந்திரம் அடைந்தது. அதனால் சுதந்திரத்துக்குப் பின்னரும் அதற்கான முயற்சி நடக்கவில்லை. அதிகாரத்துக்கு வந்த அரசாங்கங்களும் சிறுபான்மைச் சமூகங்களைப் பாதிக்கும் வண்ணமே நடந்து கொண்டதனால் பாதிக்கப்பட்ட சிறுபான்மைச் சமூகங்களிடையே வெறுப்புணர்வு வளர்ந்தது.

இரத்தம் சிந்தாமல் நாடு சுதந்திரம் பெற்ற போதும் சுதந்திரமடைந்து 30 வருடங்களில் தொடங்கி தொடர்ச்சியாக முப்பது வருடங்கள் இரத்தம் ஓட்டப்பட்ட நாடாக இலங்கை பெயர் பெற்றது. இந்த இரத்தம் சிந்துதல் சிங்களத் தெற்கில் ஆரம்பித்து தமிழ் வடக்கில் முடிவடைந்தது. இருதரப்பினராலும் இலட்சக் கணக்கான இலங்கையர் கொல்லப்பட்டார்கள். பலர் சித்திரவதைக்குள்ளானார்கள். உயிர்ப்பிழைத்து நாட்டில் வாழ்ந்தவர்கள் மனதளவில் முழுமையாகவோ பாதியோ செத்துக் கிடந்தார்கள். மரண பயம் தாண்டவமாடிய இந்த காட்டுமிராண்டி ராஜ்ஜியத்தில் மக்கள் மட்டுமன்றி அரசும் அரசின் நிர்வாக இயந்திரமும் பழுதடைந்து ஊனம் வடியும் நிலைக்கு மாறியது.

இந்த நிலையில் இருந்து அரசையும் சமூகத்தையும் புனர்நிர்மாணம் செய்ய வேண்டியிருந்தது. மக்களை அச்சத்திலிருந்து மீட்டெடுக்க வேண்டியிருந்தது. அழுகிப் போயிருந்த அரசையும் அரச நிறுவனங்களையும் மீளக்கட்டமைக்க வேண்டியிருந்தது. ஆனால் இதற்கான அறிவோ தேவையோ ஜனாதிபதி ராஜபக்ஷவுக்கு இருக்கவில்லை. யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததாக கையொப்பமிட்ட அவருக்கு நாடு எதிர்நோக்கியிருந்த இந்த நெருக்கடிகளுக்கு தீர்வு காண முடியவில்லை. இறுதியில் அவர் தோற்கடிக்கப்படுவதற்கும் இதுவே காரணமாக அமைந்தது.

நல்லாட்சியும் கூட நெருக்கடிக்கு மேலால் தடவிக் கொண்டிருப்பதேயன்றி நெருக்கடியை வெல்வதற்கான அறிவையோ செயற்பாட்டையோ இதுவரை வெளிக்காட்டவில்லை. இதனால் நல்லாட்சியும் பாரிய நெருக்கடிக்குள் தள்ளப்படுவது தவிர்க்க முடியாததாகும்.

அனைத்து மரபு ரீதியான கட்சிகளுக்கும் கட்சித் தலைவர்களுக்கும் இருந்த அங்கீகாரம் அற்றுப் போய் இவை அனைத்தும் தமது இறுதிப் பயணத்தைத் தொடங்கியுள்ள நிலையிலேயே நாடும் சமூகமும் இருக்கிறது. இந்த இடத்தை நிரப்புவதற்கான மாற்றீடுகளும் நாட்டிலே இல்லை. இந்த நிலை நாட்டை மீண்டுமொரு அராஜகத்துக்கே இட்டுச் செல்லும்.

இந்த யதார்த்தத்தைப் புரிந்துகொண்ட அறிவுபூர்வமான மக்களை ஒன்றிணைத்து மக்கள் சக்தியொன்றைக் கட்டியெழுப்ப முடியுமான சமூக இயக்கமொன்றே விளையவிருக்கின்ற அழிவின் தாக்கத்தைக் குறைப்பதற்கான வழியாக அமைய முடியும். நாம் சொல்லி வருகின்ற முதிர்ச்சி அடைந்த சமூகக் குழுவினரும், நம்பிக்கையிழந்து போயுள்ள சமூகக் குழுவினரும் தான் இதன் அத்திவாரமாக அமையும்.

அரச அதிகாரத்தை மக்களின் கையிலெடுப்பது தான் இதன் நோக்கமாகவிருக்கும். சுதந்திரம் அடைந்ததிலிருந்து தலைவர்களுக்கும் குடிமக்களுக்கும் இடையில் முதிர்ச்சி நிலையில் இருந்த பெரிய இடைவெளி குறைந்து வருகிறது. மக்களின் முதிர்ச்சி தலைவர்களின் முதிர்ச்சியைத் தாண்டிச் செல்லுமாக இருந்தால் மக்களால் ஆட்டுவிக்கப்படுகின்ற அதிகாரமொன்றை எம்மால் உருவாக்க முடியும். மக்கள் இயக்கத்தின் பிரதான இலக்கு இதுதான்.

இந்தக் கருத்தில் உள்ள தமக்கு அறிமுகமானவர்களை இணைத்து சிறு குழுக்களாக தத்தமது பிரதேசங்களில் இதனை ஆரம்பிக்க முடியும். [illegible] கத்துக்காக உழைக்கின்ற நீதி[illegible] கத்துக்கான இயக்கம், மக்கள் சக்தி (புரவஸி பலய) போன்ற ஏனைய அமைப்புக்களும் தமது பெயரில் நடக்கும் செயற்பாடுகளுடன் இணைந்ததாக இந்த வேலைத்திட்டத்தில் இணைந்து கொள்ள முடியும். சோபித ஹிமியின் பணியை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் பேராசிரியர் சரத் விஜேசூரியவின் செயற்பாடுகளால் சில மாற்றங்களை உருவாக்க முடிந்தாலும், பண்பாட்டு ரீதியான அடிப்படை மாற்றங்களை கொண்டு வர முடியுமா என்பதை அவர்களும் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

இருக்கின்ற புதிய, பழைய அமைப்புக்களை ஒன்றிணைத்து கீழிருந்து மேல் நோக்கிச் செல்லும் மைய அமைப்பொன்றை உருவாக்கிக் கொள்ள வேண்டும். இந்த அமைப்பு ஜனநாயகத்துக்கான முன்னுதாரணமாகத் திகழ வேண்டும். இலங்கையில் மறுமலர்ச்சியை ஏற்படுத்துவது இதன் குறிக்கோளாக இருக்க வேண்டும். நலிவடைந்து போயுள்ள மக்களின் உள்ளங்களை உயிர்ப்பித்து, பிளவுபட்டுள்ள தேசியத்தை கட்டியெழுப்ப வேண்டும். குல பேதங்களை முழுமையாகத் துடைத்தெறிந்து, இன, மதங்களுக்கிடையே இணக்கத்தை வளர்க்க வேண்டும். அறிவுபூர்வமாகச் சிந்திக்கின்றவர்களை உருவாக்குவது இந்த இயக்கத்தின் அடிப்படையாக இருக்க வேண்டும். புதிய இலங்கையைக் கட்டியெழுப்புவதற்கான பொது இலக்கொன்று விரிந்த கோணத்தில் வரையப்பட வேண்டும்.

மக்களில் தாக்கம் செலுத்தக் கூடிய இவ்வாறானதொரு இயக்கத்தை உருவாக்க முடிந்தால், புதிய பெறுமானங்களுடன் மாற்றுக் கலாச்சாரமொன்றை உருவாக்கி ஆக்கபூர்வமான மக்கள் திரளொன்றை நம்மால் பண்டைக்க முடியும். இந்த மக்கள் திரள் ஆயிரக்கணக்கில் அன்றி இலட்சக்கணக்கில் பெருக்கெடுக்கும் போது அரச அதிகாரம் இல்லாமலேயே நாட்டுக்குத் தேவையான மாற்றத்தை கொண்டு வர முடியும். இவ்வாறானதொரு இயக்கத்தினால் தான் நாட்டை இருளிலிருந்து மீட்டு ஒளியூட்ட முடியும்.

## மு.கா.வின்... (01 ஆம் பக்கத் தொடர்)

நிறுவனத்தையும் உருவாக்கிவிட்டுச் சென்றார். இந்த நம்பிக்கை நிதியமே தாருஸ்ஸலாம் உட்பட பல சொத்துக்களின் உரித்தைக் கொண்டிருக்கும் உறுதியாகக் காணப்படுகிறது. முஸ்லிம்களின் சொத்தான இந்த தாருஸ்ஸலாமிலிருந்து எந்த வருமானமும் இதுவரை சமூகத்துக்காப் பெறப்படவில்லை என்றும் அசாத் சாலி சுட்டிக் காட்டினார்.

## ரணிலின்... (01 ஆம் பக்கத் தொடர்)

தேர்தலில் வாக்களிக்காத சுமார் 30 இலட்சம் வாக்காளர்கள், வாக்குகளை நிராகரித்த சுமார் 06 இலட்சம் வாக்காளர்கள் வழங்கிய செய்தியை எமது கொள்கை வகுப்பின் போது கவனத்தில் கொள்வோம் எனவும் அவர் தெரிவித்தார்.

செப்டம்பரில் தமது அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பிக்கும் போது கொள்கை வகுப்பு தொடர்பில் மக்களின் கருத்துக்களைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தலைமைக்குக்... (12 ஆம் பக்கத் தொடர்)

ஆட்சிக்கு எதிரான புரட்சியின் போது நீதியின் பக்கம் நின்று புரட்சிக்கு ஆதரவு கொடுத்தார்கள். இவ்வாறே கலீபா முஃதஸிம் பில்லாவின் காலத்தில் இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் மிகக் கடுமையான வதைக்கு உட்பட்டார்கள்.

இங்கு நாம் காணும் உண்மை யாதெனில் இந்த இமாம்கள் யாரும் ஆட்சிக்கு எதிராக கிளர்ச்சி செய்யத் தூண்டவில்லை. ஆனால் அநியாயத்தை பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்கவும் இல்லை. அநீதிக்கு எதிரான அந்தப் போராட்டத்தை ஆட்சிக்கு எதிரான புரட்சியாகப் பார்க்கவுமில்லை. அது தீமையை தடுத்தல் என்ற கடமையை செய்தல் என்றே அர்த்தம் எடுத்தார்கள்.

சீர்கெட்ட ஆட்சியில் நிர்ப்பந்தமாக கட்டுப்பட்டு வாழ்ந்த போதும் அநியாயத்திற்கு துணை போகவில்லை. அவர்கள் சத்தியத்தை மறைக்கவுமில்லை. அதிகாரத்தைக் கண்டு பயப்படவுமில்லை. உண்மையை சொல்ல தயங்கவுமில்லை. கசையடிக்குப் பயந்து மௌனம் காக்கவுமில்லை. தற்போதைய ஆட்சியாளன் மறைந்தால் இனி வருபவன் நல்லவானக இருக்கலாம் என்ற எதிர்பார்ப்புடன் அவர்கள் போராடினார்கள்.

3) நிர்ப்பந்த நிலையில் ஆட்சித் தலைவனின் கொடுமைகளை சகித்துக் கொள்வது ஒரு விதிவிலக்கான சூழ்நிலையாகும் என்பதை மேற் கூறிய ஹதீஸிலிந்து புரழந்து கொள்ள முடியும். பலவீனமான நிலையில் அடிவாங்கிக் கொண்டு மௌனமாக இருப்பது அநியாயத்தை ஏற்பது என்ற அர்த்தம் அல்ல. மாறாக அதைவிட பெரிய தீங்கு நாட்டில் பரவக் கூடாது என்பதற்கான உக்தியாகும். காலங்கள் மாறி சூழ்நிலைகள் வாய்ப்பாக வரும்போது நிச்சயமாக அநீதியை எதிர்த்துப் போராடுவதே அடிப்படையாகும். அடிப்படையான அந்தக் கடமையை விட்டுவிடுவதற்கு இந்த ஹதீஸ் கூறும் விதிவிலக்கான வாழ்வொழுங்கை பயன்படுத்த முடியாது என்பது தெளிவான உண்மையாகும்.

எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், பேரணிகள், மைதானங்களில் மக்கள் திரட்சியாக கூட்டங்கள அமைப்பது போன்ற தவறைச் சுட்டுவதற்கான மக்கள் எழுச்சிப் போராட்டங்கள் கருத்து வெளிப்பாட்டடின் வடிவங்களில் ஒன்றே. கால மாற்றத்தின் விளைவாக தோன்றியுள்ள இந்த அணுகுமுறைகள், வழக்காறுகள் கிளர்ச்சியைத் தூண்டும் புரட்சிகள் அல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசாங்கத்தின்... (01ம் பக்கத் தொடர்)

தற்பொழுது இதனுடைய 51 வீத பங்குகளே விற்கப்படவுள்ளன. இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், லிட்ரோ காஸ் கம்பனி, ஊழியர் சேமலாப நிதியம் ஆகியவற்றின் உரிமையைக் கொண்டுள்ள கன்வில் ஹோல்டிங்ஸ் (தனியாள்) நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்படுகின்ற க்ராண்ட் ஹயாட் ஹோட்டலின் உரிமையிலும் மாற்றம் ஏற்படவுள்ளது.

இதற்கு முன்னர், லங்கா ஹொஸ்பிடல், க்ராண்ட் ஓரியன்ட் ஹோட்டல், வோட்டர்ஸ் எட்ஜ், ஹயாட் ரெஸிடன்ஸீஸ், செலிங்கோ ஹொஸ்பிடல், மொபிடெல், வெஸ்ட் கோஸ்ட், மாந்தை ஸோல்ட், ஹம்பாந்தோட்ட சோல்ட் ஆகிய மூலோபாய நன்மைகளற்ற நிறுவனங்கள் ஏற்கனவே விற்கப்பட்டுள்ளன.

## இஸ்ரேலுக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் உபுல் தேஷப்ரிய தெரிவித்தார். கொரியாவில் வேலைவாய்ப்புகளை பெற்றுச்சென்ற 5000 பேர் வரையும் இஸ்ரேலில் வேலை வாய்ப்புகளை பெற்றுச் சென்ற மேலும் 200 பேரும் இவ்வாறு தப்பிச் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இந்த நிலை தொடருமானால் அந்த நாடுகளில் இலங்கையர்களுக்காக வழங்கப்படும் தொழில் வாய்ப்புக்கள் இழக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக அவர் எச்சரித்தார். இவ்வாறு தப்பிச் சென்றுள்ள நபர்கள் இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகத்துடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தின் படி அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் அந்த பணியகத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் உபுல் தேஷப்ரிய மேலும் தெரிவித்தார்.

## இடியப்பச் சிக்கலில்... (05 ஆம் பக்கத் தொடர்)

தூக்கி நிலைநிறுத்துவதற்கு அக்குழுவால் எதனையயும் செய்ய முடியவில்லை. இப்போது ஜனாதிபதி மைத்திரி ஒரு தேசிய பொருளாதார சபையை உருவாக்கும் பிரேரணையை முன்வைத்துள்ளார். அது ஜனாதிபதி தலைமையில் இயங்கும் எனவும் ஜனாதிபதி தவிர எட்டு உறுப்பினர்கள் அதில் அங்கத்துவம் வகிப்பார்கள் எனவும் கூறப்படுகின்றது.

ஏற்கனவே சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சையும் நீதியமைச்சையும் கையகப்படுத்த ஜனாதிபதி எடுத்த முயற்சிகள் தோல்வியில் முடிந்தன என்பதையும் இங்கு நினைவுகூர வேண்டும். ஜனாதிபதியின் இந்த நகர்வுகளை நோக்கும் போது ஐக்கிய தேசிய கட்சிக்கும் சுதந்திரக் கட்சிக்கும் இடையிலான முறுகல் நிலை முற்றி வருவது தெளிவானது.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி பாராளுமன்றத்தைக் கலைக்க முடியாது. ஆனால், பாராளுமன்றம் சட்டத்தைத் தாண்டி கலையும் வாய்ப்புள்ளது. மொத்தத்தில் தேசிய அரசியலில் ஏற்பட்டுள்ள மாற்றம் இலங்கையர்களுக்கும் குறிப்பாக சிறுபான்மை மக்களுக்கும் நம்பிக்கையளிப்பதாக இல்லை.

## கட்டார் குறித்த... (09 ஆம் பக்கத் தொடர்)

செல்வாக்குச் செலுத்தி வருகின்றது. அது போன்று இஸ்ரேல் சவூதி உறவை வலுப்படுத்தும் நோக்கில் அமெரிக்காவில் உருவாக்கப்பட்ட நிறுவனமே SAPRAC என்பது குறிப்பிடத்தக்கது.

NBC-4 தொலைக்காட்சி சில ஜனநாயகக் கட்சி வேட்பாளர்களால் உருவாக்கப்பட்டது. 2016 தேர்தல் பிரச்சாரத்திற்கு அது 9 மில்லியன் அமெரிக்க டொலரை வழங்கியது. தற்போதைய விளம்பரத்திற்கு SAPRAC அதற்கு 20,000 அமெரிக்க டொலர் கொமிஷன் வழங்கியது.

இதற்கிடையில் தேசிய ஈரானிய அமெரிக்க சபை ஆய்வுப் பணிப்பாளர் ரீஸா மராஷி, AIPAC மற்றும் SABRAC என்பன இஸ்ரேல் சவூதி நலன்களுக்காக ஒருங்கிணைந்து செயலாற்றுகின்றது. சப்ராக்கை ஒரு பல லொபியாக மாற்றுவதற்கு ஐபெக் பயிற்சியளித்து வருகின்றது என்று தெரிவித்துள்ளார். பிராந்தியத்தில் கட்டாரைத் தனிமைப்படுத்தும் அமெரிக்க-இஸ்ரேலியத் திட்டத்தின் முகவர்களாகவே அறபு நாடுகள் செயல்படுகின்றன என்பதற்கு கட்டாருக்கு எதிரான இந்த விளம்பரம் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

எவ்வாறாயினும், அறபு நாடுகள் ராஜதந்திர ரீதியான பாரிய பின்னடைவை எதிர்கொண்டுள்ளன. நிபந்தனைகளுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கு தாங்கள் தயார் என்று அறபு நாடுகள் அறிவித்துள்ளமை கட்டார் தொடர்பான அவற்றின் நிலைப்பாட்டில் ஏற்பட்டுள்ள தளர்வையே காட்டுகின்றது.

## இறக்குமதிகள்... (03 ஆம் பக்கத் தொடர்)

தொடர்பில் தேடிப் பார்க்க வேண்டும் என ஜனாதிபதி சட்டத்தரணி ஸுஹைர், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜய வர்தனவுக்கு வழங்கிய பாராட்டு விழாவின் போது குறிப்பிட்டிருந்தார். அதில் அவர் பல சம்பவங்களை எடுத்துக் காட்டாக முன்வைத்திருந்தார்.

கேரளாவில் இருந்து இருவர் ஐஎஸ் இல் இணைந்து கொள்வதற்காக நீர்கொழும்பின் ஊடாகப் பயணித்தார்கள் என்று ஊடகங்கள் வெளியிட்ட தகவல்கள் ஆதாரமற்றவை என புலனாய்வுப் பிரிவினர் தேடலின் பின்னர் அறிவித்திருந்தனர். லக்ஷரே தைபாவின் இலகு படுத்தல் நிலையம் ஒன்று இலங்கையில் இயங்குவதாக யுத்தம் முடிந்து ஒரு மாத காலத்தில் செய்திகள் வெளியான போதும் இன்றுவரை அப்படியான ஒரு நிலையத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார்.

அதேபோல இலங்கையில் 32 ஐஎஸ் தீவிரவாதிகள் இருப்பதாக இலங்கையின் நீதியமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ வெளிப்படுத்தி இருந்தார். இந்த 32 பேரும் யார் என இதுவரை அடையாளம் காட்டப்படவில்லை. ஐஎஸ் தலைவர் கொல்லப்பட்டார் என்ற செய்தி வந்த பின்னரும் இவர்களில் யாரும் இங்கு ஜனாஸா தொழுகை நடத்தியதாகவும் தெரியவில்லை.

இந்த வகையில் எதிரியை உருவாக்கி நாட்டை நடத்திச் செல்லும் வியூகம் இலங்கையில் வெற்றிகரமாக நடந்தேறி வருகிறது என அமைச்சர் சம்பிக்க ரணவக்க டெய்லி மிரர் பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்திருந்த தற்கொப்ப அடுத்த எதிரியாக இலங்கை முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்படுவதில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

நாட்டுத் தலைவர்களுக்கு இலாப மீட்டும் வழியாக பயங்கரவாதத்தை இறக்குமதி செய்வதற்கான பகடைக் காயாக இலங்கை முஸ்லிம்களைப் பயன்படுத்தாமல் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு அவர்களுக்கு இடம் கொடுத்தால் நாட்டின் போதி மரங்களும் ஞானம் அடையும்.

## சைட்டம்... (04ம் பக்கத் தொடர்)

சைட்டத்தை இல்லாமல் செய்வது என்பது, இலங்கையில் காணப்படும் புரோட்டீன் குறைபாட்டுக்கு சகல ஹோட்டல்களிலும் இறைச்சி, மீன் விற்பதை தடைசெய்து கொழும்பு 07 இலிருந்து சியபலாண்டுவ, வலஹபதான கிராமம் வரையில் வசிப்பவர்களுக்கு இறைச்சி, மீனை கூட்டுறவுக் கடைகளில் வாங்குமாறு உத்தரவு பிறப்பிப்பதை போன்றதாகும்.

சமூகப் பாதுகாப்பை வேண்டுபவர்களுக்கு கல்வி உரிமையை வழங்கும் செலவை உருவாக்குவது தனியார் முதலீட்டாளர்களின் வருவாய் வரிகளிலிருந்தாகும். பெரும்பாலான அரச பல்கலைக் கழகங்கள் தமது செலவுகளை ஈடுசெய்து கொள்வதற்கு குறிப்பிடத்தக்க அளவில் பணம் செலுத்த முடியுமான மாணவர்களை இணைத்துக்கொள்கின்றது.

வெளிநாட்டு கடன் பெற்று உணவை தயார் செய்துகொள்ளல், கடனாக பெற்ற பணத்தை வைத்து யுத்தம் செய்தல் மற்றும் கடன் பெற்று பொருளாதார ரீதியில் பெறுமதியற்ற பட்டதாரிகளை உருவாக்குவதை நிறுத்தி விட வேண்டும். அதுவே இன்றைய தினத்தின் உண்மையான தேசப்பற்றாகும்.

## காத்தான்குடி... (03 ஆம் பக்கத் தொடர்)

இந்தச் சமயத்தில், எல்ரிரிஈயிடமிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காக அரசாங்கம் சிவிலியன்களை படையில் இணைத்துக் கொள்ளத் தீர்மானித்தது. இராணுவ உபகரணங்களுடன் பரிச்சயமோ பயிற்சியோ இல்லாத இவர்களால் எல்ரிரிஈயின் முன்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை.

எல்ரிரிஈயுடைய செயற்பாடுகள் போலவே இவர்களது நடவடிக் கைகளும் முறையற்றதாக இருந்ததால் பல்வேறு முறைப்பாடுகள் இவர்கள் தொடர்பில் வரத் தொடங்கின. நலிவடைந்த மக்களுக்கு மத்தியில் இருந்து இன்னும் பல பயங்கரவாதக் குழுக்கள் முளைவிடத் துவங்கின. ஈற்றில் இந்த தமிழ்க் குழுக்களையும் முஸ்லிம் தற்காப்புக் குழுக்களையும் துடைத்தழிக்கும் நடவடிக்கையை எல்ரிரிஈ முன்னெடுத்தது.

இந்தக் குழுக்கள் தொடர்பில் தெரியவந்ததில் இருந்து இவை அவர்களது பிரதான இலக்காக மாறியதோடு, நிராயுதபாணியான தமிழ் முஸ்லிம் சிவிலியன்களும் குறிவைக்கப்பட்டனர். முடிந்தபோதெல்லாம் அவர்களைக் கொன்றனர். எந்தத் தரப்பிலுமிருந்தும், குறிப்பாக வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லிம் சமூகத்திடமிருந்து வரக் கூடிய எந்த எதிர்ப்பையும் இல்லாதொழிப்பதில் அவர்கள் உறுதியாக இருந்தனர்.

1990 ஆகஸ்ட் 03 ஆம் திகதி இரவில் தொழுகையில் ஈடுபட்டிருந்த ஐயத்துக்கிடமற்ற முஸ்லிம்களை கொல்வதற்காக அவர்கள் தெரிவு செய்தனர். இதனூடாக அவர்களுடைய அடக்குமுறைக்கு எதிராகப் பேசும் முஸ்லிம்களின் குரலை அடக்குவதற்கு அவர்கள் நாடினர். எதிர்க்குரல்கள் எழுப்புவதற்கு திராணியற்ற நிலையிலிருந்த மக்களை மிரட்டி அடிபணிய வைப்பதில் அவர்கள் வெற்றியும் கண்டனர்.

27 வருடங்களுக்கு முன்னர் நடந்த இந்தப் பள்ளிவாசல் படுகொலை என்னைப் போன்ற பலரையும் குழப்பத்தில் ஆழ்த்தியது. பெரும்பாலும் எனது மஞ்சந்தொடுவாய் கிராமத்தின் முதலாவது படித்த குடும்பம் என்னுடையது. மஞ் சந்தொடுவாய் பல்லின மக்கள் வாழும் பிரதேசம் என்பதால் முஸ்லிமல்லாத குடும்பங்களுடனும் எங்களுக்குத் தொடர்புகள் இருந்தன.

மதிப்புக்குரிய ஆசிரியரான எனது தந்தை தமிழர்களிடம் இதற்குப் பழி வாங்குவதற்கு எதிரானவராகவே இருந்தார். இதற்காக தனது உயிரையும் பொருட்படுத்தாது பல சந்தர்ப்பங்களில் உழைத்தார். உயிர்ப் பாதுகாப்புக்காக ஊரின் முக்கியஸ்தர்கள் எல்லாம் வெளியேறியபோதும் கூட தன்னுடன் இருந்த மக்களுக்காக அவர் ஊரிலேயே தங்கினார். பல்லின சமாதானச் சமூகங்களை கைவிட்டு விட அவர் விரும்பவில்லை.

எனது குழந்தைப் பருவம் மெதடிஸ்ட் தேவாலய முன்பள்ளியில் கழிந்தது. எனது ஆரம்பக் கல்வியை உள்ளூர் முஸ்லிம் பாடசாலை ஒன்றிலும், எனது உயர்தரக் கல்வியை பௌத்த, இந்து, கிறிஸ்தவ மாணவர்கள் அடங்கிய காத்தான்குடி மத்திய கல்லூரியிலும் பின்னர் புனித மைக்கேல் கல்லூரியிலும் படித்தேன். எனது உயர் கல்விக்காக மட்டக்களப்பை விட்டு வந்து சட்டக் கல்வி படிப்பதற்காக கொழும்பில் தங்கினேன். இந்த வித்தியாசமான அனுபவங்கள் எல்லா இன, மத நண்பர்களையும் கொண்ட பரந்த வட்டத்தை எனக்கு உருவாக்கித் தந்தது.

படுபாதகமான இந்தக் கொலைச் சம்பவம் நடந்த வேளையில், எனது தந்தையையும் உறவினர்களையும் மட்டும் நான் இழக்கவில்லை. பன்னெடுங் காலமாகப் பிணைத்திருந்த உறவுகளையும் நண்பர்களையும் அது இழக்கச் செய்தது. எனது தந்தையின் ஆசிரியரான அயலில் வசிக்கும் திரு. செல்வராஜா இதில் ஒரு எடுத்துக்காட்டு. முஸ்லிம்கள் என்று சொல்லிக் கொண்டவர்களின் பழிவாங்கல் நடவடிக்கையினால் அவரது சொத்துக்கள் அழிக்கப்பட்டன.

இஸ்லாத்தின் போதனைகளுக்கு மாற்றமாக அவர்கள் ஒரு அப்பாவிக்கு அநியாயமிழைத்தார்கள். இதனால் திரு. செல்வராஜாவும் குடும்பத்தினரும் பாதுகாப்பான இடம் நோக்கி நகர்ந்தார்கள். எனது தந்தை கொலை செய்யப்பட்ட பின் பல வருடங்கள் அவர் உயிர் வாழ்ந்தாலும் பாதுகாப்புக் கெடுபிடிகளால் என்னால் அவர்களை அடைய முடியவில்லை. எனது அருமை நண்பரான அவரது மகன் சேகர் அண்ணா, 1993 இல் இனந்தெரியாதோரால் கொல்லப்பட்டு அவரது சடலம் கல்லடி கடற்கரையோரத்தில் கண்டெடுக்கப்பட்டிருக்கிறது. அவர் இறந்து பல வருடங்களுக்குப் பின்னரே எனக்குத் தெரியவந்ததால் அவரது சடலத்தைக் கூட என்னால் பார்க்கக் கிடைக்கவில்லை.

எனது அயலவர்கள் எல்லோரும் எம்மை விட்டு வேறு இடங்களுக்கு நிரந்தரமாகவே போய்விட்டார்கள். அவர்களது இருப்பிடம் எங்கே என்பதும் தற்போது தெரியாது. கடந்து போன அவநம்பிக்கைகளையும் தப்பபிப்பிராயங்களையும் இதனை எழுதும் போதும் நான் நினைத்துப் பார்க்கிறேன். அந்தப் பொன்னான நாட்களை மீட்டிப் பார்ப்பதற்கு எமது வாழ்நாள் போதாதென்றே நினைக்கின்றேன்.

ஆகஸ்ட் 3 படுகொலை என்னையும் வீடிழக்கச் செய்து ஒரே இரவில் அகதியாக்கியது. எனது சட்டக் கல்வியை கைவிட வேண்டி வந்தது. அதிர்ஷ்டவசமாக உலக வங்கியின் புலமைப் பரிசில் கிடைத்து எனது முதுமாணிப் பட்டத்துக்காக அவுஸ்திரேலியா செல்லக் கிடைத்ததனால், ஏனையவர்களைப் போல அடைக்கலம் தேடாமலேயே, இங்கு குடியேறக் கிடைத்தது. அப்போது நான் SLEAS பரீட்சையில் சித்தி யடைந்திருந்ததால் தாய் நாட்டிலேயே என்னை உருவாக்கிக் கொள்ள நிறைய வாய்ப்புக்கள் இருந்தன. ஆனால் எல்ரிரிஈயினரின் கொலை அச்சுறுத்தல் என்னை நாட்டை விட்டும் வெளியேற்றியது.

இந்தப் படுகொலை எமது சனத்தொகைக் கட்டமைப்பை மாற்றியது. கொல்லப்படாமல் எஞ்சியவர்கள் இன்னும் இந்தச் சம்பவங்களை நினைத்து மயிர்க்கூச்செறிகின்றனர். மட்டக்களப்பு குடாவில் இருந்த எனது அழகிய மஞ்சந்தொடுவாய் கிராமம் பல்லின சமாதானம் எனும் அழகை இழந்து விட்டது. முதலில் எல்ரிரிஈயினராலும் பின்னர் ஏனைய பயங்கரவாதக் குழுக்களாலும் அது ஆக்கிரமிப்புக்குள்ளாகியது.

எல்ரிரியின் இரத்த வெறி இதனுடன் நிற்கவில்லை. அடுத்த வாரமே அவர்கள் ஏறாவூரில் வெறியாட்டம் ஆடினார்கள். கிராமத்தில் நுழைந்து தூக்கத்தில் இருந்த நூற்றுக்கும் மேற்பட்டவர்களைக் கொன்று குவித்தார்கள். பிறந்து ஒரு நாளே ஆன குழந்தையையும் அவர்கள் விட்டு வைக்கவில்லை. 1970 முதல் 2006 வரையான அவர்களது தாக்குதல்களை விக்கிபீடியா பதிந்து வைத்திருக்கிறது. தாக்குதல்களின் வடிவங்களைப் பார்க்கின்ற போது இந்த எல்ரிரிஈயினரிடம் மனிதத்தன்மை என்பது அணுவளவும் இருக்கவில்லை என்பது புலனாகிறது. மதத்தலங்கள், பாடசாலைகள், பொது இடங்கள் எதையுமே இவர்கள் மதிக்கவில்லை என்பது புரிகிறது.

தமிழ் விடுதலைப் போராட்டம் என்ற போர்வையில் எல்ரிரீயினர் உயிர்களைக் கொன்று குவித்ததல்லாமல் வேறெதுவும் செய்யவில்லை. தமது மக்களுக்கும் நாட்டுக்கும் சமாதானத்தை கொண்டு வருவதற்கான அவர்களது சுதந்திரத் தாகம், இனங்களுக்கு இடையே தீயை மூட்டி, எரிகிற நெருப்பில் எண்ணையை வார்த்ததை அவர்கள் உணரவில்லை. பொதுமக்கள் எல்லாம் செத்துமடியும் பொழுது மாவீரர் பிரபாகரன் தனது குடும்பத்துடன் உல்லாசமாக நீச்சல் தடாகத்தில் மிதந்து கொண்டிருப்பார். இப்படித்தான் அவர்களது விடுதலைப் போராட்டம் இருந்தது.

நாட்டின் சமாதான சகவாழ்வுக்காக இனவாதத்தை எதிர்த்துச் செயற்படுவதற்கு நாங்கள் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம். இன்றேல் நாமனைவருமே துன்பப்படவிருக்கிறோம். எமது அரசியல், சமய, சமூகத் தலைமைகள் இதனை உணர்ந்து செயற்பட மாட்டார்களா? இதனை நோக்கி நகர்வதற்கு நாங்கள் மனதாலும் உடலாலும் தயாராக இருக்கிறோமா?

இந்த நிலைமைகள் மீண்டும் மீட்டப்படக் கூடாது. நாங்கள் பல தசாப்தங்களாக அனுபவித்த பயங்கரச் சூழல் மீண்டும் ஏற்படக் கூடாதென்றும், தீய இனவாதத்திலிருந்து நாடு காப்பாற்றப்பட வேண்டும் எனவும் இறைவனைப் பிரார்த்திப்போம்.

## மாற்றம்... (07 ஆம் பக்கத் தொடர்)

அரசியலமைப்பை உருவாக்கும் அதிகாரங்கள் எவருக்கும் வழங்கப்படவில்லை. போலி நாடகமே அரங்கேற்றப்படுகிறது. ரணில் விக்ரமசிங்க தேர்தல் முறை மாற்றத்தையும் அரசியலமைப்பில் உட்புகுத்தியுள்ளார். மக்கள் இதற்கு ஆதரவு தெரிவிக்கிறார்கள். ஆனால் அரசியலமைப்பு மாற்றத்திற்கு ஆதரவில்லை. எனவே தேர்தல் முறை மாற்றம் எனும் விடயத்தை முளையிலேயே கிள்ளியெறியும் விடயத்தையே ரணில் கனகச்சிதமாக அரங்கேற்றி வருகின்றார்.

இன்று அரசியலமைப்பை மாற்றுமாறு கோரி யாரும் ஆர்ப்பாட்டம் செய்வதில்லை. யாரும் அரசியலமைப்பை வேண்டவில்லை. இது ரணிலின் நாடகம். அவரது நம்பகத்தன்மை பூச்சியத்தில் உள்ளது. தேர்தல் முறையை மாற்றுமாறே நாம் வேண்டுகிறோம். தேர்தல் முறை மாற்றப்பட வேண்டுமா? வேண்டாமா? என்பதைத் தெரிய கருத்துக் கணிப்பை நடாத்துமாறு நாம் ஜனாதிபதியை வலியுறுத்துகிறோம். இது அவரது வாக்குறுதியும் கூட. அப்போது எமக்கு மக்கள் விருப்பை தெரிந்து கொள்ளலாம்.

இன்று பாராளுமன்றத்தில் சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் 100 பேரும் உயர்தரத்தில் சித்தியடையாதவர்கள் 120 பேரும் உள்ளார்கள். இது போன்றவர்களை வைத்துக் கொண்டு நாட்டை முன்னேற்ற முடியாது. சிங்கப்பூர் [illegible] ரவையில் பேராசிரியர்களும் கலாநிதிகளுமே உள்ளார்கள். மலேசியாவிலும் அப்படித்தான். அந்நாடுகள் எம்மையும் விட பின்தங்கிய நிலையில் காணப்பட்டன. எப்பொழுதும் பின்னுக்குச் செல்ல வேண்டியதில்லை. நாம் பாடம் கற்க வேண்டும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/C: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மனக் கவலை



அறிஞர் ஒருவர் தன்னுடைய மாண வர்களுக்கு பாடம் கற்பித்துக் கொண்டி ருந்தார். அப்போது ஒரு மாணவன், 'அறிஞரே! சில நேரங்களில் மனதில் எழும் மனக்கவலையை எப்படிக் களை வது?' என்று கேட்டான். அவனைப் பார்த்த அறிஞர், 'இதற்கான பதிலை ஒரு கதையின் வாயிலாக உங்களுக்கு உணர்த்துகிறேன்' என்றபடி கதையைத் தொடர்ந்தார்.

அந்தக் காட்டில் குரங்குகள் பல கூட்டமாக இருந்தன. அவற்றில் சுட்டித் தனம் செய்யும் ஒரு குட்டிக் குரங்கும் உண்டு. ஒரு நாள் அந்தக் குட்டிக் குரங்கு, தரையில் ஊர்ந்து சென்று கொண்டிருந்த பாம்பு ஒன்றைக் கண்டது. நெளிந்து, வளைந்து சென்ற அந்தப் பாம்பைக் கண்டதும், அதற்குக் குதூகலமாக இருந் தது. அது ஒரு பெரிய நச்சுப் பாம்பு. குட்டிக் குரங்கானது, மெதுவாகப் போய் அந்தப் பாம்பை தன் கையில் பிடித்து விட்டது.

பிடிபட்ட பாம்பு, குரங்கின் கையை இறுக்கமாகச் சுற்றிக்கொண்டது. விஷப் பல்லைக் காட்டி சீறியது. குட்டிக் குரங்குக்கு கொஞ்சம் பயம் வந்து விட்டது. இதைப் பார்த்து குரங்குகள் அனைத்தும் அங்கே கூடிவிட்டன. ஆனால் எந்தக் குரங்கும் குட்டிக்கு உதவ முன்வரவில்லை.

'ஆஹ்.. இது பயங்கரமான விஷ முள்ள பாம்பு. இது கடித்தால் உடனே மரணம்தான்' என்றது ஒரு குரங்கு.

மற்றொன்றோ, 'அவன் தனது பிடி யை விட்டதுமே, பாம்பு அவனைக் கடித்துவிடும். பாம்பிடம் இருந்து அவன் தப்பிக்கவே முடியாது' என்றது. இப் படியே ஒவ்வொரு குரங்கும், குட்டியின் பீதியை அதிகரித்து விட்டு அங்கிருந்து அகன்று போய்விட்டன.

தன்னுடைய கூட்டமே, தன்னை கைவிட்டு விட்டதால், விரக்தியின் உச்சத்தில் இருந்தது குட்டிக் குரங்கு. எந்த நேரமும் கடிக்கத் தயாராக சீறிக் கொண்டிருக்கும் பாம்பைப் பார்த்து பயந்தபடியே, தன் பிடியை விட்டு விடாமல் இறுக்கமாக பிடித்துக்கொண் டது. மரண பயம் அந்தக் குரங்கை வாட்டி வதைத்தது.

'புத்தி கெட்டுப் போய் இந்தப் பாம்பை கையால் பிடித்துவிட்டேனே' என்று பெரிய குரலெழுப்பி புலம்பியது. நேரம் கடந்து கொண்டே இருந்தது. உணவும், நீரும் இல்லாமல் குரங்கின் உடல் சோர்ந்து போய்விட்டது. கிட்டத் தட்ட மயக்க நிலைக்கு சென்று கொண்டி ருந்தது அந்தக் குரங்கு. கண்கள் இருளத் தொடங்கின.

அந்த நேரம் பார்த்து ஓர் அறிஞர் அந்த வழியாக வந்தார். சொந்தங்களெல்லாம் கைவிட்ட நிலையில், இந்தத் துறவி நம்மைக் காப்பாற்றுவார் என்று அந்த குட்டிக் குரங்கு நினைத்தது. அதற்கு கொஞ்சம் நம்பிக்கையும் வந்தது.

குட்டியின் அருகில் வந்த அறிஞர், 'எவ்வளவு நேரம்தான் அந்தப் பாம்பை கையில் பிடித்துக் கொண்டே கஷ்டப் படப் போகிறாய்? அதைக் கீழே போடு' என்றார்.

குரங்கோ, 'இல்லை, நான் பாம்பை விட்டு விட்டால், அது என்னைக் கொன்றுவிடுமே' என்றது. அதற்கு அறிஞர், 'பாம்பு செத்து ரொம்ப நேர மாகிவிட்டது. அதை கீழே வீசு' என்றார். அவரது வார்த்தையைக் கேட்ட குரங்கு, பயத்துடனேயே பிடியைத் தளர்த்திப் பாம்பைக் கீழே போட்டது.

அறிஞர் சொன்னது உண்மைதான். குரங்கின் இறுகிய பிடியில் நெடுநேரம் இருந்த அந்தப் பாம்பு இறந்து போயி ருந்தது. அதைப் பார்த்த பிறகுதான், அந்தக் குரங்கு குட்டிக்கு உயிர் வந்தது. பின்னர் அந்தக் குரங்கு, அறிஞரை நன்றியுடன் பார்த்தது. அவர், 'இனிமேல் இதுபோன்ற முட்டாள் தனம் பண் ணாதே' என்றபடி தன் வழியில் நடந்து போனார்.

நம்மில் பலரும் இப்படித்தான், மனக் கவலை என்ற செத்தப் பாம்பை, கையில் பிடித்து வைத்துக் கொண்டு, விட முடி யாமல் கதறிக்கொண்டிருக்கிறோம். எனவே, கவலையை விட்டொழியுங் கள். மகிழ்ச்சி தானாகவே வந்து சேரும் என்றார் அறிஞர்.

மீள்பார்வை

தொகுப்பு: ஏ.ஸீ.எம். நதீர்

# சிலந்தி கற்பித்த பாடம்



போரில் தோல்வி அடைந்த ஓர் அரசன், தன் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள ஓடி ஒளிந்தான். அரசன் மிகவும் வீரத்துடன் போரிட்டாலும் அவனின் படை மிகவும் சிறியதாக இருந்ததினால் அவனால் வெல்ல முடியவில்லை. எதிரியிடம் மாபெரும் படை இருந்ததினால் வெற்றி பெற்றான். வெற்றி பெற்ற எதிரி அரசனை கொல்லத் திட்டமிட்டான். அதனால் அவன் காட்டிற்கு ஓடிச் சென்று அங்கு இருந்த ஒரு குகையில் ஒளிந்து கொண்டான்.

ஒருநாள் சோம்பலுடன் அரசன் குகையில் படுத்திருந்தான். அந்தக் குகையினுள் ஒரு சிலந்தி வாழ்ந்து வந்தது. அந்த சிறிய சிலந்தியின் செயல் அவன் கவனத்தைக் ஈர்த்தது. குகையின் ஒரு பகுதியினுள் ஒரு வலையைப் பின்னக் கடுமையாக முயற்சி செய்து கொண்டிருந்தது. சுவரின் மீது ஊர்ந்து செல்லும்போது வலையினில் பின்னிய நூல் அறுந்து சிலந்தி கீழே விழுந்து விட்டது.

இவ்வாறு பலமுறை நடந்தது. ஆனாலும், அது தன் முயற்சியைக் கைவிடாமல் மறுபடி மறுபடியும் முயன்றது. கடைசியில் வெற்றிகரமாக வலையைப் பின்னி முடித்தது. அரசன் "இச் சிறு சிலந்தியே பல முறை தோல்வியடைந்தும் தன் முயற்சியைக் கைவிடவில்லை. நான் ஏன் விடவேண்டும்? என யோசித்தான். நானோ அரசன். நான் மறுபடியும் முயற்சி செய்ய வேண்டும்" என்று எண்ணினான். மறுபடியும் தன் எதிரியுடன் போர் புரியத் தீர்மானித்தான். அரசன் தான் வசித்த காட்டிற்கு வெளியே சென்று தனக்கு நம்பிக்கையான ஆட்களைச் சந்தித்தான்.

தன் நாட்டில் உள்ள வீரர்களை ஒன்று சேர்த்து பலம் மிகுந்த ஒரு படையை உருவாக்கினான். தன் எதிரிகளுடன் தீவிரமாகப் போர் புரிந்தான். கடைசியில் போரில் வெற்றியும் பெற்றான். அதனால் தன் அரசைத் திரும்பப் பெற்றான். தனக்கு அறிவுரை போதித்த அந்த சிலந்தியை அவன் என்றுமே மறக்கவில்லை.

# இலகுவான தீர்வு



ஜப்பானில் ஒரு சவர்கார தொழிற்சாலை காணப்பட்டது. ஒரு நாள் அத்தொழிற்சாலையின் நுகர்வோர் முறைபாட்டு பிரிவுக்கு ஒரு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது. அம்முறைப்பாட்டாளர் தான் வாங்கிய ஒரு சவர்கார பெட்டியில் சவர்காரம் காணப்படவில்லை என்று முறைப்பாடு செய்திருந்தார். குறித்த முறைப்பாட்டை மிகுந்த அக்கறையுடன் கவனித்த நிறுவனம், குறித்த முறைப்பாடு உண்மை என கண்டறிந்தது.

அப்பிரச்சினையை தீர்ப்பதற்கு பல்வேறு முயற்சிகளை எடுத்தது. விஷேட கருவிகள் பொருத்துவதற்கும் திட்டமிட்டது. எனினும், அது மிகவும் செலவுமிக்கதாக காணப்பட்டது. அந்நிறுவனத்தில் பணியாற்றிய ஒரு சிற்றூழியர் இலகுவான ஒரு செயற்பாட்டை செய்தான். பொதி செய்யப்பட்டு, செல்லும் சவர்காரங்கள் செல்லும் பாதையின் இடையே ஒரு சிறிய காற்றாடி ஒன்றை பொருத்தினான். நிறுவனத்திற்கு பாரிய ஒரு செலவீனம் தடுக்கப்பட்டது.

# 'ஆதிலட்சுமி'

தனுஷ்கோடியிலும் தலைமன்னாரிலும்
ஆழப் புதைந்திருந்தேன்.
கரையிலும் மணலிலும்
கடலிலும் புதைந்த என்னை
முன்னோரின் கதையொன்று தடுக்கிறது;
நெருஞ்சி முள்ளாய்த் தைக்கிறது.

'ஆதிலட்சுமி' மூழ்கியபோது
அழுத குரல்கள் காதோரம் கேட்கிறது.
கண்களும் மனச்சாட்சியும் கலங்கி
இந்தக் கவிதையெங்கும் ஈரம் கசிகிறது.
கரைசேர முடியாமல் ஆழி தின்ற
'ஆதிலட்சுமியை' நினைக்கிறேன்.
கடலில் மூழ்கிய எழுபதாயிரம் பேரை
நினைக்கிறேன்; நினைந்தழுகிறேன்.
டைட்டானிக்கிற்காக அழமுடிந்த தேசத்தில்
நான் ஆதிலட்சுமிக்காக அழுகிறேன்.


திருநெல்வேலியிலும் தஞ்சாவூரிலும்
தென்னகத்து மதுரையிலுமிருந்து
மனசெல்லாம் ஆசைகளைச் சுமந்து
மன்னார்த் தீவில் வந்திறங்கி
கால்கடுக்க நடந்து வயலாடி,
காடு கடந்து மலையேறி
பாதிவழியில் பிணமாகி நின்ற
பெருந்துயரின் வலி இது.
மலையகத் தமிழரின் தீரா வலி!
மர்மங்கள் நிறைந்த
மாயாரட்டையின் அடர்வனங்களுள்
கனவுகள் பொசுங்கிய
பேரவலத்தின் பெருங்கதை!!

எப்போதும் வளைந்துதான் இருக்கிறது
மலைகளைப் போலவே
இவர்தம் வாழ்க்கையும்.
இந்த 'மலைகளைத் தவிர
இவர்களுக்கு வேறு நண்பர்கள் இல்லை.'

மலைகளை வரைய வந்தேன்.
ஒரு குழந்தையைப் போல
தடுமாறி நிற்கிறேன்.
சித்திரப் பாடத்தில் வரைந்த மலைகள் வேறு
சரித்திரப் பாடத்தில் படித்த மலைகள் வேறு.
காலனித்துவ முற்குறிப்பும்
பேரினவாதப் பிற்குறிப்பும் இல்லாமல்
இந்த மலைக்கு வரலாறு இல்லை.

வண்ணங்களால் வரைவதா?
வார்த்தைகளால் வரைவதா?
இல்லை வாழ்க்கையால்தான் வரைவதா?
ஆதிலட்சுமியின் வாரிசுகளை-
இந்த மலைத் தேசத்து மக்களை
கடலும் காடும் மணலும் மலையும்
கலந்துதான் வரைதல் வேண்டும்.
மலையை வரைந்து அதற்கு
நீதியின் மொழியால் நிறந்தீட்டுவோம்.
விடுதலை வேட்கையால் ஒளியூட்டுவோம்.

சிராஜ் மஷ்ஹூர்
27.07.2017



குறிப்புகள்:

1. ஆதிலட்சுமி - இந்தியாவிலிருந்து இலங்கைக்கு, தோட்டங்களில் உழைப்பதற்காக கூலிகளாக அழைத்து வரப்பட்ட ஏழைத் தமிழர்கள் பயணித்த கப்பலொன்றின் பெயர். அளவுக்கதிகமாக ஆட்கள் ஏற்றப்பட்டதால் இதில் பயணித்த ஆயிரத்துக்கும் அதிகமானோர் இறந்தனர் என்று சொல்லப்படுகிறது.
2. 1841- 1849 இற்கு இடைப்பட்ட காலத்தில் மட்டும் இவ்வாறு 70,000 அப்பாவித் தமிழர்கள் பலியானதாக 'கொழும்பு ஒப்சேவர்' பத்திரிகை கூறுகிறது.
3. 'மலைகளைத் தவிர இவர்களுக்கு வேறு நண்பர்கள் இல்லை'- குர்திய கவிதை.
4. மாயாரட்டை- புதிர்களும் மாயங்களும் நிறைந்த பழைய மலைநாட்டு இராசதானி.

# தீர்ப்பை எழுதி விட்டுத்தான்....

நின்றுவிட்டது கல்வீச்சு
நீளுகின்ற சொல்வீச்சு
ஷைத்தானுக்கு
ஏழு கற்கள்
எங்களைக் குறிவைத்து
எண்ணிலடங்காத கற்கள்!

அடிப்படையே இல்லாமல்
அடிப்படைவாதிகள் என்று
பொய்க் குற்றச்சாட்டு.

ஐஎஸ் தீவிரவாதிகள்
இங்கே இருக்கிறார்களாம்
இருக்கக்கூடும்
உங்களுக்குள்ளே!

தொல்பொருட்களைத்
திட்டமிட்டு அழிக்கின்றனர்
முஸ்லிம்கள்
பரணவிதாரன கண்டுபிடிக்காததை
இவர்கள்
கண்டுபிடித்து விட்டார்களோ!
நாங்கள்
தோல்வியாதிக்காரர்கள் அல்ல
தொல்பொருட்களை
அழிப்பதற்கு!

முட்டைப் பூச்செனா
நசுக்கப் பார்க்கிறீர்
தேசப்பற்றில்லாதவர்கள்
என்று
தேசத்துக்காக

தேகத்தையே தியாகஞ் செய்த
பங்கரகம்மன பாத்திமாவின்
சங்கிலித் தொடர் நாங்கள்.

மார்புக்கச்சை விற்கிறார்களாம்
மார்புப் புற்றுநோய் வர.
என்ன அபாண்டம்!
மேனி முழுதும்
புற்றுநோய் பீடித்திருக்க
மற்றவரில் தேடுவது
சித்தார்த்தரின் சித்தாந்தம்
அல்லவே!

உங்கள் காணிகளை
நாங்கள் கொள்ளையடிப்பதாக
நாகூசாமல் பிதற்றுகிறீர்கள்!
இருந்த சொச்சத்தையும்
இல்லாமலாக்கி விட்ட
நவீன அடிமைத்துவத்தின்
வரலாற்றுப் பிரகடனம்
அறிவீரோ?
வில்பத்துப் பிரகடனம்!

காடு பிடிப்பவர்கள் என்று
சீல் குத்துவதை விட்டு
வடியும் சீழுக்கு
வைத்தியம் பாருங்கள்
முதலில் இவர்கள்
தீப்பை எழுதிவிட்டுத்தான்
வழக்குத் தாக்கல் செய்ய
வருகிறார்கள்.
சமூக நீதிமன்றத்தில்
அப்பீல் பண்ண
நீங்கள் தயாரா?

கஸ்ஸாலி அஷ்ஷம்ஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு






வெளிவந்துவிட்டது





இதழ் - 51 விலை: 60/-

Published by:
Salamah Publication
• No. 1 A, Hill Castle Place, Bandaranayaka Mawatha, Colombo 12


## உலக குத்துச் சண்டை சம்பியன்ஷிப் போட்டிகள் இந்தியாவில்



மகளிருக்கான உலக குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டி (2018) மற்றும் ஆண்களுக்கான உலக குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டி (2021) என்பவற்றை இந்தியாவில் நடத்த சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனம் அனுமதியளித்துள்ளது. கடந்த இரண்டு நாட்களாக ரஷ்யாவில் நடைபெற்ற சர்வதேச குத்துச்சண்டை சம்மேளனத்தின் செயற்குழு கூட்டத்தில் குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

குறித்த குத்துச்சண்டை போட்டிகள் இந்தியாவின் தலைநகரான டெல்லியில் நடைபெறவுள்ளதுடன், இது தொடர்பான திகதி விபரங்கள் எதிர்வரும் தினங்களில் அறிவிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் முதல் முறையாக உலக குத்துச்சண்டை சம்பியன்ஷிப் போட்டிகள் நடைபெறவுள்ளன. இதற்கு முன்னர் 2006 ஆம் ஆண்டு பெண்கள் உலக குத்துச்சண்டை போட்டியும், 1990ஆம் ஆண்டு ஆடவர் குத்துச்சண்டை உலகக்கிண்ண போட்டிகள் இந்தியாவில் நடைபெற்றதுடன், 2010ஆம் ஆண்டு கொமன்வெல்த் குத்துச்சண்டை போட்டிகள் இந்தியாவில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

## தங்கப் பந்து யாருக்கு?

உதைப்பந்தாட்ட உலகில் மிகவும் பிரசித்திப்பெற்ற ஆண்டின் சிறந்த ஐரோப்பிய கால்பந்து வீரருக்கு வழங்கப்படும் தங்கப்பந்து விருதுக்கான (Ballon d'Or) வீரர்களின் பெயர் விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.



இதில் 5 முறை தங்கப்பந்து விருதை வென்றுள்ள ஆர்ஜன்டீன கால்பந்தாட்ட வீரர் லயனல் மெஸ்ஸி, 4 முறை விருது வென்றுள்ள போர்த்துகல் கால்பந்தாட்ட வீரர் கிரிஸ்டியானோ ரொனால்டோ, ஆர்ஜன்டீன வீரரான கோன்செலோ ஹிகைன் மற்றும் பிரேசில் வீரர்களா நெய்மர், டி சில்வா ஆகியோர் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

## பார்சிலோனாவிலிருந்து விலகுகிறார் நெய்மர்!
## கோடிகளை கொட்டியது பாரிஸ் செயின்ட்!



ஸ்பெயினின் பார்சிலோனா உதைப்பந்தாட்ட அணியின் விளையாடும் பிரேசில் அணியின் முன்னணி வீரர் நெய்மர், பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் (Paris St Germain) அணியில் விளையாடுவது உறுதியாகியுள்ளது.

பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் அணி நெய்மரை ஒப்பந்தம் செய்துள்ள விலை அனைவரையும் ஆச்சரியத்துக்குள்ளாக்கியுள்ளது. சுமார் 4500 கோடி அள்ளிக்கொடுத்து நெய்மரை வாங்கியுள்ளது பாரிஸ் செயின்ட் ஜெர்மைன் கழகம்.

உதைப்பந்தாட்ட வரலாற்றில் வீரரொருவர் இத்தனைக் கோடிகளுக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டமை இதுவே முதல் தடவையாகும். இவ்வருடத்தின் ஆரம்பத்தில் பிரான்ஸ் வீரர் பௌல் போக்பாவை மென்செஸ்டர் அணி 89.3 பிரிட்டிஸ்ட் பவுண்டுக்கு (இலங்கை ரூபாவில் சுமார் 1800 கோடி) ஒப்பந்தம் செய்தமையே அதிக தொகையாக இருந்தது.

பார்சிலோனா கழக அணியின் முன்னணி வீரராக திகழ்ந்து வருபவர் நெய்மர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பிரபல பாடசாலை ரக்பி வீரர் போட்டி:
### அகீட் காதர் முதலிடம்



சண்டே டைம்ஸ் பத்திரிகை மற்றும் சிங்கர் நிறுவனம் இணைந்து ஏற்பாடு செய்யும் 'சிங்கர்- சண்டே டைம்ஸ்' வருடத்தின் பிரபல பாடசாலை ரக்பி வீரர் தெரிவுப் போட்டியில் கல்கிஸ்ஸை சென் தோமஸ் கல்லூரி மாணவன் அகீட் காதர் 9053 வாக்குகளை பெற்று முதலிடத்தில் உள்ளார். வெஸ்லி கல்லூரி மாணவன் அவிஷ்க லீ 4031 வாக்குகளை பெற்று இரண்டாம் இடத்தில் உள்ளார். 14 ஆவது வாரத்தில் அகீட் காதர் 4376 வாக்குகளை பெற்றிருக்கும் போது அவிஷ்க லீ 316 வாக்குகளை மாத்திரமே பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## விளையாட்டில் முன்னேற வசதியின்மையால் ஆசிரியராகிறேன்

### ஆசிய பாடசாலை உதைபந்தாட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள றிப்கான் முஹம்மட்



விளையாட்டில் முன்னேறும் வசதியின்மையால் சுகாதாரப் பாட ஆசிரியாகும் எண்ணத்தில் இருப்பதாக ஈரானில் நடைபெறவுள்ள 45 ஆவது ஆசிய பாடசாலை சம்பியன்ஷிப் உதைபந்தாட்ட போட்டியில் 18 வயதின் கீழ் பங்குபற்றுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள கிண்ணியா அல் அக்ஸா கல்லூரி மாணவன் றிப்கான் முஹம்மத் மீள்பார்வை பத்திரிகைக்கு தெரிவித்தார்.

பாடசாலை, மாவட்ட, மாகாண மற்றும் அகில இலங்கை ரீதியாக நடைபெற்ற பல போட்டிகளில் திறமையை வெளிப்படுத்திய றிப்கான், இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் 150 பேர்களுக்கு மத்தியில் நடத்திய தெரிவுப் போட்டியில் இறுதி 20 பேர் கொண்ட அணிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன் மூலமே இவர் ஈரான் செல்வதற்கான வாய்ப்பைப் பெற்றுள்ளார். கடந்த வருடம் தென்கொரியாவில் 44 ஆவது ஆசிய பாடசாலைகள் சம்பியன்ஷிப் உதைபந்தாட்ட போட்டியிலும் பங்கு பற்றி தனது அணிக்கு 5 ஆம் இடத்தை பெற்றுக்கொடுத்தார்.

முன்கள வீரராக சிறப்பான முறையில் திறமைகளை வெளிப்படுத்தி வரும் றிப்கான் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 6 ஆம் திகதி ஈரானில் நடைபெறவுள்ள ஆசிய பாடசாலை உதைபந்தாட்ட போட்டியில் பங்குபற்றவுள்ளார். எனினும் தனது தந்தை சுகவீன முற்றிருக்கும் நிலையில் மிகுந்த கஷ்டங்களுக்கு மத்தியில் படிப்பைத் தொடர்ந்து வரும் இவர் தனது வெளிநாட்டு பயணத்தை முன்னெடுப்பதிலும் காற்பந்தில் சோபிப்பதிலும் நிதிப்பற்றாக் குறையை எதிர்கொண்டிருப்பதாக சுட்டிக்காட்டினார். றிப்கானுக்கு உரிய அனுசரணையை வழங்கும் பட்சத்தில் முஸ்லிம் சமூகத்திலிருந்து சிறந்ததொரு காற்பந்து வீரரை தேசிய மட்டத்திற்கு அனுப்ப முடியும்.

முஸ்லிம் சமூகத்தின் தனவந்தர்களே இது உங்களின் கவனத்திற்கு!


## எமது புதிய வெளியீடுகள்






2 ஆம் பதிப்பு
விலை 250.00

வாசகர்களின் அபிமானம் பெற்ற எமது இரண்டு வெளியீடுகள் அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க மீள்பிரசுரம் செய்யப்பட்டு தற்போது விற்பனைக்கு வந்திருக்கிறது.

FOCUS MEDIA (Pvt) Ltd
49, Sri Mahinda Dharma Mawatha
(Perth Road), Colombo-09.
Tel: 0112 691258





3 ஆம் பதிப்பு
விலை 70.00


## கிழக்கு மாகாண தமிழ் இலக்கிய விழா கல்முனையில் கோலாகலம்



கிழக்கு மாகாண அர்ச தமிழ் இலக்கிய விழா கல்முனையில் மிக கோலாகலமாக நடைபெற்றது. மருதமுனை அல்- மனார் மத்திய கல்லூரியில் இருந்து கல்முனை நகர் ஊடாக தமிழ் -முஸ்லிம் மக்களின் கலை கலாசாரத்தை பிரதிபலிக்கும் வகையில் பண்பாட்டுப் பவனி நடைபெற்றதுடன் நிகழ்வுகள் நடைபெற்ற கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் தமிழ் வாழ்த்துப் பாடலுடன் தமிழ் இலக்கிய விழாவின் முதலாம் நாள் நிகழ்வுகள் ஆரம்பமாகின. தொடர்ந்து 01ஆம், 02 ஆம் திகதிகளில் பல்வேறு கலை, கலாசார நிகழ்வுகளுடன் கிழக்கு மாகாண தமிழ் இலக்கியவிழா சிறப்பாக நடைபெற்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.